

பண்டைய நாட்களில் ஜனங்கள் தேய்த்துக் குளிக்க சீயக்காய் போன்ற இயற்கை தாவரங்களை உபயோகித்து வந்தனர். சீயக்காயை நன்றாகப் பொடித்து அரைத்துக் குழைத்து தேய்த்து வந்தனர். இது ஹமாம் சோப்பின் களைப்பைப் போக்கும் குளிர் நுரை போன்று உடம்பிற்கு புதிய சக்தி குளிர்ச்சி யளிப்பதில்லை. பெயர்ராசி வந்தபோதிலும் ஹமாமின் நறுமணங்களின் குணமோ சுத்தம் செய்யும் தன்மையோ இதற்குக் கிடையாது. இந்தப் பழைய முறைகளின் சிறந்த அம்சங்களனைத்தும் புத்தம் புதிய கூடுதல் சௌகரியமும் சுகமும் அளிக்கும் விதத்தில் இனிய நறுமணங்களும் சேர்ப்பதோ ஹமாமில் நன்கு பொருந்தி அமைந்திருக்கின்றன.

ஹமாம்



உங்கள் ஸ்நானத்திற்குகந்த பெரிய சோப்பு

டாம்கோ விற்பனை இலாகா :
19-A. வாணியர் தெரு, த. பெ. நெ. 31, மதராஸ்.


அழகை
மேனியை
அடுத்துங்கள
அருணா
அணியுங்கள் ஆடையை
மேனியை அடுத்த
"அருணா" ஆடை
உள்ளத்தை உற்சாகப்
படுத்தும் உழைப்பிற்
குகந்த நிறைவேற்றம்
அருணா மில்ஸ் லி, ஆமதாபாத்

N. S. K. நாடக சபையார்

சென்னை ஒற்றைவாடை தியேட்டரில்

19 - 5 - 45 முதல்

இன்பகரமான **7** - வது வாரம்

ஸ்ரீ கிருஷ்ண லீலா

நாடகம்

இதுவரை கண்டிராத பல அபூர்வக் காட்சிகளுடன்

★

★ ஸ்டார் ஆட்டம்

★ கோகுலாஷ்டமி கொண்டாட்டம்

★ ராஜக்ரீடை இசை ஆட்டம்

★ பட்டுப் பூச்சி இறகாட்டம்

முதலிய நடனங்கள் காணத்தக்கது.

பிரதி ஞாயிறு, புதன், வெள்ளி மாலை 6-30 மணி

செவ்வாய், வியாழன், சனி - இரவு 9-30 மணி

டிக்கட் : 3-6-0, 2-0-0, 1-4-0, 0-11-0, 0-5-6.

கவியின் கனவு - கவிஞரின் நிதிக்கு!

கவிஞர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை அவர்களின் நிதிக்காக

23—5—45 புதன்கிழமை மாலை 7-மணிக்கு

நாகை ராபின்ஸன் ஹாலில்



கவியின் கனவு

(நாடகம்)

★

நாமக்கல் கவிஞரின் தலைமையில் நடைபெறுகிறது.

23-5-45 இரவு 11-மணிக்கு "விதி" நாடகம்
24-5-45 மாலை 7-மணிக்கு "கவியின் கனவு" நாடகம்
இரவு 11-மணிக்கு "ராமபக்தி" பட்டாபிஷேகம்

எமது அடுத்த முகாம் : கோயமுத்தூர்

ஸ்ரீ சக்தி நாடக சபை

T. K. கிருஷ்ணசாமி - மானேஜிங் புரோப்ரைட்டர் & டைரக்டர்.



"இசை ஒளி பட்டம்"

சங்கீத வித்வான்

கும்பகோணம் A. D. சுல்தான்

★

தலை சிறந்து விளங்கி வரும் கர்நாடக சங்கீத வித்வான்களில் ஒருவரான கும்பகோணம் A. D. சுல்தான் அவர்கள் 29-4-45ல் ஈரோட்டில் நடந்த எழுத்தாளர் மகாநாட்டில் பல ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கிடையில் கச்சேரி செய்த பொழுது பெரியாருக்கு "இசை ஒளி" என்ற பட்டம் வழங்கப்பட்டது.

★

23-5-45 நாகூர் தர்கா ஷரீப்
27-5-45 திருநெல்வேலி தியேட்டர்
1-6-45 இளையான்குடி
ஜூன் மாதம் பெங்களூர் சபா

கல்கி
பொருளடக்கம்

மலர் 4 }
இதழ் 41 }

1945 மே 20

{ பார்த்திப
{ வைகாசி 7

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் வரும் பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.



கோயில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம் என்னும் பழமொழியை எல்லோருக்கும் எடுத்துக் காட்டுவதைப் போல் சேலம் ஜில்லா ஓமலூர் தாலுக்கா தாரமங்கலத்தில் உள்ள ஸ்ரீ கைலாசநாதர் கோவிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கைலாசநாதர் தாம் வசிக்கும் கோவிலுக்குள்ளேயே ஒரு குட்டிக் கோவில் அமைத்துக்கொண்டு இருக்கிறார்.

இந்த இதழ் அட்டையில் வெளியாகியிருக்கும் ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில் மேற்படி கைலாசநாதர் கோவிலின் முதல் பிரகாரத்தில் அமைந்திருக்கிறது. இந்தக் கோவிலின் அதிசயம் என்னவென்றால், மேடையின்மேல் காணப்படும் கோயில் முழுவதும் ஏழு பெரிய கற்களால் இணைக்கப்பட்டிருப்பதாகும். மேலே கவிந்திருக்கும் கோபுரம் ஒரே கல். நான்கு சுவர் இணைப்பும் ஆறு கற்களால் ஆனது.

கைலாசநாதர் கோவிலில் பல அரிய சிற்பங்களைச் செய்த சிற்பியின் மகன் மேற்படி கோவில் பிரகாரத்தில் இதைக் கட்டியதாகச் சொல்லுகிறார்கள். தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி ஒரு அடியாவது பாய வேண்டுமல்லவா?

போட்டோ : "சாந்த்-மணி"

கல்கி

மலர் 4 } தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் { இதழ் 41

என்ன சேதி?

உயிரோடிருக்கிறேன்!

"நான் செத்துப் போய்விட்டேன் என்று யார் சொன்னது? இதோ இன்னும் உயிரோடுதான் இருக்கிறேன்!" என்ற கோஷம் நாம் எதிர்பாராத சமயங்களில் திடீரென்று கிளம்பி நம்மைத் தூக்கிவாரிப் போடுகிறது. கண்ணைத் துடைத்துக்கொண்டு யார் என்பதாக உற்றுப் பார்த்தால், ஏன், நமது பழைய பெயர் போன—பலமுறை குழிதோண்டிப் புதைக்கப் பட்ட—ஜஸ்டிஸ் கட்சிதான்! சென்ற வருஷத்திலே சேலத்திலே மேற்படி கட்சியின் மகாநாடு கூடி, தன்னுடைய பெயரையே மாற்றிக் கொண்டதாகக் கேள்விப்பட்டோம். அதைப் பற்றி வாதப் பிரதிவாதங்கள் நடந்தன. வாதப் பிரதி வாதங்களுக்குக் காரணபூதரா யிருந்த ஸ்ரீ ராமசாமிப் பெரியாரை ஒரு விதமாக மூலையில் ஒதுக்கி வைத்து விட்டு, சென்னையில் சென்ற வாரத்தில் ஜஸ்டிஸ் கட்சி மகாநாடு நடந்தது.


சபாஷ்! ஸர் ஷண்முகம்

மேற்படி புத்துயிர் கொண்ட ஜஸ்டிஸ் கட்சி மகாநாட்டுக்கு ஸர் ஆர். கே. ஷண்முகம் அவர்கள் தலைமை வகித்தார். அக்கிராசன உபந்நியாசம் ஒன்றும் செய்தார். அதில் ஒரு பகுதியைப் படித்தபோது, "சபாஷ் ஸர் ஷண்முகம்!" என்று நமக்குச் சொல்லத் தோன்றியது. சுயமரியாதைக் கட்சியின் கொள்கையைக் குறித்து அவர் கூறிய அபிப்பிராயத்தைத்தான் குறிப்பிடுகிறோம். "கடவுள் இல்லை யென்று சுயமரியாதைக் கட்சியார் சொல்வது சுத்தத் தப்பு! கடவுள் இருக்கத்தான் இருக்கிறார்!" என்று அழுத்தமாய்க் கூறினார் ஸர் ஷண்முகம். ஏதோ அந்த மட்டும் கடவுள் கொடுத்து வைத்தவர் தான்! ஸர் ஷண்முகத்தைப் போன்ற அறிவாளியின் ஆதரவு கடவுளுக்குக் கிடைத்ததல்லவா? இனிமேல் யார்தான் "கடவுள் இல்லை" என்று வாதித்தாலும், கடவுள் அதற்காகப் பயப்பட வேண்டிய தில்லை. ஸர் ஷண்முகத்தின் பேச்சுத் திறமையிலும் விவாதத் திறமையிலும் நம்பிக்கையை வைத்துவிட்டுக் கடவுள் நிம்மதியா யிருக்கலாம். கொஞ்ச காலமாக பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்குக் கிடைக்காதிருக்கும் ஸர் ஷண்முகத்தின் வாக்குத் தொண்டு இப்போது கடவுளுக்குக் கிடைத்து விட்டதே! இனிமேல் என்ன குறை?

"ஆரியன் கண்டாய்!"

கடவுளுக்கு இன்னொரு பெரிய உத்தாசையும் ஸர் ஷண்முகம் செய்து விட்டார். "கடவுள் உண்டு!" என்று ஒப்புக்கொண்டால், அவர் "என்ன கடவுள்? ஆரியக் கடவுளா? தமிழ்க் கடவுளா?" என்ற கேள்வி ஒன்றும் கூட எழுகிறது. தமிழ் நாட்டிலேதான் சொல்கிறேன். இது விஷயத்திலும் ஸர் ஷண்முகம் தீர்ப்புச் சொல்லிவிட்டார். "ஆரியக் கடவுளாயு மிருக்கலாம்; தமிழ்க் கடவுளாயு மிருக்கலாம்! எப்படி யிருந்தால் என்ன? கடவுள் ஆரியர் என்பதற்காக நான் அவரைத் தள்ளி விடப் போவதில்லை. என்னுடைய மதத்தில் ஆரியம் கலந்துவிட்டது என்பதற்காக மதத்தையும் நான் தள்ளிவிடப் போவதுமில்லை" என்றார். ரொம்ப சரியான விஷயம்! மூவாயிரம் வருஷத்துக்கு மேலாகக் கலந்துபோயிருக்கும் இரண்டு பண்பாடுகளில் ஒன்றைத் தனியே பிரித்துத் தள்ளுவதென்பது முடியாத காரியமே. அப்படி ஆரியத்தை அடியோடு தள்ளுவது என்று ஏற் பட்டால் நிலைமை மிகவும் நெருக்கடி

நிகழ்ச்சிச் சித்திரம்



-உம்மன்


"இந்தியாவுக்கு வாருங்கள். என்னை ஏன் தண்டிக்கக் கூடாது என்பதற்குச் சாட்சியம் கூறுகிறேன்."
இந்தியா
← ஹிட்லரின் ஆவி
"நாஸிஸத்திற்குப் பதிலாகப் போலீஸ் ஆட்சியை ஏற்படுத்துவதாயிருக்கும் பட்சத்தில் ஹிட்லரைத் தண்டித்ததால் மட்டும் பிரயோஜனமில்லை," என்று பிரதம மந்திரி சர்ச்சில் கூறினார்.
"பெரிய பெரிய முதலாளிகளும், வியாபாரிகளும் பேச்சளவிலும் எழுத்தளவிலும் சர்க்காரை எதிர்த்து விட்டுக் காரியாம்சத்தில் சர்க்கார் தாசர்களாகவே இருக்கின்றனர்" என்று காந்திஜி கூறுகிறார்.
முதலாளி
ஏகாதிபத்தியம்
வங்காளத்தில் உள்ள கொள்ளை லாப முதலாளிகள் பஞ்சத்தில் மாண்ட ஒவ்வொரு உயிருக்கும் 1000 ரூபாய் வீதம் லாபம் அடைந்திருப்பதாக வங்கப் பஞ்ச விசாரணைக் கமிட்டி கூறுகிறது.
கள்ள மார்க்கெட் முதலாளி
ரூபாய் ஆயிரம்
ரூபாய் ஆயிரம்
ரூபாய் ஆயிரம்
இங்கே உயிர்கள் மலிவாக விற்கப்படும்.

யாகப் போய்விடும். "ராமசாமி" "ஷண்முகம்" முதலிய பெயர்களைக் கூடத் தள்ளிவிட வேண்டியதாயிருக்கும். உண்மையில் அப்பர் சுவாமிகள் இறைவனைக் குறித்து, "ஆரியன் கண்டாய்! தமிழன் கண்டாய்!" என்று சொன்னாரே, அது தமிழ்நாட்டில் தற்சமயம் வசிக்கும் எல்லாருக்கும் பொருந்தும்; ஸர் ஷண்முகத்துக்கும் பொருந்தும்; மகாகனம் ஸ்ரீனிவாச சாஸ்திரிக்கும் பொருந்தும்; நீதிபதி ஸர் எஸ். வரதாச்சாரிக்கும் பொருந்தும்.

சஞ்சித கர்மம்

கடவுள் பிரச்னையைப் பற்றியும், ஆரியன் தமிழன் சண்டையைப் பற்றியும் இவ்வளவு தெளிவான கொள்கையை வெளியிட்ட ஸர் ஷண்முகம், முழுதும் தெளிந்த மனோநிலையை யடைவதற்கு இன்னும் ஒருபடி முன்னேற வேண்டியதாயிருக்கிறது. "பிராமணரல்லாதாருக்குத் தனித்தொகுதி வேண்டும்" என்று 1945-ம் வருஷத்தில் ஸர் ஷண்முகம் கேட்கிறார் என்பது, ஏதோ அவருடைய சஞ்சித கர்மத்தின் பலன் என்றே சொல்ல வேண்டியிருக்கிறது. சென்னை மாகாணத்தில் 100-க்கு 90 பேராகிய பிராமணரல்லாதாருக்குத் தனித்தொகுதி வேண்டும் என்பது சிரிக்கத்தக்க விஷயம். அதைக் காட்டிலும் "ஜனத்தொகையில் 100-க்கு 7 பேராகிய பிராமணர்களுக்குப் பிரதிநிதித்வமே யில்லாமல் போய் விடலாம்; அந்த விபத்தைத் தடுப்பதற்காகப் பிராமணர்களுக்குத் தனித்தொகுதி கொடுக்க வேண்டும்!" என்று சொன்னால், பெருந்தன்மையோடும் நியாய புத்தியோடும் சொன்னதாகத் தொனிக்கும்! எப்படியிருந்தாலும், புத்துயிர் பெற்ற ஜஸ்டிஸ் கட்சி இந்தப் பழைய பிராரப்த சாதிப் பிரிவுக் கொள்கையை எதற்காகத் தூக்கிச் சுமக்க வேண்டும் என்று தெரியவில்லை. அறிவாளிகளான ஸர் பி. டி. ராஜன், ஸர் ஷண்முகம் இவர்களுடைய தலைமையில் ஜஸ்டிஸ் கட்சியானது பழைய சஞ்சித கர்மங்களுக்குத் தலை முழுகிவிட்டு, அரசியல் கொள்கையையும் திட்டத்தையும் ஆதாரமாகக்கொண்டால், வருங்காலத்தில் அந்தக் கட்சிக்கு வாழ்வு உண்டு; இல்லாவிட்டால், நிச்சயமாக இல்லை. குழி தோண்டிப் புதைத்தது புதைத்ததாகவே முடியும்.

திருச்சி வாசிகளுக்கு

எட்டயபுரத்தில் ஜுலை 3உ நடக்கப்போகும் பாரதி ஞாபகார்த்த நிலைய அஸ்திவார விழாவை நடத்தி வைக்கும் பாக்கியம் திருச்சி வாசிகளுக்கு உரியதாய் ஏற்பட்டிருக்கிறது! எப்படி என்றால், சொல்கிறேன்:

அஸ்திவார விழா நடத்தவேண்டும் என்று எட்டயபுரம் நண்பர்கள் வற்புறுத்தி அப்படியே முடிவான பிறகு, "செலவுக்கு என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டேன். அவர்கள் அதே கேள்வியை என்னைப் பார்த்துக் கேட்டார்கள். "ஞாபகார்த்த நிதியிலிருந்து விழாவுக்குச் செலவழிக்க முடியாது!" என்று கண்டிப்பாய்ச் சொல்லவும், அவர்கள், "ஏற்கெனவே இங்கு பாரதி நிதிக்குப் பணம் வசூலித்து அனுப்பிவிட்டோம். எங்கள் மன்றத்துக்கோ கடன் இருக்கிறது. என்ன செய்வது?" என்றார்கள். "நீங்கள் கவலைப்பட வேண்டாம்! பாரதி ஞாபகார்த்த அஸ்திவார விழாவை நடத்தும் பாக்கியம் கொடுத்து வைத்தவர்களுக்குக் கிடைக்கும்!" என்று சொல்லி விட்டுத் திரும்பி வந்தேன்.

சில நாளைக் கெல்லாம் திருச்சியில் நாடகம் நடத்தும் டி. கே. எஸ். சகோதரர்களிடம் ஸ்ரீ ஷண்முகம் அவர்கள் வந்து, "எட்டயபுரம் பாரதி இலக்கிய மன்றத்துக்காக ஒருநாள் நாடக வசூலைக் கொடுக்கப் போகிறோம். நீங்கள் வர வேண்டும்!" என்று அழைத்தார்கள். நாடகம் "ஔவையார்" நாடகம் என்று தெரிந்ததும், "பழம் நழுவிப் பாலில் விழுந்தது" என்று நினைத்துக் கொண்டேன். ஏனெனில், ஈரோட்டில் டி. கே. எஸ். சகோதரர்கள் "ஔவையார் நாடகம்" புகழுடன் நடத்துகிறார்கள் என்று கேள்விப்பட்டிருந்து, "இதென்ன கூத்து? தொண்டு கிழவியைக் கதாநாயகியாக வைத்துக்கொண்டு ஒரு நாடகமாமே! அது எப்படித்தான் இருக்கும்?" என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தேன். நாடகத்தை நேரில் பார்த்துத் தெரிந்து கொள்ள ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது; அஸ்திவாரத் திருவிழாவுக்குப் பணமும் கிடைத்தது!

ஆகவே, நாளது 19உ சனிக்கிழமை இரவு நடக்கும் "ஔவையார்" நாடகத்துக்கு விஜயம் செய்யும் திருச்சி வாசிகள் எட்டயபுரத்து பாரதி ஞாபக நிலையத்தின் அஸ்திவார விழாவை நடத்தி வைக்கும் பேறு பெறுகிறார்கள், இல்லையா?

வெற்றிப் படையெடுப்பு!

திடீரென்று நமக்கு எதிரே ஒரே புகைப் படலமாகத் தெரிந்ததும் ஒரு கணம் திடுக்கிட்டுப் போனோம். யுத்தத்தில் படை யெடுப்பு முயற்சிகளை மறைப்பதற்காக வல்லவா எதிரே புகைப் படலத் திரை போடுவது வழக்கம்! யுத்தந்தான் முடிந்து விட்டதே! இப்போது யார் நம்மீது படை யெடுத்து வந்திருக்கிறார்கள்?

உற்றுப் பார்த்தபோது புகைப் படலம் சிறிது சிறிதாக விலக, அதன் பின்னே சாக்ஷாத் பிரதம மந்திரி சர்ச்சில் நமக்கெதிரே வாயில் சுருட்டுடன் உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

“வாருங்கோ! வாருங்கோ! ரொம்ப நாளாச்சு பார்த்து! அலுவல் அதிகம் போலிருக்கு!” என்றோம்.

“அதை ஏன் கேட்கிறீர், போம்! அலுவலாவது அலுவல்! ஓய்ச்சல் ஒழிவு இல்லை!” என்று சொல்லி விட்டு மறுபடியும் சுருட்டை வாயில் வைத்துக் கொண்டு, வலது கையைத் தூக்கி இரண்டு விரலை ‘V’ வடிவமாய்க் காட்டினார்.

சட்டென்று நமக்கும் அன்றைக்குத் திங்கட்கிழமை — சென்னையில் வெற்றி தினம் — என்பது ஞாபகம் வரவே, நாமும் வலது கையைத் தூக்கி இரண்டு விரலைக் காட்டி விட்டு இடது கையைத் தூக்கி ஒரு விரலைக் காட்டினோம்!

மறுபடியும் சர்ச்சில் வாயிலிருந்து சுருட்டை எடுக்க வேண்டியதாயிற்று.

“அது என்ன ஒரு விரலைக் காட்டுகிறீர்?” என்று ஒற்றைப் புருவத்தை நெறித்துக் கொண்டு சற்றுக் கோபமாகவே கேட்டார்.

“இரண்டு தீர்ந்து விட்டது; இன்னும் ஒன்று பாக்கி இருக்கிறதே!” என்றோம்.

“ஓஹோ! ஜப்பானைச் சொல்கிறீரா?”

“ஆமாம்; மகா புத்திசாலியான தங்களுக்கு அப்படி ஒரு கோடி காட்டினால் போதாதா?”

“உண்மை; ஜப்பான் பாக்கி இருக்கத்தான் செய்கிறது. ஜப்பானையும் ‘குளோஸ்’ பண்ணுகிற வரையில் நாம் அதிகமாகக் கொண்டாட்டத்தில் ஆழ்ந்து விடக் கூடாது; தூங்கிப் போய் விடவுங் கூடாது” என்று கூறியவர் திடீரென்று கண்ணீர் பெருக்கிக்கொண்டு விம்மி யழத் தொடங்கினார்.

அவரைச் சமாதானம் செய்ய முயன்றோம்.

“அதெல்லாம் முடியாது: முடியவே முடியாது! நான் சமாதானம் அடைய மாட்டேன். ஆஹா!......... எனது அருமை நண்பர்......!” என்று விம்மியதும், நமக்கு விஷயம் என்னவென்று விளங்கி விட்டது.

“ஆ! போன தடவை தாங்கள் இங்கு வந்திருந்தபோது கனம் ரூஸ்வெல்ட்டும் கூட இருந்தார்! ... அதை எண்ணித்தானே வருத்தப்படுகிறீர்கள்? வேண்டாம்! ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ? இது தெரியாமல் அமெரிக்கர்கள் தங்கள் பேரில் புகார் சொன்னதை நினைத்தால்...?”

சர்ச்சில் உடனே விம்மலையும் அழுகையையும் நிறுத்தி விட்டு, “எந்தப் புகாரைச் சொல்கிறீர்?” என்றார்.

“ரூஸ்வெல்ட் மரணத்துக்குத் துக்கம் கேட்பதற்காக நீங்கள் அமெரிக்காவுக்கு வரவில்லை யென்று புகார் சொன்னார்களே? அதைத்தான்! உங்களுக்கு நன்றியில்லை என்று கூடச் சொன்னார்களே?”

“அவர்களுக்கென்ன சொல்வதற்கு? நன்றியாம் நன்றி! நான் எதற்காக யாருக்கு நன்றி செலுத்த வேண்டும்? எனக்கல்லவா எல்லாரும் நன்றி செலுத்த வேண்டும்? உலகமே எனக்கு நன்றி செலுத்த வேண்டாமா? — நான் மட்டும் இல்லாவிட்டால், இந்த உலகம் இதற்குள் என்ன கதி அடைந்திருக்கும்? நீரே சொல்லும்!” என்றார்.

“பாவம்! ரூஸ்வெல்ட்டும் இப்படித்தான் நினைத்திருப்பார்!” என்று நாம் மனதிற்குள் நினைத்துக்கொண்டு,

“சர்ச்சில், ஸார்! விட்டுத் தள்ளுங்கள் உலகத்தை! சுத்த அசட்டு உலகம்! உலகத்தின் விஷயம் எப்படி யானாலும்,

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் உங்களுக்கு ரொம்பவும் கடமைப் பட்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை!'' என்றேன்.

''ஆமாம்; அதற்கென்ன சந்தேகம்! நேற்று என்னுடைய ரேடியோப் பேச்சைக் கேட்டீர் அல்லவா?''

''ஆமாம், ஆமாம், கேட்டேன். அதனால்தான் சொல்கிறேன். முன் எந்தக் காலத்திலும் இருந்ததைக் காட்டிலும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் இன்று அதிக ஒற்றுமையும் சக்தியும் வாய்ந்ததாயிருக்கிறது என்று சொன்னீர்கள். ரொம்ப சரி! இதற்குக் காரணம் நீங்கள்தானே? ஆகையால்தான், பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் தங்களுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்று சொன்னேன்.''

''சரியாகச் சொன்னீர்! ஐந்து வருஷத்திற்கு முன்பு என் அருமை பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் எவ்வளவு கேவலமான ஸ்திதியில் இருந்தது! எப்பேர்ப்பட்ட ஆபத்து வந்தது! எல்லாம் சூரியனைக் கண்ட பனி போல......''

''... ஹிட்லர் ருஷ்யாவின் மீது படையெடுத்ததும் விலகிப் போய் விட்டது அல்லவா? ஹிட்லருடைய படு முட்டாள்தனத்தைப் பற்றியும் தங்களுடைய ரேடியோப் பிரசங்கத்தில் சொல்லியிருக்கிறீர்களே?''

''உண்மைதான். ஆனால், இன்றைய வெற்றிக்கு ஹிட்லருடைய முட்டாள்தனம் மட்டும் காரணம் இல்லை......''

''பின் இன்னும் யாருடைய முட்டாள்தனம் காரணம்?''

''இல்லை; நமது வீர தளபதிகளான மாண்ட்கோமரி, அலெக்ஸாண்டர் இவர்களுடைய சாமர்த்தியத்தைச் சொல்ல வந்தேன்.''

''ஆம், ஆம்! அவர்களுடைய புகழ் உலகமெல்லாம் பரவியிருக்கிறது — இருக்கட்டும். போலீஸ் ஆட்சியின் தீங்கைப் பற்றி ஏதோ பிரஸ்தாபித்தீர்களே, அது என்ன? ருஷ்யாவைத்தானே குறிப்பிட்டீர்கள்?''

''நீர் சொல்லுவதை நான் ஆமோதிக்கவும் இல்லை; மறுக்கவும் இல்லை'' என்று சாதுரியமாகப் பதில் அளித்தார் சர்ச்சில்.

''இது என்ன, இது! மனதில் உள்ளதை ஏன் பகிரங்கமாகச் சொல்லக் கூடாது? அப்பேர்ப்பட்ட மகிமை வாய்ந்த பல பராக்கிரமம் பொருந்திய பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பிரதம மந்திரி எதற்காக மூடி மறைக்க வேண்டும்? ஸ்டாலின் விஷயத்தில் இவ்வளவு பயம் ஏன்?'' என்று நான் சொன்னதும், சர்ச்சில் துரை மேஜையை ஓங்கி ஒரு குத்துக் குத்தி, ''யாருக்குப் பயம்?'' என்று கேட்டார்.

நாமும் நமது முகத்தை ஒரு கேள்விக் குறியைப் போல வைத்துக் கொண்டு சர்ச்சிலைப் பார்த்தோம்.

''எனக்கா பயம்? அந்த டிவாலராவை என்ன போடு போட்டேன், கேட்டீரல்லவா? நான் பயப்படுகிறவனாயிருந்தால், அந்தப் போடு போடுவேனா?'' என்று கேட்டார்.

''ஆமாம்; சக்கைப் போடுதான் போட்டீர்கள். ஆனால் டிவாலராவும் பொல்லாத மனிதர்; அவருக்கு நாக்கிலே விஷம். அவரும் போடு போடென்று திருப்பிப் போட்டாலும் போடுவாரே! அதற்கு ஏன் இடம் வைக்கவேண்டும்? ...... ஒரு வழியாக அயர்லாந்தைத் தீர்த்துக் கட்டி ......'' என்றேன்.

''சேச்சே! அப்படியெல்லாம் செய்யும் உத்தேசம் இல்லை. டிவாலரா ஒரு மனுஷன், என்ன பைத்தியக்காரத்தனம் செய்தால்தான் என்ன? ஐரிஷ்காரர்கள் எத்தனையோ பேர் இந்த யுத்தத்தில் ஈடுபட்டு உயிரை விட்டு மெடல்களும் வாங்கியிருக்கிறார்கள். அதை நினைத்து அயர்லாந்தின் மீது எங்கள் இருதயத்திலுள்ள பகைமையைப் போக்கிக் கொண்டிருக்கிறோம்'' என்றார் சர்ச்சில்.

''எங்கள் தேசிய மகாகவி பாரதியார் கூட,

'பகைவனுக் கருள்வாய்!'

என்று பாடியிருக்கிறார். அது போனாலும் போகட்டும். 'போலீஸ் ஆட்சி' என்று நீங்கள் ருஷ்யாவைக் குறிப்பிடாவிட்டால் பின் எதைக் குறிப்பிட்டீர்கள்? இந்தியாவில் நடக்கும் உங்கள் ஆட்சியைத்தானே?'' என்றேன்.

அப்போது பார்க்க வேண்டுமே சர்ச்சிலின் திருமுகத்தை! முப்பது எலிகளை முழுசாய் விழுங்கியவர்போல் முகத்தை வைத்துக்கொண்டு, ''என்ன சொன்னீர்? இந்தியாவிலே போலீஸ் ஆட்சியா? இங்கே பிரிட்டிஷ் சாம்ராஜ்ய தர்ம ஆட்சி அல்லவா நடைபெறுகிறது?'' என்றார்.

''வேறொன்றுமில்லை; எங்கள் தேசத் தலைவர்கள் இன்னும் சிறைச்சாலையில் இருக்கிறார்களே, அதை உத்தேசித்து அவ்விதம் சொன்னேன்!''

''யாரைச் சொல்கிறீர், தேசத் தலைவர்கள் என்று? பகைவர்களோடு உறவு கொண்டாடியவர்களையா?''

"இல்லை, இல்லை! ஜவாஹர்லால்ஜி, ஆஸாத்ஜி முதலியவர்களை யல்லவா சொல்கிறேன்!"

"அவர்களைத்தான் நானும் சொன்னேன். ஜெர்மனியோடும் ஜப்பானோடும் அவர்கள் உறவு கொண்டாட வில்லையா?"

"அடாடா! மகா புத்திசாலியாகிய நீங்கள் கூடவா இவ்வளவு அசட்டுத் தனமான பொய்யைச் சொல்ல வேண்டும்?"

"என்ன சொன்னீர்? 'பொய்' என்ற வார்த்தையை உடனே வாபஸ் வாங்கும். இல்லாவிடில் நான் எலி வளை எங்கே இருக்கிறதென்று பார்த்து..."

"வேண்டாம், வேண்டாம். அப்படி ஒளிய வேண்டாம். 'பொய்' என்ற வார்த்தை வாபஸ். அதற்குப் பதிலாக 'உண்மைக் கலப்பற்ற வார்த்தை' என்று சொல்ல அனுமதியுங்கள். உங்கள் அருமைத் தோழர் அமெரி ஜப்பானோடு கட்டித் தழுவிக் கொண்டு, 'மஞ்சூரியாவை ஜப்பான் ஆக்கிரமித்தது நியாயம்' என்று ஸ்தாபித்துக் கொண்டிருந்தபோது, எங்கள் ஜவாஹர்லால்ஜி ஏகாதிபத்திய ஜப்பானையும் நாஜி ஜெர்மனியையும் கண்டித்து ஆயிரம் மேடைகளில் பிரசங்கம் செய்தவராயிற்றே?"

"அந்தப் பழைய கதையெல்லாம் யார் கேட்டார்கள்? யுத்தத்தின்போது அவர்கள் பகைவர்களை ஆதரித் தார்களா இல்லையா?"

"கிடையவே கிடையாது?"

"அப்படியானால், அவர்களுடைய பாட்டன்மார்கள் நமது பகைவர்களை ஆதரித்திருப்பார்கள்!"

"அழகுதான்! அப்படியே இருந்தாலும் ஐரிஷ்காரர்கள் [illegible] சண்டை போட்டதை முன்னிட்டு அயர்லாந்தைச் சுதந்திரமாய் விட்டிருக்கிறீர்களே? அதுபோல், இந்திய வீரர்கள் 25 லட்சம் பேர் சண்டை போட்டதை முன்னிட்டாவது இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுத்துவிடக் கூடாதா?"

"சரியாய்ப் போச்சு! முதலில், தலைவர்களின் விடுதலை என்றீர்; அப்புறம் இந்தியாவின் சுதந்திரம் என்கிறீரே? அதெல்லாம் இப்போதைக்குப் போகக்கூடாது! — ஜப்பான் யுத்தம் இன்னும் பாக்கி யிருக்கிறது என்பது ஞாபகம் இல்லையா?"

"அதென்ன, ஜப்பான் யுத்தத்தைப் பற்றி இவ்வளவு பிரமாதக் கவலைப்படுகிறீர்கள்? ஆனானப்பட்ட ஜெர்மனியை முறியடித்து, ஒரு கோடி ஜெர்மன் சோல்ஜர்களைப் பணியச் செய்தவர்களுக்கு, ஜப்பான் ஒரு பிரமாதமா? மேலும், ருஷ்யாவும் ஜப்பானுக்கு எதிராக யுத்தம் ஆரம்பித்துவிட்டால்...?"

"என்ன சொல்றாய்? அந்த மாதிரி ஒன்றும் நேராமலிருக்க வேண்டுமே என்றல்லவா நான் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறேன்? போதும், போதும்! ஐரோப்பிய யுத்தத்தில் ருஷ்யாவின் உதவியினால் வந்த விபரீதமே போதும். அதன் பலனாக இப்போது போலந்திலும், செக்கோஸ்லோவோகியாவிலும், ருமேனியாவிலும், யுகோஸ்லோவோகியாவிலும், கடைசியாக ஆஸ்திரியாவிலும் போலீஸ் ஆட்சி ஏற்பட்டுவிட்டது. இன்னும் ஜப்பான் யுத்தத்திலும் ருஷ்யா கலந்துவிட்டால், மோசந்தான்! மஞ்சூரியாவிலும் போலீஸ் ஆட்சி ஏற்பட்டுவிடும். அப்புறம், சைனா, இந்தோ சைனா, பார்மோஸா, ஸயாம், திபேத், — இந்த தேசங்களின் கதி எல்லாம் என்ன ஆகிறது? சர்வம் போலீஸ் ராஜ்யமாக அல்லவா ஆகிவிடும்? வேண்டவே வேண்டாம்!" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறிக் கொண்டே, ஜன்னல் வழியாக வெளியே எட்டிப் பார்த்தார் சர்ச்சில்.

அவருடைய கண்களில் அப்போது கோபக்கனல் எழுந்தது. பற்கள் நறநறவென்று கடிபட்டன. அவருடைய வாயோ, "போலீஸ் ராஜ்யம் ஒழிக! பிரிட்டிஷ் ராஜ்யம் வாழ்க!" என்று முணுமுணுத்தது.

இந்தக் கடுகடுப்புக்கெல்லாம் காரணம் என்னவென்று, நாமும் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தோம்.

அங்கே சாக்ஷாத் ஸ்டாலின் வந்து கொண்டிருந்தார்!

ஜன்னலுக்கு நேரே அவர் வந்தாரோ, இல்லையோ, உள்ளே யிருந்த சர்ச்சில் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து ஜன்னலைத் தாண்டிக் கொண்டு சென்றார்.

இத்தகைய எதிர்பாராத சந்திப்பினால் என்ன விபரீதம் நேரப்போகிறதோ என்று நாம் பீதியுடன் மறுபடியும் எட்டிப் பார்த்தோம்.

சர்ச்சில் துரை அவர்கள், "என் அன்பார்ந்த தோழரே!" என்று சொல்லிக்கொண்டு ஸ்டாலினை ஆலிங்கனம் செய்து கொண்ட காட்சி தென்பட்டது.

உடனே, நாம் மூர்ச்சை யடைந்து விழுந்து விட்டபடியால், அப்புறம் என்ன ஆயிற்றோ, தெரியாது!

வான சஞ்சாரம்

இசைத்தேன்

சென்ற வார ரேடியோக் கச்சேரிகளில் ஒன்றுதான் மிகவும் உயர்ந்த ரகமானது. ஆனால் அந்த ஒன்றே போதும் என்று சொல்லும்படியான தனிப் பெருமை கொண்டிருந்தது. அதுதான், சென்னை நிலையத்தில் 12ல் நடந்த த்வாரம் வெங்கடசாமி நாயுடுவின் வயலின் கச்சேரி. தற்காலம் அவ்வாத்யத்தில் உச்சஸ்தானம் வகிக்கும் பிரபல வயலின் வித்வான்களில் அவர் ஒருவர். தமிழ் நாட்டில் இலங்கும் சிறந்த பாணி எதையும் சேர்ந்ததல்ல என்றாலும், அவர் வாத்யத்தின் நாதப்பெருக்கும் ச்ருதி சுத்தமும் இணையற்றவை. அத்துடன் அசாதாரண நிதானமும் அழுத்தமும் கொண்டது. அன்று அவர் வாசித்த ஸ்ரீரஞ்சனி, சாருகேசி, பூர்வி கல்யாணி, சுப பந்துவராளி ராகங்களில் தொட்ட இடமெல்லாம் கமகமும் இழைப்புமாயிருந்தது. தானத்தைப் பல ராகங்களான மாலிகையாய் வழங்கியது வெகு சிறப்பாயிருந்தது. 'மீனாக்ஷி மேமுதம்' கிருதியில் விழுந்த சங்கதிகள் மிகத் தெளிவாயும் உருக்கமாயுமிருந்தன. மந்தரத் தந்தியில் வாசிக்கும்போது எழும்பும் நிறைந்த நாத சஞ்சாரமும், ஜீவஸ்வரங்களைப் பற்றியாய்ப் பிடித்து ராக ஸ்வரூபங்களை விளக்கும் முறையும் இவரிடம் பிரத்யேகந்தான். மொத்தத்தில், கேட்டபின் மறக்கமுடியாத சங்கீதம்.

சென்னையில் 11ல் ராகம் தானம் பல்லவி பாடிய எஸ். சோமசுந்தரம் ஷண்முகப்ரியாவை அலசி யெடுத்து விட்டார். நினைத்தபடியெல்லாம் உதவும் சாரீரம்; சாதகம். நடையோ வாயுவேகம் மனோவேகம். ஆனால் எவ்வளவு வேகமாய்ப் பாடினாலும், பிர்க்காவைக் கொட்டினாலும், ஒரு இடத்திலும் தேசலின்னாது தெளிவாயிருப்பது இவர் சங்கீதத்தின் விசேஷம்.

• • •

9ல் சென்னையில் எம். சாரதாம்பாள் வாசித்த வீணையிலிருந்து ராகங்களும் உருப்படிகளும் இழைந்து வந்தன. ஷண்முகப்ரியாவும் புன்னாகவராளியும் சிறப்பாயிருந்தன.

அன்று திருச்சியில் கேட்ட டி. வி. கிருஷ்ணனின் பாட்டும், வி. சந்தானமய்யாவின் வயலினும் குறிப்பிடத் தக்கவை.

10ல் கேட்கக்கூடிய கச்சேரிகளில் சென்னையில் வி. பெருந்தேவியினது ஒன்று. சாரீர சம்பத்துடன் ஞானமும் கொண்டது. தோடி, கல்யாணி, கரஹரப்ரியா, ஆபோகி ராகங்கள் நல் வடிவங்களாயிருந்தன. 'நின்னுவினு' உருப்படியில் அவர் பாடிய நிரவல் ஸ்வரம் ஜோராயிருந்தது.

சென்ற வாரத்தில் சுந்தரி நம்பிக்கு யோகந்தான். 10லும் 15ல் டி. பார்வதிக்கும் பதினாலும் இரண்டு நாள் சென்னையில் தன் கணிப்பான குரலில் ராகங்களையும் கிருதிகளையும் சரமாரியாய்ப் பொழிந்தார்.

11ல் சென்னையில் எஸ். வி. சௌந்திரராஜன் சக்கைப் போடு போட்டார். நயமும் நல்ல உதவுபடியும் கொண்ட சாரீரம். சுகமான வழி. முன்னுக்கு வரவேண்டிய இளம் பாடகர்களில் இவர் ஒருவர். முதல் பாகத்தில் பேகடாவும் தன்யாசியும், இரண்டாம் பாகத்தில் கல்யாணியும் ஹிந்தோளமும் சுவையாயிருந்தன.

சென்னையில் இரவில் நடந்த 'சதி சக்தி' என்ற சிறு நாடகம் ரொம்ப ருசிகரமாயிருந்தது. சம்பந்த முதலியார் எழுதியதென்றால் கேட்க வேண்டுமா? சோம்பேறிப் புருஷனை வேலை வாங்க எத்தனிக்கும் மனைவியின் முயற்சியும் மாரியம்மன் பூஜை மூலம் ஒருவரை யொருவர் ஏமாற்றும் சாகஸமும் நகைச்சுவை நிறைந்திருந்தன.

12ல் சென்னையில் கேட்ட இனிய குரல் படைத்த எஸ். கே. வேதாவின் கானமும், செஞ்சி லக்ஷ்மய்யாவின் வேணு கானமும், திருச்சியில் டி. எஸ். வெங்கடாசலம் பிள்ளையின் வயலினும், சுந்தர சாரதாம்பாளின் பாட்டும் கேட்கத் தகுந்தவை.

13ல் சென்னையில் இரண்டு பாகமாய்ப் பாடிய சங்கரியம்மாளுக்கு நடுத்தரக் குரல். ராக ஆலாபனைகளில் நிதானம் கண்டது. வராளி, வாசஸ்பதி ராகங்களைத் திறமையாய் வழங்கினார். பந்துவராளி தோடி உருப்படிகளில் ஸ்வரம் நன்றாயிருந்தது. ஆனால் மேல் சஞ்சாரங்களில் கொஞ்சம் சிரமப்பட்டார்.

14ல் யுத்த வெற்றிக் கொண்டாட்டத்தில் முன் குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் பெரும்பாலும் மாறுபட்டன. நாள் முழுதும் யுத்தப் பேச்சாகவேயிருந்தது. அன்று பிற்பகலில் சென்னையில் கேட்ட ராஜலக்ஷ்மி சந்தானத்தின் பாட்டு கவனிக்கக் கூடியதாயிருந்தது. பைரவியை ரொம்ப நிதானமாய் விளம்பினார்.

15ல் திருச்சியில் நடந்த பூவனூர் எஸ். சுந்தரேச முதலியாரின் வேணுகானம் சுகமாயிருந்தது. நாட்டை, அடாணா, சங்கராபரணம் ஸஹானா ராகங்கள் சிறப்பாயிருந்தன.

அன்று சென்னையில் இரவுக் கச்சேரி செய்த எம். எஸ். செல்லப்பிள்ளை ஐயங்கார் சிறந்த ஞானம் படைத்தவராய்த் தென்பட்டார். கல்யாணி, அமிருதவர்ஷிணி, தோடி ராகங்கள் அழகாயிருந்தன. கல்யாணி உருப்படியில் நிரவல் ஸ்வரங்கள் அழுத்தமாயிருந்தன.

சென்ற இதழில் வெளியான காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: பி. எஸ். சந்திரசேகரன், 1080, பட்சா அன்னா சந்து, மேற்கு மூல வீதி, தஞ்சாவூர்.

நடன கலா ஸேவாவின்

இரண்டு நூதன நாட்டியக் கச்சேரிகள்

சுகுண விலாஸ சபா புது தியேட்டர், மவுண்ட் ரோட்

★

26-5-45 சனிக்கிழமை மாலை 6-30 மணிக்கு

T. ப்ரேமாவதியின் - தனி பரதநாட்டியம்

27-5-45 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு — **நாட்டிய மாலை**

ஊர்வசியின் காதல், ராதையின் கனவு, நாட்டிய நாடகங்களும், பஸ்மாஸுர மோஹினி

K. R. குமாரி, C. கேசவதாஸ், K. குமாரன் நாயர், T. ப்ரேமாவதி,
A. K. காந்தாமணி, மற்றும் பல நடிகை, நடிகர்களுடன் நடைபெறும்

டிக்கட் விபரம் நிரைசரி : ரூ. 10, 5, 3, & 1

இரண்டு கச்சேரிகளும் சேர்ந்து : ரூ. 25

டிக்கட்டுகள் முன்னதாக கீழ்க்கண்ட இடங்களில் கிடைக்கும்.

1. அஸோஸியேட் அட்வர்டைஸர்ஸ், யுனைடெட் இந்தியா பில்டிங்ஸ், எஸ்பிளனேட், போன் : நெம்பர் 3355
2. பி. எஸ். மணி & Co., 2/1, மவுண்ட் ரோடு, போன் நெம்பர் : 86333
3. நாஷனல் ரேடியோ கோ., 35, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு.
4. எம். ஆ. ஏ. வி. ஆபீஸ், 1/4, கச்சேரி ரோடு, மைலாப்பூர்.
5. நடன கலா ஸேவா ஆபீஸ், 9, கென்னடி முதல் தெரு, லஸ், மைலாப்பூர்.



கல்யாண காலத்திற் கேற்ற புடவைகள்

கண்ணைக் கவரும் நூதன நாகரீக டிஸைனுகளில் ஏராளமாக வந்து குவிந்துள்ளன.

உங்களுக்குப் பிடித்தமானதைப் பொருக்கி யெடுத்துக் கொள்ள முந்துங்கள்.

★

பாபுலர் சுதேசி ஸ்டோர்ஸ்

பைக்ராப்ட்ஸ் ரோடு,
திருவல்லிக்கேணி :: மதராஸ்
போன் : 86220



மகத்தான கச்சேரி

"மகத்தான" என்னும் வார்த்தையை இப்போதெல்லாம் கொஞ்சம் தாராளமாகவே உபயோகப்படுத்திக் கொண்டு வருகிறோம். "மகத்தான பிரசங்கம்" என்கிறோம். "மகத்தான வெய்யில்" என்கிறோம். "மகத்தான அசட்டுத்தனம்" என்கிறோம். நல்ல வேளையாய், சங்கீதக் கச்சேரிகளைப் பற்றி "மகத்தான" என்னும் வார்த்தையை அதிகமாக நாம் உபயோகப்படுத்துவதில்லை. அந்த வரையில் க்ஷேமந்தான்! ஏனெனில், சங்கீதக் கச்சேரிகளைக் குறித்து அடிக்கடி "மகத்தான கச்சேரி" என்று சொல்லி அந்த வார்த்தையைக் கெடுத்திருந்தோமானால், சென்ற ஞாயிற்றுக் கிழமை செய்ண்ட் மேரீஸ் ஹாலில் நடந்த மதுரை மணிக் கச்சேரியை வேறு எப்படிக் குறிப்பிடுவது என்று தெரியாமல் திண்டாட வேண்டியிருக்கும்.

'பிரமாதம்' 'அபாரம்'—என்ற வார்த்தைகளையெல்லாம் வெகு தூரம் பின்னால் விட்டுவிட்டு மேலே போன கச்சேரி அது. எனவே, அதை 'மகத்தான கச்சேரி' என்றாவது சொல்லாவிட்டால், ரஸிகர்களுடைய உள்ளம் திருப்தியடையாது.

மணி ஐயர் வாசஸ்பதி ராகம் பாடி, "பராத்பரா" கீர்த்தனம் பாடி,

"அரிஅயனும் காணா அரியஜோதி"

யில் நின்று நிரவல் செய்து, ஸ்வரப் பிரஸ்தாரத்தில் 'தத்தா' 'தத்தா' என்று தைவதத்தில் அடிக்கடி வந்து நின்று பாடியபோது, கச்சேரி 'பிரமாதம்' என்று சொல்லக் கூடிய நிலைமையை அடைந்தது.



ஆபோகி ராகம் ஆலாபனம் செய்து "ஸ்ருபார்த்" என்ற அநுபல்லவி வார்த்தையில் நின்று ஸ்வரப்பிரஸ்தாரம் செய்த போது கச்சேரி 'அபாரம்' ஆயிற்று.

பிறகு சங்கராபரண ராகத்தைக் கம்பீரமாகவும் விஸ்தாரமாகவும் ஆலாபனம் செய்து, "அக்ஷய திருவடி" கீர்த்தனத்தில், "எத்தனையோ பிறவி"யில் நின்று நிரவல் செய்தபோதுதான், கச்சேரி 'மகத்தான'தாயிற்று! அந்த நிரவலின் அழகையும் பிறகு தொடர்ந்து வந்த ஸ்வரப் பிரஸ்தாரத்தையும் பற்றி எத்தனை எத்தனையோ சொல்லலாம்! ஆனால், சொல்லாமல் விடுவதற்குக் காரணந்தான் எல்லாருக்கும் தெரியுமே?—இட ஸொக்கிதான்.

ஸ்ரீ கானகலாதரர் சென்ற டிசம்பர் கடைசியில் கடுமையான நோய்க்கு ஆளாகி, சங்கீத ரஸிகர்கள் பலரைப் பெருங் கவலைக்குள்ளாக்கினார். ஆனால், அவருக்கு வந்த ஜுரமானது அவருடைய உடலை மெலியச் செய்து, அதே சமயத்தில் அவருடைய தொண்டைக்கு அபாரமான வலிமையும் கம்பீரத்தையும் கொடுத்திருக்கிறது. குரலில் பழைய மதுரமும் குழைவும் சுருதியிலிருந்த அணுகளும் பிறழாத் தன்மையும் அப்படியே இருக்கிறபடியால், எல்லாமாகச் சேர்ந்து அவருடைய சாரீரமானது இப்போது யாக மறுவற்ற பத்தரை மாற்றுத் தங்கமாகப் பிரகாசிக்கிறது. அப்படிப்பட்ட சாரீரத்தின் சாகஸம் முழுவதையும் மேற்படி சங்கராபரணக் கீர்த்தன நிரவலில் அன்று பார்த்தோம்.

முக்கிய ராகம் பல்லவிக்கு மோகன ராகத்தை எடுத்துக் கொண்டார் மணி ஐயர். எத்தனையோ பாடகர்கள் மோகனம் பாடுகிறார்கள்; மணி ஐயரும் எத்தனையோ ராகம் பாடுகிறார். ஆனால்

மணி ஐயருக்கும் மோகனத்துக்கும் ஒரு தனிப் பொருத்தம் இருக்கிறது. அவரிடம் அந்த ராகம் ஒரு தனிக் களை பெற்று விளங்குகிறது.

இந்தச் சமயத்தில் ஒரு விஷயம் குறிப்பிட விரும்புகிறேன். மணி ஐயரின் ராக ஆலாபனைப் பாணியைப் பற்றி 'துண்டு துண்டாக வெட்டிப் பாடுகிறார்' என்று சிலர் சொல்லுவதுண்டு. 'கல்கி'யிலேயே ஒரு தடவை இத்தகைய அபிப்பிராயம் வெளியாகியிருக்கிறது.

ஆனால் என் அபிப்பிராயம் இது விஷயத்தில் கொஞ்சம் வித்தியாசமானது. மணி ஐயர் துண்டு துண்டாக வெட்டி ராக ஆலாபனம் செய்கிறார் என்பது உண்மையே. ஆனால் அவருடைய துண்டுகளுக்கும், மற்றக் கற்றுக் குட்டிகளின் துண்டுகளுக்கும் வித்தியாசம் உண்டு. நல்ல ஒட்டு மாம்பழத் துண்டுகளுக்கும், தாடிப்பசந்து மாம்பழத் துண்டுகளுக்கும் உள்ள வித்தியாசந்தான்!

மணி ஐயர் துண்டு துண்டாக வெட்டி வெட்டிப் பாடினாலும் அந்தத் துண்டுகளின் மூலமாகவே ராகத்தின் முழு ஸ்வரூபத்தைக் கொண்டு வந்து விடுகிறார். அதோடு, ஒவ்வொரு ராகத் துணுக்கும் அழகிய ஒரு சிறு நட்சத்திரம்போல் அமைந்து விடுகிறது.

வட்டம் ஒன்று போட வேண்டுமானால், தொடர்ச்சியான இடையறாத ஒரே கோட்டினாலும் அந்த வட்டத்தைப் போடலாம். அல்லது தனித்தனி சிறு நட்சத்திரங்களின் மூலமாகவும் ஒரு வட்டத்தை அமைக்கலாம்.



நல்ல ராகபாவத்துடன் பாடுகிற உயர்ந்த வித்வான்கள் சாதாரணமாய் முதல் வட்டத்தைப் போல் ஆலாபனம் செய்வார்கள். மணி ஐயரின் ஆலாபனம் இரண்டாவது வட்டத்தைப்போலிருக்கும்.

ராக ஸ்வரூபமே அமையாதபடி பிசிரு பிசிராகவும் கோணல் மாணலாகவும் கோடு இழுக்கிற பாடகர்களும் உண்டு.

போகட்டும்; மோகன ராகத்தின் உருவத்தை அபூர்வமான மோகன நட்சத்திர வடிவங்களினால் மணி ஐயர் காட்டிய பிறகு, ராகமாலிகை ஸ்வரங்கள் அமிர்த வர்ஷமாகப் பெருக்கெடுத்தன. பியாக், கானடா, கௌரிமனோஹரி முதலிய ராகங்களின் ஸ்வரங்கள் மணி மணியாகவும் முத்து முத்தாகவும் உதிர்ந்தன.

முன்னெல்லாம், மணி ஐயரின் கச்சேரியில் ராகமாலிகை ஸ்வரமே சிகரமாக அமைவது வழக்கம். அதோடு கச்சேரியே முடிந்த மாதிரிதான். அப்புறம் அவர் பாடும் சில்லறை உருப்படிகள் அதிகமாக ரஸிகர்களின் உள்ளத்தைக் கவர்வதில்லை. இந்தக் கச்சேரி அந்த விஷயத்தில் முற்றும் மாறுபட்டிருந்தது. பல்லவிக்குப் பிற்பாடு அவர் பாடிய பாடல்களில் சபையோரின் உற்சாகம் வரம்பு கடந்து பெருக்கெடுத்தது.

இதற்குக் காரணம் என்னவென்று யோசித்தேன். மணி ஐயர் இப்போதெல்லாம் தமிழ்ப் பாட்டுக்களில் அதிக கவனம் செலுத்திப் பாடத் தொடங்கியிருப்பது தான் என்று தோன்றியது.

அன்றையக் கச்சேரி, தமிழிசைச் சங்கத்தின் ஆதரவில் நடந்த தமிழிசைக் கச்சேரி என்று முன்னால் சொல்ல மறந்து விட்டேன் போலிருக்கிறது. பாதகமில்லை; இப்போது சொல்லி விடுகிறேன். ஆரம்பத்திலிருந்து கடைசி வரையில் அன்று மணி ஐயர் எல்லாம் தமிழ்ப் பாட்டுக்களாகவே பாடி ஜமாய்த்து விட்டார்!

தாய் மொழியிலே பாடுவது என்று ஏற்பட்டதும், சாஹித்யத்தின் வார்த்தைகளில் கவனம் செல்கிறது; அர்த்தம் மனதில் பதிகிறது; உச்சரிப்பு சுத்தமாகிறது; வார்த்தைகளை விழுங்குவது நிற்கிறது; உள்ளத்தில் உணர்ச்சி உண்டாகிப் பாட்டோடு கலந்து விடுகிறது!

இப்படியெல்லாம் ஏற்பட்டுவிட்டபடியால் மணி ஐயர் கச்சேரியின் கடைசிப் பாகமும் இப்போது அபாரமாய்ச் சோபிக்க ஆரம்பித்திருக்கிறது.

பல்லவி முடிந்ததும், இனிமையான வர்ணமெட்டில் அழகான தமிழ்ச் சொற்களைக் கொண்டு அமைத்த,

"கந்தன்—கருணைபுரியும் வடிவேல்!"

என்ற பாட்டை முதலில் மணி ஐயர் பாடினார். அந்தப் பாட்டின் முடிவில்,

"அன்னை பராசக்தி அருள் சுடர் வேல்!"

என்ற பஞ்சமத்திலே நின்றபோது, சபையோரைக் குலுக்கிப் போட்டுவிட்டது. பிறகு "தனிக்கனி முக்தனி பிறந்து" என்ற பாடலைக் கேதாரகௌளம், ஹம்ஸானந்தி என்னும் இரு ராகங்களில் உருக்கமாகப் பாடினார். "செந்தமிழ் நாடெனும் போதினிலே" பாட்டில் சபையை வெறி கொள்ளும்படி செய்துவிட்டார். "எப்போ வருவாரோ"வும் அப்படியேதான்.

இவ்வளவு செந்தமிழ்ப் பாடல்களைக் கேட்ட பிறகு, "பாமாலை"யைக் கேட்காமல் சபையோர் கலைய மறந்துவிட்டார்கள். எல்லா பக்கமும் 'பாமாலை!' "பாமாலை!" என்ற கூச்சல் எழுந்தது.

ஸ்ரீ சுப்பிரமண்ய பாரதியாரின் பேரில் பாபநாசம் சிவன் அமைத்த இந்தப் பாமாலைக் கிருதிதான் அன்றையக் கச்சேரியில் மகத்தான பாட்டாக அமைந்து விட்டது!


"தமிழ்நாடு செய்தவப் பயனாய் வந்தவர்"

என்ற இடத்தில் காருபிர்த வர்ஜமாக பாடகர் நிரவல் செய்தபோது, "செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்னும் பாரதியார் வாக்கின் உண்மையை இதுவரையில் உணராதவர்களும் உணர்ந்து கொண்டார்கள்.

"வாழிய செந்தமிழ் வாழ்க நற் றமிழர்
வாழிய என்றும் நம் மணி ஐயர்!"

என்று வாழ்த்திக்கொண்டே போனார்கள்.

மணி ஐயரின் பாட்டுக்கு ஒத்தபடி மணியாகப் பக்க வாத்தியம் வாசித்துச் சபையோரின் மகிழ்ச்சியையும் கரகோஷத்தையும் அடிக்கடி பெற்ற மாயவரம் கோவிந்தராஜுப் பிள்ளைக்கும், ராமநாதபுரம் முருகபூபதிக்கும் மேற்படி வாழ்த்தில் ஒரு பெரிய பங்கு உண்டு என்பதில் சந்தேகமில்லை.



ஸ்ரீ எஸ். ஒய். கிருஷ்ணஸ்வாமி ஐ. ஸி. எஸ். அவர்களின் குமாரி சௌபாக்கியவதி லலிதாவுக்கும், ரா. ஜில்லா ஜட்ஜ் ஸ்ரீ டி. எஸ். சுப்ரமண்ய ஐயரின் பேரனான ஸ்ரீ டி. பாலகிருஷ்ணன் பி. எஸ்ஸி (லண்டன்) அவர்களுக்கும் மே மாதம் 13-ம் தேதி சென்னையில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. சென்னை நகரைச் சேர்ந்த பிரமுகர்களும் பண்பாளர்களும் திரள் திரளாக விஜயம் செய்திருந்ததுடன், வெளியூர்களிலிருந்தும் அநேகர் வந்திருந்து விவாகத்தைச் சிறப்பித்து மணமக்களையும் வாழ்த்தினார்கள். விவாகத்தன்று ஸ்ரீ அரியக்குடி ராமானுஜய்யங்கார் கச்சேரியும், மறுநாள் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் கச்சேரியும் விமரிசையாக நடைபெற்றன.

சிவகாமியின் சபதம்



மணியம்

பதின்மூன்றாம் அத்தியாயம்

சின்னக் கண்ணன்

கல்கி

ஏறக்குறைய ஒன்றரை ஆண்டு காலம் பிரிந்திருந்த பிறகு, சிவகாமியும் கமலியும் சந்தித்தபோது, அந்த இளம்பிராயத் தோழிகளுக்கு ஏற்பட்ட உள்ளக் கிளர்ச்சியை இப்படியென்று விவரிக்க முடியாது.

ஒருவரையொருவர் தழுவிக் கொண்டார்கள்; ஒருவருடைய தலையை ஒருவர் தோளில் வைத்துக்கொண்டு கண்ணீர் விட்டார்கள்; விம்மி அழுதார்கள்; திடீரென்று சிரித்தார்கள்; ஒருவரையொருவர் வாழ்த்திக் கொண்டார்கள்; உடனே, வைது கொண்டார்கள்.

இருவரும் ஏககாலத்தில் பேச முயன்றார்கள்; பிறகு இருவரும் சேர்ந்தாற்போல் மௌனமாயிருந்தார்கள்.

அந்த ஒன்றரை வருஷத்துக்குள் இருவருடைய வாழ்க்கையிலும் எத்தனை எத்தனையோ முக்கிய சம்பவங்கள் நிகழ்ந்திருந்தன. அவற்றில் எதை முதலில் சொல்வது, எதை அப்புறம் சொல்வது என்று நிர்ணயிக்க முடியாமல் தவித்தார்கள்.

அந்தப் பிரச்னையை அவர்களுக்காகச் சின்னக் கண்ணன் தீர்த்து வைத்தான்.

தொட்டிலில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த குழந்தை தான் விழித்துக்கொண்டு விட்டதை ஒரு கூச்சல் மூலம் தெரியப்படுத்தியதும், கமலி ஓடிப்போய்க் குழந்தையைக் கையில் எடுத்துக் கொண்டு வந்தாள்.

"அடி தங்கச்சி! சின்னக் கண்ணனைப் பார்த்தாயாடி!" என்றாள்.

சிவகாமி சின்னக் கண்ணனைக் கண்டதும் சற்று நேரம் திகைத்துப் போய்ப் பார்த்தது பார்த்தபடி நின்றாள். வெளிப்படையில் அவள் ஸ்தம்பித்து நின்றாளே தவிர, அவளுடைய உடம்பின் ஒவ்வொரு அணுவும் அப்போது துடித்தது. அவளுடைய இதய அந்தரங்கத்தின் ஆழத்திலிருந்து இதுவரைக்கும் அவளுக்கே தெரியாமல் மறைந்து கிடந்த ஏதோ ஒரு உணர்ச்சி பொங்கி வந்து மளமளவென்று பெருகி அவளையே முழுதும் மூழ்கடித்து விட்டதுபோலிருந்தது.

"அடியே! ஏனடி இவ்விதம் ஜடமாக நிற்கிறாய்? சின்னக் கண்ணன் உன்னை என்ன செய்தான்? இவன் பேரில் உனக்கு என்ன கோபம்?" என்று கமலி கேட்டதும்தான், சிவகாமி இந்தப் பூவுலகத்திற்கு வந்தாள்.

"கமலி! இவன் யாரடி? எங்கிருந்து வந்தான்? எப்போது வந்தான்? — என்னிடம் வருவானா?" என்று சிவகாமி குழறிக்குழறிப் பேசிக் கொண்டே இரண்டு கைகளையும் நீட்ட, குழந்தையும் சிவகாமியின் முகத்தைத் தன் அகன்ற கண்கள் இன்னும் அகலமாக விரியும்படி வியப்புடன் பார்த்துக் கொண்டே, அவளிடம் போவதற்காகக் கைகளையும் கால்களையும் ஆட்டிக் கொண்டு பெரிதும் பிரயத்தனப் பட்டது.

"பார்த்தாயா? உன்னிடம் வருவானா என்று கேட்கிறாயே? அதற்குள் என்னவோ மாயப் பொடி போட்டுவிட்டாயே, கள்ளி!—மாமல்லருக்குப் போட்ட மாயப் பொடியில் கொஞ்சம் மிச்சம் இல்லாமல் போகுமா?" என்று சொல்லிச் சிரித்துக்கொண்டே கமலி குழந்தையைச் சிவகாமியிடம் கொடுத்தாள்.

மாமல்லரைப் பற்றிக் குறிப்பிட்டது சிவகாமிக்குக் குதூகலத்தையும் நாணத்தையும் ஒருங்கே அளித்தது. அவள் குழந்தையைக் கையில் வாங்கி மூக்கும் முழியும் கண்ணும் கதுப்புமாயிருந்த அதன் முகத்தைப் பார்த்துக்கொண்டே, "ஆமாண்டி, அம்மா, ஆமாம்! நீ கண்ணனுக்குப் போட்ட மாயப் பொடியில் கொஞ்சம் மீத்துக் கொடுத்ததைத்தானே நான் மாமல்லருக்குப் போட்டேன்? — பார்! அப்படியே அப்பாவின் முகத்தை உரித்து வைத்தது போலிருக்கிறது! கமலி! இவன் அப்பா எங்கே?" என்று கேட்க, கமலி, "இது என்ன கேள்வி, சிவகாமி! இவன் அப்பா எங்கே இருப்பார்? மாமல்லர் எங்கே இருக்கிறாரோ, அங்கேதான் இருப்பார்! ......ஆ! இந்த ஆண்பிள்ளைகளுக்கு மட்டும் பெண்டாட்டி, பிள்ளை எல்லாம் கூட அப்புறந்தான், தங்கச்சி! தங்களுடைய சிநேகிதர்களும் சிநேகிதமுந்தான் அவர்களுக்கு முக்கியம். நாம்தான் ஒருவரையொருவர் வருஷக் கணக்காகப் பார்க்காமல் இருந்துவிடுவோமே!" என்றாள்.

"ஓஹோ! அப்படியானால் அண்ணனும் இன்று அரண்மனையிலேதான் இருந்தாரா? சபையில் என்னுடைய நாட்டியத்தைப் பார்த்திருப்பார் அல்லவா? நீ ஏனடி வரவில்லை?" என்று சிவகாமி கேட்டதும், கமலி, "என்ன தங்கச்சி, உளறுகிறாய்? உன் அண்ணனாவது நாட்டியம் பார்க்க வருவது? உனக்குத் தெரியாதா, என்ன? மாமல்லர்தான் தெற்கே பாண்டியனோடு சண்டை போடுவதற்குப் போயிருக்கிறாரே?" என்றாள்.

இதைக் கேட்டதும், சிவகாமிக்கு ஏற்பட்ட திடுக்கிடலில், தன் மடியிலிருந்த குழந்தையைக்கூட மறந்துவிட்டு எழுந்தாள். குழந்தை தரையில் 'பொத்' என்று விழுந்து, 'வீர்' என்று கத்திற்று. கமலி அலறும் குரலில், "அடி பாவி! சண்டாளி! ஏனடி குழந்தையைக் கீழே போட்டாய்? நீ நாசமற்றுப் போக! உன்னைப் புலிகேசி கொண்டு போக!" என்றெல்லாம் திட்டிக்கொண்டே, சின்னக் கண்ணனை எடுத்து மார்போடு அணைத்து அப்படியும் இப்படியுமாக ஆட்டிக்கொண்டே, "வேண்டாமடா, கண்ணா! வேண்டாமடா!" என்று சமாதானப்படுத்தினாள். குழந்தை மீண்டும் மீண்டும் வீறிட்டு அழுதவண்ணம் இருக்கவே, கமலி கோபங்கொண்டு, "அடே! வாயை மூடுகிறாயா? அல்லது புலிகேசியை வந்து உன்னைப் பிடித்துக்கொண்டு போகச் சொல்லட்டுமா?" என்றாள். குழந்தை ரொம்ப அழுதால் இம்மாதிரி புலிகேசியின் பெயரைச் சொல்லிப் பயமுறுத்துவது அவள் வழக்கமாயிருந்தது. அதனால்தான் சிவகாமியையும் மேற்கண்டவாறு சபித்தாள்.

குழந்தை ஒருவாறு அழுகையை நிறுத்தியதும் அதைக் கீழே விட்டுவிட்டுக் கமலி சிவகாமியைப் பார்த்தாள். அவளுடைய திகைப்பைக் கவனித்துவிட்டு, "தங்கச்சி! மாமல்லரும் இந்தப் பிள்ளையின் தகப்பனும் பாண்டியனோடு யுத்தம் செய்யப் போயிருப்பது உனக்குத் தெரியாதா, என்ன?" என்று கேட்டாள்.

"தெரியாது, அக்கா!" என்று சிவகாமி உணர்ச்சி பொருந்திய கம்மிய குரலில் கூறினாள். தான் சபையில் நடனமாடிய போது, மாமல்லர் எங்கேயோ மறைவான இடத்திலிருந்து பார்த்துக் கொண்டிருப்பார் என்று எண்ணியதை நினைத்து அளவற்ற ஏமாற்றமடைந்தாள்.

ஆ! கமலி சொல்வது உண்மையாகத்தான் இருக்க வேண்டும். மாமல்லர் மட்டும் இங்கு இருந்திருந்தால் அந்தக் காட்டுப் பூனை புலிகேசியின் முன்னால் தன்னை ஆடல் ஆடச் சொல்லிப் பார்த்துக் கொண்டிருப்பாரா?

மாமல்லர் இல்லாத சமயத்தில் புலிகேசியின் முன்னால் தான் ஆடியதை நினைத்தபோது சிவகாமிக்கு இப்போது அசாத்திய வெட்கமா

யிருந்தது. மகேந்திர பல்லவர் மீது கோபம் கோபமாய் வந்தது. மாமல்லர் இல்லாதபோது, அவர் இல்லை என்கிற தைரியத்தினாலேயே சக்கரவர்த்தி தன்னைப் புலிகேசியின் முன்னால் ஆடச் சொல்லி அவமானப் படுத்தியிருக்கிறார்! மாமல்லரின் காதலுக்கு உகந்தவள் தான் என்பது சக்கரவர்த்திக்குத் தெரியும்; ஆயினும் தன்னைக் கூப்பிட்டுப் புலிகேசியின் முன்னால் அரங்க மேடையின் மீது ஆடச் செய்திருக்கிறார்! ஆ! இது என்ன கொடுமை! இது என்ன வஞ்சகம்! மாமல்லருக்கு இது தெரியும்போது, சக்கரவர்த்தியைப் பற்றி என்ன நினைப்பார்? தன்னைப் பற்றித்தான் என்ன எண்ணுவார்?

இத்தகைய குழப்பமான எண்ணங்கள் திரள் திரளான கருமேகங்களைப்போல் சிவகாமியின் உள்ளமாகிற ஆகாசத்தில் குமுறி எழுந்தன. திடீரென்று, ஜொலிக்கும் மின்னலைப் போல் ஒரு எண்ணம் பளிச்சென்று தோன்றி குழப்பமாகிற கரிய இருளைப் போக்கி வானத்தையும் பூமியையும் ஒளி மயமாக்கியது. அந்த மின்னல் ஒளியிலே அவள் கண்டு தெளிந்து கொண்ட விஷயம், தன்னைக் கெடுப்பதற்கு மகேந்திர பல்லவரின் சூழ்ச்சி எவ்வளவு பயங்கரமானது என்பதைத் தான். அதாவது, மாமல்லர் தெற்கே போனக்கால், தன்னை மண்டபப் பட்டில் சந்திக்காதிருக்கும் பொருட்டே, தன்னை இங்கே சக்கரவர்த்தி வரவழைத்திருக்கிறார்! — என்று அவள் முடிவு செய்தாள்.

சிவகாமியின் முகத் தோற்றத்தையும், அவளுடைய பாவத்தையும், கண்களில் ஜொலித்த கோபக் கனலையும் கவனித்த கமலி சிறிது நேரம் தானும் வாயடைத்துப் போய் நின்றாள். அப்புறம் சமாளித்துக் கொண்டு, "தங்கச்சி! இது என்ன? யார்மேல் இவ்வளவு கோபம்? ஒன்றும் முழுகிப் போய்விடவில்லையே? மாமல்லருக்கு யுத்தம் புதிதா? பாண்டியனை முறியடித்து விட்டு வெற்றி வீரராகத் திரும்பி வருகிறார்! அதுவரையில்......" என்று கமலி சொல்லி வந்தபோது,

"ஆ! போதும்! போதும்! வாதாபி புலிகேசியை ஜயித்து வாகைமாலை சூடியாகிவிட்டது; — பாண்டியனை ஜயிப்பதுதான் மிச்சம்! போடி, அக்கா, போ! இந்தப் பல்லவ குலத்தாரைப் போல் மானங்கெட்டவர்களை நான் கண்டது மில்லை; கேட்டது மில்லை. போயும் போயும் பல்லவ குமாரரிடம் போய் நான் காதல் கொண்டேனே!" என்றாள் சிவகாமி.

கமலிக்குத் தூக்கிவாரிப் போட்டது! இது என்ன இவள் இப்படிப் பேசுகிறாள்? சூரியனிடம் காதல் கொள்ளத் துணிந்த பனித் துளிக்கு ஒப்பிடத் தனைத்தான் எத்தனையோ தடவை நொந்து கொண்ட சிவகாமிதானா இவள்? குமார பல்லவரின் ஒரு கடைக் கண் நோக்குக்காக, ஒரு புன்னகைக்காக, தன் உயிரையே கொடுக்கச் சித்தமாயிருந்த சிவகாமிதானா இவள்?

இப்படிக் கமலி எண்ணி வியந்து கொண்டிருக்கும்போதே, சிவகாமியினுடைய முகபாவம் மாறியது. குரலின் தொனியும் மாறியது. கமலியின் கழுத்தைக் கட்டிக்கொண்டு, "அக்கா! ஏதோ அசட்டுப் பிசட்டு என்று பிதற்றுகிறேன். மன்னித்து விடு! எல்லாம் விவரமாகச் சொல்லு! மாமல்லர் எப்போது யுத்தத்துக்குப் போனார்? வாதாபி சக்கரவர்த்தி காஞ்சிக்கு வருவதற்கு முன்னாலா? அப்புறமா? அவருடன் அண்ணனைத் தவிர இன்னும் யார் யார் போயிருக்கிறார்கள்? மாமல்லர் யானைமேல் போனாரா? அண்ணனுடைய ரதத்தில் போனாரா? எல்லாம் விவரமாகச் சொல்லு! போகும்போது அண்ணன் உன்னிடம் என்ன சொல்லி விட்டுப் போனார்? என்னை இங்கே சக்கரவர்த்தி நாட்டியம் ஆட வரவழைக்கப் போவது அவர்களுக்குப் போகும்போது தெரியுமா? சொல்லு, அக்கா! ஏன் மௌனமாயிருக்கிறாய்? என் பேரில் உனக்குக் கோபமா?" என்று கேள்விகளை மேலும் மேலும் அடுக்கிக் கொண்டே போனாள்.

அதன் பேரில் கமலியும் தனக்குத் தெரிந்த வரையில் எல்லாம் விவரமாகக் கூறினாள். சிவகாமி நாட்டியமாடுவதற்காக வரப் போகும் செய்தி யுத்தத்துக்குப் போனவர்களுக்குத் தெரிந்திருக்கவே நியாய

யில்லையென்றும், தனக்கே இன்றுதான் தெரியுமென்றும் சொன்னான். எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த பின், சிவகாமி, "அக்கா! நீ ஒன்றும் தப்பாக நினைத்துக் கொள்ளாதே! உன்னை நான் பார்த்து எத்தனையோ நாளாயிற்று. உன்னோடு பேசுவதற்கு எத்தனையோ விஷயங்கள் இருக்கின்றன. உன் குழந்தை-இந்தக் கண்மணியோடு - எத்தனை யுகம் கொஞ்சினாலும் எனக்கு ஆசை தீராது. ஆனாலும் நான் இப்போது இங்கே இருப்பதற்கில்லை. மண்டபப் பட்டுக்கு உடனே கிளம்பியாக வேண்டும். அப்பாவிடம் இதோ சொல்லப் போகிறேன்!" என்றாள்.

பதினெட்டாம் அத்தியாயம்

"புலிகேசிக்குத் தெரியுமா?"

மறுநாள் மாலை கண்ணபிரானுடைய வீட்டுக் கூடத்தில் ஆயனர், சிவகாமி, கமலி, கமலியின் மாமனார் ஆகியவர்கள் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். புலிகேசியும் மகேந்திர பல்லவரும் நகர்வலம் வந்தது பற்றியும், அவர்கள் வடக்குக் கோட்டை வாசலில் ஒருவரிடம் ஒருவர் விடை பெற்றுக்கொண்ட காட்சியைப் பற்றியும், புலிகேசி அக்கோட்டை வாசல் வழியாக வெளியேறியது பற்றியும் யோகி அசுவபாலர் மற்றவர்களுக்குச் சொல்லிக் கொண்டிருந்தார். புலிகேசி காஞ்சிக்கு விஜயம் செய்த நாளிலிருந்து அந்த யோகி தமது யோக சாதனத்தை அடியோடு மறந்து நகரில நடந்த களியாட்டங்களில் ஈடுபட்டிருந்தார் என்பதையும் இங்கே குறிப்பிட்டு வைக்க வேண்டியிருக்கிறது.



மேற்படி பேச்சுக்கு இடையிடையே அங்கே தவழ்ந்து வட்டமிட்டுக் கொண்டிருந்த சின்னக் கண்ணன் அவர்களுடைய கவனத்தைக் கவர முயற்சித்தான். கமலியும் அவனுடைய நோக்கத்துக்குத் துணை செய்கிறவளாய், பேச்சை மறித்து, சின்னக் கண்ணனுடைய பிரதாபங்களை அவர்களுக்கு எடுத்துச் சொல்லிக்கொண்டிருந்தாள். அப்போதெல்லாம் அசுவபாலர் அவனை, "ஐயோ! பைத்தியமே! இப்படியும் ஒரு அசடு உண்டா?" என்று சொல்லும் தோரணையில் பார்த்து விட்டு, மேலே தமது வரலாற்றைத் தொடங்கினார்.

எல்லாம் முடிந்ததும், சிவகாமி, "மாமா! வாதாபி ராஜாதான் போய்த் தொலைந்து விட்டாரே? கோட்டைக் கதவுகளை இனிமேல் திறந்து விடுவார்கள் அல்லவா?" என்று கேட்டாள்.

"எல்லாம் நாளை மறுநாள் தெரிந்து விடும், அம்மா! எனக்கென்னவோ அவ்வளவு நம்பிக்கை ஏற்படவில்லை. அந்த வாதாபி சளுக்கனுடைய முகத்தில் பத்து நாளாக இருந்த முகமலர்ச்சியை இன்றைக்குக் காணோம். பல்லவரிடம் விடை பெற்று வெளியே போகும் சமயத்தில் முகத்தைக் கடுகடுவென்று காட்டுப் பூனை மாதிரி வைத்துக் கொண்டிருந்தான்! அந்த ராட்சதன் என்ன செய்கிறானோ, என்னமோ?"

"அப்படி என்ன செய்து விடுவான்?" என்று சிவகாமி கேட்டாள்.

"அடியைப் பிடியடா பாரதபட்டா என்று மறுபடியும் கோட்டையை முற்றுகை போடத் தொடங்கலாம். அல்லது கோட்டையைத் தாக்கிப் பிடிக்க முயற்சிக்கலாம்."

"அப்படியெல்லாம் செய்வார்களா, என்ன? இத்தனை நாள் இவ்வளவு சிநேகம் கொண்டாடி விட்டு?" என்று சிவகாமி வியப்புடன் கேட்டாள்.



"தங்கச்சி! இது என்ன நீகூட இப்படிக் கேட்கிறாயே? இராஜ குலத்தினருக்கு வியவஸ்தை ஏது? இன்றைக்குச் சிநேகிதர்களாயிருப்பார்கள்; நாளைக்குக் குத்திக் கொல்லுவார்கள். இன்றைக்குப் பெண் கொடுத்துச் சம்பந்தியாவார்கள்; நாளைக்குப் போர்க்களத்தில் சண்டை போடுவார்கள். இராஜாக்களுடைய போக்கே வேறுதான்!" என்றாள் கமலி.

ஆயனர், தமது சிநேகிதர் அசுவபாலரைப் பார்த்து, "வாதாபி அரசனுக்கு என்ன கோபமாம்? ஏதாவது தெரியுமா?" என்று கேட்டார்.

"சளுக்கனும் பாண்டியனும் சிநேகிதர்களாம். கொள்ளிடக் கரையில இரண்டு பேரும் ரொம்ப ரொம்ப உறவு கொண்டாடினார்களாம். சளுக்கன் இங்கே வந்திருக்கும்போது, மாமல்லர் பாண்டியன் மீது படையெடுத்துச் சென்றதில் இவனுக்குக் கோபம் என்று சிலர் சொல்கிறார்கள். இன்னும் ஒரு அபிப்பிராயம் என்ன தெரியுமா?......" என்று அசுவபாலர் நிறுத்தினார்.

"என்ன, சொல்லுங்களேன்?" என்றார் ஆயனர்.

"பிரமாதம் ஒன்றும் இல்லை. சிவகாமியின் நடனத்தைப் பார்த்து விட்டு மயங்கிப் போய் வாதாபி அரசர் சிவகாமியைத் தன்னுடன் அனுப்பும்படி கேட்டாராம். பல்லவேந்திரர் மறுத்து விட்டாராம்! — அதனால்தான் புலிகேசிக்குக் கோபமாம்!" என்றார் அசுவபாலர்.

"அவன் நாசமாய்ப் போக! தலையிலே இடி விழ!" என்றாள் கமலி அழுத்தந் திருத்தமாக.

அப்போது, "ஆஹா! இவ்வளவு திவ்யமான ஆசீர்வாதம் யார் வாயிலிருந்து வருகிறது?" என்று ஒரு குரல் கேட்டதும், அனைவரும் திடுக்கிட்டு எழுந்து நின்று, குரல் வந்த பக்கத்தைப்

பார்த்தார்கள். அந்தக் கம்பீரமான குரல் சின்னக் கண்ணனுடைய கவனத்தைக் கூடக் கவர்ந்து விட்டதாகத் தோன்றியது. அவனும் உட்கார்ந்தபடியே ஆவலுடன் குரல் வந்த திசையை நோக்கினான்.

வீட்டின் பின் வாசல் வழியாக உள்ளே வந்தவர் மகேந்திர பல்லவ சக்கரவர்த்திதான்.

• • •

"அசுவபாயரே! நீர் சொல்லிக் கொண்டிருந்த வதந்தி என் காதிலும் விழுந்தது. ஆனால் அது உண்மையல்ல. வாதாபி சக்கரவர்த்தி சிவகாமியைத் தம்முடன் அனுப்பும்படி என்னைக் கேட்கவில்லை. பின்னே, என்ன சொன்னார் தெரியுமா? 'இந்தப் பெண்ணுக்கு என்னமோ இவ்வளவு பிரமாத மரியாதை செய்கிறீரே? என்னுடன் வாதாபிக்கு அனுப்பினால் சாட்டையினால் அடித்து நாட்டியம் ஆடச் சொல்வேன்!' என்றார். அவ்வளவு ரஸிகர் அந்த மூர்க்க புலிகேசி!" என்றார் சக்கரவர்த்தி. அப்போது அவருடைய கண்களில் உண்மையான கோபத்துக்கும் வெறுப்புக்கும் அறிகுறி காணப்பட்டது.

அப்போது சிவகாமி ஒரு அடி முன் வந்து சக்கரவர்த்தியை ஏறிட்டுப் பார்த்து. "பிரபு! அப்பேர்ப்பட்ட பரம ரஸிகரின் முன்னிலையிலே என்னை நாட்டியம் ஆடச் சொன்னீர்களே! அது தர்மமா?" என்று கம்பீரமாகக் கேட்டாள்.

"அது தவறுதான், குழந்தாய்! புலிகேசியின் முன்னால் உன்னை நான் ஆடியிருக்கச் சொல்லக் கூடாதுதான். ஆனால் நான் கண்டேனா? அஜந்தாவின் அற்புத வர்ண சித்திரங்கள் எவனுடைய இராஜ்யத்தில் உள்ளனவோ, அவன் இப்பேர்ப்பட்ட ரஸிகத் தன்மை யற்ற மூர்க்கனாயிருப்பான் என்று நான் கண்டேனா?... ஆயனரே! ஒரு செய்தி கேட்டீரா? காஞ்சிக் கோட்டைக்கு வெளியே இத்தனை மாதம் சளுக்க சக்கரவர்த்தி தண்டு இறங்கியிருந்தாரல்லவா? ஒரு தடவையாவது மாமல்லபுரத்துக்குப் போய் அவர் பார்க்கவில்லையாம்! நான் கேட்டதற்கு, 'ஆமாம்; உயிருள்ள மனிதர்கள் இருக்கும்போது, வெறும் கல் பதுமைகளை யார் போய்ப் பார்த்துக் கொண்டிருப்பது?' என்று விடை சொன்னார். இது மட்டுமா ஆயனரே! 'அஜந்தாவிலே அப்படி என்ன பிரமாதமாயிருக்கிறது? சுவரில எழுதிய வெறும் சித்திரங்கள் தானே?' என்றார். இப்பேர்ப்பட்ட மனுஷரிடந்தான் அஜந்தா வர்ண இரகசியத்தை அறிந்து வரும் பொருட்டு நாகநந்தியின் ஓலையுடன் பரஞ்சோதியை நீர் அனுப்பி வைத்தீர்; உமக்கு அது ஞாபகமிருக்கிறதா ஆயனரே!" என்று மகேந்திர பல்லவர் ஆயனரை நோக்கிக் கேட்டார்.

ஆயனருக்கு அப்போது உண்டான அளவு கடந்த ஆச்சரியத்தை அவருடைய முகக் குறி காட்டியது.

"பல்லவேந்திரா! உண்மையாகவா? வாதாபி சக்கரவர்த்திக்கா நாகநந்தி ஓலை கொடுத்து அனுப்பினார்? இது தங்களுக்கு எப்படி......?" என்று தயங்கவும்,

"...எப்படித் தெரிந்தது என்று தானே கேட்கிறீர்? ஓலையை நானே படித்துப் பார்த்தேன். ஆயனரே! நாகநந்தி எப்படியும் ரஸிகர். இந்த மூர்க்கப் புலிகேசியைப் போன்றவர் அல்ல. அவர் என்ன எழுதியிருந்தார், தெரியுமா? 'சைன்யத்துடன் சீக்கிரம் வந்து பல்லவ ராஜ்யத்தையும் காஞ்சி சுந்தரியையும் கைப்பற்றிக்கொள்; சிவகாமியை மட்டும் எனக்குக் கொடுத்து விடு!' என்று எழுதியிருந்தார். எப்படியிருக்கிறது, விஷயம்?... ஆயனரே! உம்முடைய அருமை சிநேகிதர் நாகநந்தியினால் இந்தப் பல்லவ ராஜ்யத்துக்கு எப்பேர்ப்பட்ட ஆபத்து வருவதற்கு இருந்தது, தெரியுமா?" என்றார் சக்கரவர்த்தி.

ஆனால், ஆயனரோ சக்கரவர்த்தி கடைசியாகக் கூறிய வார்த்தைகளைக் கவனித்தவராகக் காணப்படவில்லை. வேறு ஏதோ யோசனையில் ஆழ்ந்தவராகக் காணப்பட்டார். "ஆஹா! புத்த பிக்ஷு கொடுத்த ஓலை வாதாபி சக்கரவர்த்திக்கா?... அப்படியானால், அஜந்தா வர்ண இரகசியம் புலிகேசி மகாராஜாவுக்குத் தெரியுமா?" என்று தமக்குத் தாமே மெதுவான குரலில் சொல்லிக் கொண்டார்.

தாவரங்களின் இல்லறம்

"எல்லாம் நன்மைக்கே" என்று நம்புகிற பாக்கியசாலிகள் இந்தப் பூவுலகில் சிலர் உண்டு. நமக்கெல்லாம் சாதாரணமாய் அத்தகைய நம்பிக்கை ஏற்படுவதில்லை. சில சமயங்களில் அபூர்வமாய் ஏற்படுகிறது.

"தாவரங்களின் இல்லறம்" என்னும் இந்த அருமையான நூலைப் பார்த்தபோது, அந்த நம்பிக்கை நமக்கும் சிறிது ஏற்பட்டது.

ராஜாஜி அரசியல் உலகத்திலிருந்து விலக நேரிடுவதால், தேசத்துக்குச் சொல்ல முடியாத, அளவிலாத நஷ்டம் என்பது நமது உறுதியான எண்ணம்.

ஆனால், அதுகூட ஒரு வேளை நன்மைக்குத்தான் என்பதாக மேற்படி புத்தகத்தைப் பார்த்ததும் கருதினோம்.

அரசியல் உலகத்திலிருந்து விலகுவதினால் தானே ராஜாஜி இப்பேர்ப்பட்ட நூல்களை எழுதுவதில் ஈடுபட முடிகிறது? இதனால், தமிழும் தமிழுலகும் அடையும் நன்மைக்கு அளவு உண்டா?

• • •

புதிய விஞ்ஞான அறிவு நூல்கள் தமிழிலே வரவேண்டும் என்று எல்லாரும் சொல்கிறோம்.

ஆனால் அது எளிதான காரியமல்ல.

ஒரு விஞ்ஞான சாஸ்திரத்தைத் தமிழிலே கொண்டு வருவதென்றால், அப்படிக் கொண்டு வருகிறவர் முதலில் அந்த சாஸ்திரத்தை நன்றாய்த் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். பொட்டை நெட்டுருச் செய்து பரீட்சையில் தேறி யிருந்தால் போதாது. விஷயத்தை மனதிலே கிரகித்துத் தெளிவு பெற்றிருக்க வேண்டும். சந்தேகம், குழப்பம் ஒன்றும் இருக்கக் கூடாது.

அப்புறம், தெளிவான தமிழ் நடையிலே படிப்பவர்களுக்கு (இங்கிலீஷ் தெரியாதவர்களுக்குந்) தெளிவாய் விளங்கும்படியான முறையில் எழுத வேண்டும்.

"தமிழிலே எழுதிய புத்தகந்தான்; ஆனால் அதற்கு அர்த்தம் சொல்வதற்கு ஆசிரியர் வேண்டும்" என்ற நிலையில் புத்தகம் இருக்கக் கூடாது. அப்படி இருப்பதானால், அதற்கு இந்த சிரமம் ஒன்றும் இல்லாமல் இங்கிலீஷ் புத்தகத்தையே படித்து அர்த்தம் கேட்டுக் கொள்ளலாமல்லவா?

விஞ்ஞானம் தமிழுக்குப் புதிது. எனவே தமிழில் கொண்டு வருவதற்குப் புதிய தமிழ் வார்த்தைகளைக் கண்டு பிடிக்க வேண்டும். உபயோகிக்கும் வார்த்தைகள் ஐயத்திரிபுக்கு இடமில்லாதபடி சரியான இடத்தில் பொருத்தமான வார்த்தைகளாக இருக்க வேண்டும்.

இவ்வாறு விஞ்ஞான நூல்களைத் தமிழிலே கொண்டு வருவதற்கு என்னென்ன திறமைகள் வேண்டுமோ, அவை யெல்லாம் பூரணமாக உடையவர் இந்த நூலாசிரியர் என்று சொல்ல வேண்டியதில்லை.

"தாவரங்களின் இல்லறம்" என்று புத்தகத்துக்குப் பெயர் கொடுத்ததிலேயே "தாவர சாஸ்திரம்" என்பது ஒரு பயங்கர விஷயமா யிருப்பதற்குப் பதிலாக, நம்மோடு ஒட்டிய விஷயமாக, ரஸமாகப் படிக்கக்கூடிய விஷயமாக ஆகி விட்டது.

அப்புறம் புத்தகத்தின் முதல் பாராவைப் பாருங்கள் :—

"தாவரங்களுக்கு உயிர் உண்டு என்று ஆராய்ச்சிக்காரர்கள் சொன்னபோது அது மேல் நாட்டுப் பாமரர்களுக்கு வியப்பைத் தந்தது. ஆனால் நம் நாட்டில் அது புராதனமாகவே பெரியோர்கள் அனைவரும் கண்டு சொல்லிவந்த உண்மை. தாவரங்களுக்கு உயிர் இல்லை என்று யாரேனும் வாதாடினால் நம் நாட்டில் பாமரர்களுமே சிரிப்பார்கள். தாவரங்களும் பிராணிகளைப் போலவே உயிர் கொண்டு வாழும் ஜீவன்கள் என்பது உயிர் நூற் புலவர்களின் முடிவு."

இவ்விதம் படித்தவுடனே, "தாவர சாஸ்திரம் ஏதோ அன்னிய விஷயமல்ல; நமக்கே சொந்தமான விஷயம்; நம்மைத் தவிர வேறு யாரும் அதைப்பற்றிப் பேச லாயக்கில்லை" என்ற உணர்ச்சி நமக்கு ஏற்பட்டு விடுகிறது. அப்புறம் விஷயத்தைப் படிப்பதில் சலிப்பு ஏற்படுமா?

சலிப்பு ஏற்படாதது மட்டுமில்லை; படித்துக் கொண்டு போகப் போக இயற்கையின் பல்வேறு அற்புதங்களில் மனது ஈடுபட்டு விடுகிறது.

• • •

மரங்களில் பழங்கள் எதற்காக உண்டாகின்றன தெரியுமா? நீங்களும் நானும் ருசி பார்த்துச் சாப்பிடுவதற்காக அல்ல. மரங்களின் சந்தானங்கள் பல்கிப் பெருகுவதற்காகத்தான். இதைக் கேளுங்கள் :—

"தாய்மரத்தின் அடியிலேயே விதைகள் நிலத்தில் விழுந்து முளைத்த செடிகள் சரியாக வளர்ந்து விருத்தியாவதற்குச் சௌகரியம் இராது. வெய்யில் படுவதற்கு வசதி இராது. இட நெருக்கடி நேரிடும்......

இதற்காகத்தான் தாவரங்கள் பலவித இனிப்பான பழங்களை உண்டாக்குகின்றன. பழங்களைத் தேடிப் பறவைகளும் பிராணிகளும் வருகின்றன. பழத்தைத் தின்றுவிட்டு விதைகளைப் பல இடங்களில் போடுகின்றன. விதைகளையும் கடித்துத் தின்று விடாமல் இருப்பதற்காக அவை கடினமாகவும் ருசியற்றும் இருக்கும். பிராணிகளின் உதவியால் தாவர விதைகள் தாய்ச்செடி இருக்கும் இடத்திலிருந்து வெகு தூரத்திற்குக் கொண்டுபோகப் படுகின்றன. இதற்குக் கூலியாகவே பழத்தில் இருக்கும் இனிப்புப் பொருள் அமைந்திருக்கிறது."

• • •

பருத்திச் செடிகளில் பஞ்சு எதற்காக ஏற்பட்டது தெரியுமா? நீங்களும் நானும் துணி உடுத்திக் கொள்ளவோ, மெத்தை தலைகாணி தைத்துக் கொள்ளவோ மட்டும் அல்ல. இதைக் கேளுங்கள் :—

"பிராணிகளின் உதவியின்றிக் காற்றிலேயே பறந்து செல்லுவதற்காகச் சில காய்களும் விதைகளும் மிக லேசாக இருப்பதோடு இறகைப்போன்ற சாதனமும் கொண்டிருக்கும். வெடித்த விதை வெகு தூரம் பறந்து சென்று தகுந்த இடத்தில் அமைந்து செடியாக முளைத்து வளர்ந்து தன் குலத்தை

[ஆசிரியர்: சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்: பிரசுரம்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர்; விலை: ரூ. 1—8—0.]

விருத்தி செய்யும். பருத்தி விதையில் ஒட்டி நிற்கும் பஞ்சு இத்தவிதமான சாதனமே: நமக்குத் துணி உற்பத்தி செய்து கொடுப்பதற்கு உண்டானதல்ல. அவ்வாறு அமைந்திருப்பது அதனுடைய சந்தான விருத்திக்காகத்தான். இப்போது பஞ்சுக்காகவே நாம் அதைப் பயிர் செய்து வருகிறோம். இதை முதலில் அது எதிர்பார்க்கவில்லை. ஆனால் பஞ்சுக்காக நாம் அதைப் பயிர் செய்ய ஆரம்பித்த பிறகு, அதன் குலவிருத்தியும் நன்றாகவே நடைபெற்று வருகிறது. பருத்திச் செடி பஞ்சை லஞ்சமாகக் கொடுத்து மனிதனுடைய உதவியைப் பெற்றுக் குலவிருத்தி அடைகிறது.''

. . .

சில செடிகளின் எதற்காக முள் இருக்கிறது தெரியுமா? நம்முடைய காலிலே குத்திப் புண் செய்வதற்காக மட்டுமல்ல. இதைக் கேளுங்கள்:—

''இடம் விட்டு இடம் போகச் சில விதைகளில் உள்ள முள்ளுகள் உதவுகின்றன. பிராணிகளின் மேல் ஒட்டிக்கொண்டு வெகு தூரம் கொண்டு போகப்பட்டு வேறு இடங்களில் மண்ணில் பதிகின்றன. இதற்காகவே அந்த இனங்களில் முள்ளுகள் உண்டாகியிருக்கின்றன. காட்டில் நடந்தால் நெருஞ்சி முள் காலில் பற்றிக் கொள்ளுகிறது. துணியில் பலவித முள் விதைகள் ஒட்டிக் கொள்கின்றன. கொஞ்ச தூரமோ வெகுதூரமோ சென்று அவற்றைப் பிடுங்கி எறிகிறோம். அவை மண்ணில் கிடந்து மழை வந்ததும் முளைக்கின்றன. காட்டு மிருகங்களின் உடலில் இவ்வாறே பல்லாண்டுகளாக அந்த முட்கள் ஒட்டிப் பரவி விஸ்தாரமாகப் பயிராயின.''

ஆசிரியர் ஓரிடத்தில் பின்வருமாறு இயற்கை அற்புதங்களைப் பற்றித் தமது வியப்பைத் தெரிவிக்கிறார்:—

''உள்ளே புகுந்து பார்க்கப் பார்க்க இயற்கை ஆராய்ச்சியில் காணக்கூடிய விநோதமும் ரசமும் எந்தக் கட்டுக் கதையிலும் காண்பதரிது.''

இதில் யாதொரு சந்தேகமும் இல்லை என்பதற்கு இந்தப் புத்தகமே அத்தாட்சி.

நவயுவன்—ஆண்டு மலர்

''கல்கி'' சித்திரக்காரர் மணியம் தீட்டிய கண் கவரும் வனப்புடைய அட்டைப் படத்துடன் ''நவயுவன்'' ஆண்டு மலர் வெளி வந்திருக்கிறது. கல்கி, ராஜாஜி, டி.கே.சி. முதலிய அறிஞர்களுடன் பல இளம் எழுத்தாளர்களின் கட்டுரைகள்—கதைகள்—கற்பனைகள் அடங்கி யிருக்கின்றன. விஷயங்கள் எல்லாம் மிக ரஸமாயும் படிப்பதற்கு சுவாரஸ்யமாயும் இருக்கின்றன. பத்திரிகை முகப்பில் வெளியாகி யிருக்கும் ஆசிரியர் குறிப்பை மட்டும் நாம் அவ்வளவாக ரஸிக்கவில்லை. ஒரு சிறு விஷயத்தை ரொம்பப் பிரமாதப் படுத்தி விருப்பதாகத் தோன்றுகிறது.

நாளது 1945-ம் ஆண்டிற்கு இதுதான் முதலாவது ஆண்டு மலர் என்று நினைக்கிறோம். இந்த முதல் மலர் இவ்வளவு அழகாயும் உயர்வாயு மிருப்பதால், தமிழ்நாட்டில் இந்த வருஷம் வரப்போகும் ஆண்டு மலர்கள் எல்லாம் நன்கு யிருக்கப்போவதற்கு இது ஒரு சுப சகுனம் என்று கருதுகிறோம்.

விலாசம்:— ''நவயுவன்'' காரியாலயம், கங்குராம செட்டி தெரு, ஜி. டி., மதராஸ்; விலை: ரூ. 1—8—0.



இந்தியாவிற்காகவும் உங்களுக்காகவும்
சிக்கனக் குறிப்புக்கள்
இந்தக் காலத்தில் ஏழைகளுக்கு உதவும் பொருட்டு நாம் எல்லோரும் அநேக சாமான்களைக் குறைவாகவே உபயோகிக்க வேண்டும். அவற்றைக் குறைவாக உபயோகிப்பதின் மூலம் அவை மிக அவசியமாக தேவையுள்ளவர்களுக்கு அதிகம் கிடைக்கும்படி செய்கிறீர்கள்.
நாகரிகமுங்கூட.
மற்றுமொரு நன்மையும் இதனால் உண்டு. பழைய சாமான்களைக் கொண்டே காலம் கடத்துவதாலும், சிக்கன முறையைக் கையாளுவதாலும் அதிகத் தொகை மிச்சமாகிறது. விலைகள் குறைந்தபோது பொருட்களை வாங்க அதிக ரூபாய்கள் கையில் இருக்கும்.
பொருட்களை மீதமாய்ச் செலவிட்டு, அவை தாராளமாய்க் கிடைக்கும்படி செய்யுங்கள்.
1
பற்பசைகளை சிக்கனமாய் உபயோகியுங்கள். பழைய ட்யூப்களை குப்பைக் கடைகளுக்கு அனுப்புங்கள்.
2
சமீபத்தில் உள்ள இடங்களுக்கு நடந்தோ அல்லது சைக்கிளிலோ சென்று, பணத்தை மிச்சப்படுத்துங்கள்.
3
ஒவ்வொரு வேளை ஆகாரத்திற்கும் உணவு வகைகளைக் குறையுங்கள்.
4
நன்கு பராமரிக்கப்பட்ட விளக்குக்கு, குறைவான மண்ணெண்ணெய் போதும்.
5
புது நகைகள் வாங்காதீர்கள். நீங்கள் அதற்குக் கொடுக்கும் விலைக்கு, அது தகுந்ததல்ல.
6
பென்சில், இங்க், எழுதும் தாள் முதலிய எல்லா ஸ்டேஷனரி சாமான்களிலும் சிக்கனத்தைக் கையாளுங்கள்.
உங்களுக்கு இன்றியமையாதவை தவிர பிறவற்றை வாங்காதீர்கள்
இந்திய சர்க்கார் இ. & பி. இலாகா வெளியீடு

மனச் சாட்சி

வஸந்தன்

ஆஸ்பத்திரியில் நர்ஸ் உத்தியோகம் பார்க்க வந்தபோது, இந்தமாதிரி கதை எழுதுவதற்கு எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்குமென்று நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. எதிர்பார்க்கிறபடியே எல்லாம் நடந்து விட்டால் அப்புறம் இது என்ன உலகம்! ஆனால், கதை எழுதுவதற்குக் காரணம் முற்றிலும் நானே தான் என்று சொல்ல முடியாது. மிகவும் அதிசயமான, விபரீதமான சம்பவங்கள் என் கண் முன்னே நடக்கும்போது அதை நான் எப்படி வெளியிடாமல் இருப்பது? எத்தனையோ கதாசிரியர்கள் கதைகளுக்குக் காது, மூக்கு வைத்து நிஜம்போல் எழுதி விடுகிறார்கள். நான் மட்டும் நிஜமாக நடந்ததை இங்கே கதை போல் எழுதியிருக்கிறேன். இதை வாசிக்கிறவர்களுக்கு ஒரு வேளை தலைவலி ஏற்பட்டாலும் ஆஸ்பத்திரியில் நான் இருக்கவே இருக்கிறேன். ஆகவே பயமில்லாமல் தாராளமாய்ப் படிக்கலாம்:

அன்று காலை நேரத்தில் ஜன்னல் வழியாக இளம் வெய்யில் என் மேல் உறைக்கவே, படுக்கையை விட்டு எழுந்திருந்தேன். அன்று பகல் வேலை. அவசரம் அவசரமாக ஆஸ்பத்திரிக்குப் புறப்படத் தயார் செய்து கொண்டேன். ஆஸ்பத்திரியில் என் அறைக்குப் போய் உடுப்பை மாற்றிக் கொண்டு வார்டுக்குப் போய்ச் சேர்ந்தேன்.

இரண்டு தினங்களுக்கு முன்புதான் என்னை ஸ்பெஷல் வார்டுக்கு மாற்றியிருந்தார்கள். தினம் ஐந்து, பத்து என்று பணம் கொடுப்பவர்களே அந்த வார்டில் சேர்த்துக் கொள்ளப்படுவது வழக்கம்.

உள்ளே நான் சென்றதுமே, பரிமளம் "ஸரோஜா! நேற்று ராத்திரி புதிய கேஸ் ஒன்று வந்திருக்கிறது. ஒரு கிழவர் வந்திருக்கிறார். மூன்றாவது அறையில்!" என்றாள். நான் மூன்றாவது அறைக்குள் சென்று எட்டிப் பார்த்தேன்.

கட்டிலில் ஒருவர் படுத்துக் கொண்டிருந்தார். அவருக்குச் சுமார் ஐம்பது வயதிருக்கும். முகத்தில் பல சுருக்கங்கள் விழுந்திருந்தன. அவரது சின்னஞ்சிறு தாடியைப் பார்த்ததுமே ஆறு மாத காலமாக அவர் கடுமையான நோய்வாய்ப் பட்டிருக்க வேண்டுமெனத் தோன்றியது. அவர் தூய கதர் ஆடை அணிந்திருந்தார். பெரிய விழிகளில் அயர்வு குடிகொண்டிருந்தது. "கொஞ்சம் ஜலம் வேண்டும்" என்றார் அவர் என்னைப் பார்த்து. நான் ஜலத்தைக் கொண்டு வந்து கொடுத்து விட்டு, "காய்ச்சல் ஏதாவது அடிக்கிறதா? உடம்பை என்ன செய்கிறது?" என்று கேட்டேன். பெருமூச்சு விட்டுக் கொண்டே, வார்த்தை வார்த்தையாக அவர் மெதுவாகக் கூறினார்:—

"எனக்கு ஒரு வருஷமாகப் பொறுக்க முடியாத வயிற்றுவலி. முப்பது வருஷமாக நான் கல்கத்தாவில்தான் இருந்தேன். எவ்வளவோ வைத்தியர்கள் வைத்தியம் செய்தும் என் வியாதி குணமாகவில்லை. வியாதி முற்றிவிடவே, பிராணனை விட்டாலும் நான் பிறந்து வளர்ந்த தமிழ் நாட்டிலேயே உயிரை விடலாமென்றுதான் போன வாரம் இங்கே புறப்பட்டு வந்தேன்" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டார். அவர் சிறிது நேரம் பேசியதால் மிகவும் களைப்பு அடைந்ததாகத் தோன்றியது. "அதிகமாகப் பேசினால் உடம்புக்கு ஆகாது. தாங்கள் சில நாளைக்காவது கண்டிப்பாய் மௌனவிரதம் எடுத்துக்



மாஜிஸ்டிரேட் (வாதியைப் பார்த்து):— உங்கள் கைக் குட்டையைத் திருடியது இவன்தான் என்று எப்படிச் சொல்கிறீர்கள்? இந்த மாதிரி கைக்குட்டை என்னிடமும் ஒன்று இருக்கிறது.

வாதி:— ஆம் பிரபு, அந்த மாதிரி கைக்குட்டைகள் என்னிடம் இரண்டு இருந்தன. இரண்டையும் காணோம்!

கொன்ன வேண்டும்" என்று சொல்லி விட்டு வெளியே வந்தேன்.

சற்று நேரத்திற்கெல்லாம் டாக்டர் சுதரிசனம் வந்து விட்டார். பரீட்சை செய்து முடித்தாகி விட்டது. வயிற்றில் ஏதோ கோளாறு இருப்பதாகவும், பரிசீலனை செய்து வியாதியைக் கண்டு பிடிக்க நான்கு நாள் ஆகுமென்றும் அவர் தெரிவித்தார்.

அதிலிருந்து நோயாளிக்கு வேளா வேளையில் மருந்து கொடுத்துக் கவனித்துக்கொள்ளும் பொறுப்பு எனக்கு ஏற்பட்டது. கிழவர் என்னிடம் மிகவும் அன்பாயிருந்தார். அவ்வப்பொழுது அவர் வயிற்றுவலி மூளும்போது நான் வேதனையால் வருந்தினேன். ஏனோ அவருக்குச் சிசுருஷை செய்வதில் எனக்குப் பெரும் மனச்சாந்தியும் ஆனந்தமும் ஏற்பட்டது. தினசரிப் பத்திரிகைகளையும் புத்தகங்களையும் என்னை வாசிக்கச் சொல்லிக் கேட்டார். அதை நான் பெரும் பாக்கியமாகவே கருதினேன்.

அந்த நோயாளியின் பெயர் ராவ்பகதூர் குருஸ்வாமி. கல்கத்தாவில் குடியேறிய தமிழர்களுக்கு அவரைத் தெரியாமல் இருக்க முடியாது. பல மில்களில் டைரக்டர் உத்தியோகம் பார்த்து வந்தார். யாரும் சொந்தக்காரர்களே கிடையாது.—இதெல்லாம் அவர் சொல்லித் தெரிந்து கொண்டேன்.

ஐந்தாவது நாள் சுதரிசனம் ராவ்பகதூரைப் பரிசீலனை செய்துவிட்டு ஒரு திடுக்கிடத் தக்க செய்தியை வெளியிட்டார். நோயாளியின் வயிற்றில் ஒரு கட்டி இருப்பதாகவும் அதை இரண்டு தினங்களில் ஆபரேஷன் செய்யாவிட்டால் அவர் பிழைக்க முடியாது என்றும் தெரிவித்தார்.

"இந்த ஊரிலேயே ஆபரேஷன் செய்வதில் டாக்டர் சுந்தாதான் ரொம்பக் கெட்டிக்காரர். அவர்தான் உங்களுக்கு ஆபரேஷன் செய்ய வேண்டும். அவரைக் கூப்பிடட்டுமா?" என்று கேட்டார். நோயாளியும் ஒப்புக் கொண்டார்.

டாக்டர் சுந்தா என்றதும் என் மனத்தில் 'சுருக்' கென்றது. அவரைக் கண்டாலே எனக்குக் கொஞ்சமும் பிடிப்பதில்லை. மகா அகம்பாவம் பிடித்தவர்; ஏழை எளியவர்களிடத்தில் கூடக் கொஞ்சமும் இரக்கம் இன்றிப் பணம் வாங்குபவர் என்று பிரசித்தமாயிருந்தார்.

டாக்டர் சுதரிசனம் ரண சிகிச்சையில் தேறியவரல்ல. ஆனால், ஆபரேஷன் கேஸ்களில் சுந்தாவை மிஞ்சுபவர் யாரும் இல்லை. எந்தச் சிக்கலான ஆபரேஷன் கேஸ்கள் வந்தாலும், அவரைத்தான் டாக்டர் சுதரிசனம் கூப்பிட்டு அனுப்பி வைப்பார். சுந்தா எப்பொழுது ஆஸ்பத்திரிக்கு வந்தாலும், நான் அவர் எதிரில் கூட வருவது கிடையாது. அவர் முகத்தில் விழிப்பது கூட எனக்கு வேப்பங்காயாக இருக்கும்.



சிறிது நேரத்திற்கெல்லாம் டாக்டர் சுந்தா பின் தொடர சுதரிசனம் உள்ளே வந்தார். நான் அப்பொழுது நோயாளியின் அருகில் நின்று கொண்டிருந்தேன்.

சுந்தா உள்ளே வந்ததும் அவர் பார்வை நோயாளியின் மேல் விழுந்தது. அந்தக் கணத்தில் சுந்தா பிரமித்து நின்று விட்டார். இடியால் தாக்குண்டவர் போலவும், பார்க்கக் கூடாததைப் பார்த்து விட்டவர் போலவும் நின்றார். சட்டென்று நான் நோயாளியைப் பார்த்தேன். அவர் முகம் கோரமாக மாறியிருந்தது. அவர் கண்கள் இரண்டு நெருப்புப் பந்துகளைப் போல் தகித்தன. அப்படியே அந்தப் பார்வையால் டாக்டர் சுந்தா பஸ்மீகரமாகி விடுவார் என்று தோன்றியது.

இதெல்லாம் ஒரு கணத்தில் நடந்தது தான். சுதரிசனம் இதைக் கவனிக்கவில்லை. அவர் நோயாளியைச் சுந்தாவுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

டாக்டர் சுந்தா தம்மைச் சமாளித்துக் கொள்ளப் பெருமுயற்சி செய்ததைப் பார்த்தேன். அவரது விரல்கள் நடுங்கிக் கொண்டிருந்தன. ஆனால் சற்றுமுன் புயல் வீசிய ராவ்பகதூரின் முகத்தில் மறுபடியும் எப்பொழுதும்போல் சாந்தம் குடிகொண்டிருந்தது.

டாக்டர் சுந்தா நோயாளியைப் பரீட்சை செய்து பார்த்தார். இரண்டு டாக்டர்களுமாகச் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். கடைசியில்



அந்த நிமிஷத்தில் ஆபரேஷன் முடிந்தது.

அன்று சாயங்காலமே ஆபரேஷன் செய்வதென்று முடிவு செய்யப்பட்டது.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. ராவ்பகதூரும் கந்தாவும் முன்பின் பழக்கமானவர்களா? அல்லது சொந்தக்காரர்களா? எதற்காக இருவரும் இப்படி மிரள மிரள விழிக்க வேண்டும்? வெகு காலமாக இருவருக்கும் ஏதோ அசாத்திரம் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் முகமும் இவ்வளவு கோரமாக மாற வேண்டியதில்லை.

ராவ்பகதூர் குருஸ்வாமியையே மெதுவாகக் கேட்டு இந்த மர்மத்தைத் தெரிந்து கொள்ளலாமா? அல்லது யார் எக்கேடு கெட்டுப் போனாலென்னவென்று ஏனோதானோ என்று இருந்து விடலாமா? உலகத்திலேயே விரக்தி ஏற்படும் அளவுக்கு நான் ஞானியாகி விடவில்லை. சின்னஞ்சிறு விஷயங்களைக் கூடத் தூண்டித் துருப்பிடித்துக் கேட்பது என் சுபாவம்.

ஆனால், ராவ்பகதூரை எப்படிக் கேட்பது? அவரோ பேச முடியாத நிலைமையில் இருக்கிறார். ஆபரேஷன் ஆகிக் குணமாகும் வரை இந்த மர்மத்தை அவரிடமிருந்து நான் தெரிந்து கொள்ள முடியாது. ஆனால் என் மனதில் ஒரு சந்தேகம் தோன்றலாயிற்று. டாக்டர் கந்தாதான் தமக்கு ஆபரேஷன் செய்யப் போகிறார் என்று தெரிந்து கொண்ட பிறகும் ராவ்பகதூர் ஆபரேஷன் செய்து கொள்ளச் சம்மதிப்பாரா? கந்தாவும் ஆபரேஷன் செய்வாரா? — என்றுதான். கடைசியில் இருவரும் சம்மதித்து விட்டார்கள் என்று தெரிந்ததும் நான் சொல்ல முடியாத பீதியடைந்தேன். எப்படியாவது வலி நின்றால் போதும் என்று நினைத்துத்தான் ராவ்பகதூர் தமக்குக் கொஞ்சமும் பிடிக்காத கந்தாவிடம் ஆபரேஷன் செய்து கொள்ளச் சம்மதித்திருக்க வேண்டும்.

சாயங்காலம் ஆறு மணிக்கு டாக்டர் கந்தா வந்து விட்டார். பெரும் புயல் அவர் முகத்தில் வீசிக்கொண்டிருந்ததைப் பார்த்தேன். சுதர்சனமும் கூட வந்து கொண்டிருந்தார். அறைக்குள்ளே கந்தா வந்ததும், காலையில் நான் பார்த்த நாடகம் மீண்டும் ஒரு தடவை நடந்தது. ராவ் பகதூர், டாக்டரைப் பார்த்த பார்வை அவரது மனதையே ஊடுருவுவதுபோலிருந்தது.

"கந்தா!" என்று ராவ்பகதூர் கூப்பிட்டார். கந்தா அருகில் சென்றார். "இந்தத் தடவையாவது உன்னை நம்பலாமா?" என்று மெதுவாகக் கேட்டார் ராவ்பகதூர்.

கந்தா ஒரு கணம் பேசவில்லை. எப்பொழுதும் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் அவர் தேகம் அந்த நிமிஷத்தில் கூனிக் குறுகிப்போய் விட்டதாகத் தோன்றியது. உடம்பு வியர்த்துக் கொட்டியது. கைவிரல்கள்கூட நடுங்குவதைப் பார்த்தேன்.

"நிச்சயமாக நம்பலாம்" என்று கந்தா கூறியபோது அவரது குரல் நடுங்கிற்று.

அதற்குள் ஆபரேஷன் தியேட்டருக்குப் போயிருந்த சுதர்சனம் திரும்பி வந்து விட்டார். நோயாளியை ஆபரேஷன் தியேட்டருக்குத் தூக்கிச் செல்லும்படி உத்தரவிட்டார். என் மனத்தில் பெரும்புயல் அடித்தது. ராவ்பகதூர், 'நம்பலாமா?' என்று டாக்டர் கந்தாவைக் கேட்டது, ஏதோ மரண தண்டனையைப் போல் எனக்குக் குலை நடுக்கத்தை உண்டாக்கிற்று. இதற்கு முன் ஒரு தடவை கந்தா ஏதோ படுமோசம் செய்திருக்க வேண்டும் என்று ஏற்படுகிறதல்லவா? அது என்னவாயிருக்கக்கூடும்?

டாக்டர் சுந்தாவைப் பார்த்தேன். அவர் கைகள் நடுங்கிக் கொண்டிருந்தன. விக்ரஹம் போன்ற உணர்ச்சியற்ற அவர் முகம் பேயறைந்தது போலிருந்தது. கண்கள் பஞ்சடைந்து போயிருந்தன. வந்தது மோசம் என்று எண்ணினேன். அந்த நிலையில் சுந்தா வெற்றிகரமாக ஆபரேஷன் செய்ய எப்படி முடியும்?

சுந்தா கத்தியை எடுத்துவிட்டார். அந்தக் கணத்தில், அந்த இமைப் பொழுதில்தான், எதிர்பாராதது நடந்தது. கனவிலும் நினைக்காதது நடந்தது. அதாவது, சுந்தாவின் கைகள் இப்போது நடுங்கவில்லை. விகாரமடைந்த அவரது முகம் கருங்கல்லாக மாறிற்று. சுந்தா உணர்ச்சியை வென்றார். அந்தக் கணத்தில் என் மனத்தில் திடீரென்று ஆனந்தம் பாய்ந்தது. முதன் முதலாக என் வாழ்வில் சுந்தாவின் துணிவை வியந்தேன். குளோரபாரம் கொடுத்து, ஆபரேஷன் செய்து, தையலும் போட்டு விட்டார் சுந்தா. ஐந்தே நிமிஷத்தில் ஆபரேஷன் முடிந்தது.

ஒரு வாரம் ராவ்பகதூரை வெகு கவனமாகப் போஷித்து வந்தேன். கிழவரின் ஆரோக்கியமும் அபிவிருத்தி அடைந்தது. பிழைத்துக் கொள்வார், இனி பயம் இல்லை — என்று உணர்ந்தேன்.

ஆபரேஷன் ஆகிப் பதினைந்து நாட்கள் ஆயின. வார்டுக்கு எதிரிலுள்ள வேப்ப மரத்தடியில் ராவ்பகதூர் ஒரு தள்ளு வண்டியில் உட்கார்ந்திருந்தார். இத்தனை நாளாய் என் மனத்தை அரித்துக் கொண்டிருந்த கேள்வியைக் கேட்க அதுதான் சமயம் என்று எண்ணினேன்.



"ஏண்டா முனியா, திருப்பதிக்குப் போய் வந்தாயாமே, என்னடா விசேஷம்?"

"மாட்டுக்கு சீக்கா இருந்ததுங்களே. அதுக்கு வேண்டிக்கிட்டேனுங்க. அதற்காகத்தான் போய்வந்தேனுங்க."

"அதுக்கு ஏதுடா பணம்? உங்கிட்டே தான் பணம் இல்லேன்னு சொன்னியே!"

"அந்த மாட்டையே வித்துச் செலவு செய்துவிட்டு வந்தேன்......"

"தாத்தா! டாக்டர் சுந்தாவுக்கும் உங்களுக்கும் ஏதாவது சொந்தமா? 'இந்தத் தடவை நம்பலாமா?' என்று கேட்டீர்களே, ஏன்? எல்லா விஷயத்தையும் எனக்குச் சொல்லவேண்டும். மறைக்கக்கூடாது" என்று கெஞ்சிக் கேட்டேன்.

அவர் ஆழ்ந்த பெருமூச்சு விட்டார். என்னை ஏற இறங்கப் பார்த்து விட்டுப் பின் வருமாறு கூறினார்:—

"இந்தச் சுந்தா முன்னொரு தடவை துரோகம் செய்தது என்னவோ வாஸ்தவம்தான். மறுபடியும் அவனை நம்பி என் உயிரை அவன் கையில் ஒப்புவிக்கலாமா என்றுதான் 'நம்பலாமா?' என்று நான் கேட்டேன், அது மகாத் தப்பு என்று இப்பொழுதுதான் தெரிகிறது. ஆபரேஷனுக்கு முன்னால் 'நீ என்னைக் கட்டாயம் கொன்றுவிட வேண்டும்' என்று சுந்தாவை நான் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். உண்மையில் அதுதான் அவன் எனக்குச் செய்திருக்கக் கூடிய நல்ல உதவியாயிருந்திருக்கும்."

"நீங்கள் சொல்வது எனக்கு ஒன்றும் புரியவில்லையே!" என்றேன்.

"அம்மா! பழைய கதையை ஏன் கிளறுகிறாய்? சுந்தா, என் பையன் சங்கரனின் பள்ளிக்கூடத் தோழன். இருவரும் உயிருக்குயிராக இருந்து வந்தார்கள். என் மனைவி, சங்கரன் குழந்தையாக இருக்கும்போதே காலமாகி விட்டாள். சங்கரனிடம் நான் உயிரையே வைத்திருந்தேன். இதெல்லாம் தெரிந்து கூட சுந்தா என்னை மோசம் செய்து விட்டான், அம்மா!

"வைத்தியக் கலாசாலையில் அப்பொழுது இருவரும் படித்துக் கொண்டிருந்த சமயம். சங்கரனுக்கும் அவன் வகுப்பில் படித்து வந்த ஹேமாவுக்கும் சம்பந்தம் இருப்பதாக என் காதில் பராபரியாக விழுந்தது. நான் நேரில் சங்கரனிடம் எதையும் கேட்பதில்லை. அதுவும் இம்மாதிரி விஷயத்தை நேரில் எப்படிக் கேட்பது? நான் அவனைப் பற்றிக் கேள்விப் படுவதெல்லாம் உண்மைதானா என்று கடிதம் மூலமாக அவனுக்கு எழுதிக் கேட்டேன். அதற்குச் சங்கரன் எழுதிய கடிதத்தில், நான் கேள்விப் படுவது ரொம்ப சரியென்றும் ஹேமா

வைக் கல்யாணம் செய்து கொள்ளத் தனக்கு உத்தரவு கொடுக்கும்படியும் கேட்டிருந்தான்.

"இதில் எனக்குக் கொஞ்சமும் சம்மதம் இல்லை. அவர்கள் குடும்பமே நல்ல குடும்பம் அல்ல. அவர்களுடன் சம்பந்தம் செய்து கொண்டால் ஊரில் எல்லாரும் சிரிப்பார்கள் என்று நான் காரசாரமாக எழுதினேன். நான் இவ்வாறு எழுதிய கடிதங்கள் சிலவற்றைச் சங்கரன் சுந்தாவிடம் கொடுத்திருக்க வேண்டும். அதை உபயோகித்துத்தான் பின்னால் சுந்தா என்னைப் படுகுழியில் தள்ளி விட்டான்.

"இதற்குள் ஹேமாவின் தகப்பனுக்குப் பம்பாய்க்கு மாற்றலாகி விட்டது. சங்கரன் ஹேமாவை நினைத்து உயிரை விட்டுக் கொண்டிருந்தான். கொஞ்சம் கொஞ்சமாக என் கல் மனம் இளகிற்று. 'தொலைந்து போகட்டும்; ஹேமாவைக் கல்யாணம் செய்து கொண்டு பையன் சந்தோஷமாயிருக்கட்டும்' என்று தீர்மானித்தேன். ஆகவே, நான் சுந்தாவைக் கூப்பிட்டுப் பம்பாய்க்குப் போகச் சொன்னேன். ஏற்கெனவே நான் இந்தச் சம்பந்தத்துக்குக் குறுக்கே நின்றது அவர்களுக்குத் தெரியும். ஆகையால் விஷயத்தைப் பக்குவமாக எடுத்துச் சொல்லி கல்யாணத்தை ஏற்பாடு செய்து வரும்படி சுந்தாவை அனுப்பினேன். தன் சிநேகிதனுக்கு அவன் இப்படிப் பட்ட துரோகம் செய்வானென்று நான் நினைக்கவில்லை.

"அப்பொழுது நான் ஹேமாவின் தகப்பனுக்குக் கொடுத்திருந்த கடிதத்தை அவன் அவரிடம் கொடுக்கவில்லை என்று பின்னால் தெரிந்தது. ஆனால் நான் பல தடவை அவர்களைப் பற்றிக் காரசாரமாய்ச் சங்கரனுக்கு எழுதிய கடிதங்களை அவர்களிடம் கொடுத்து, என் மீது அவர்களுக்கு வெறுப்பு ஏற்படும்படி செய்து விட்டான். தங்களைப் பற்றி இவ்வளவு கேவலமாக நினைப்பவரின் பிள்ளைக்குப் பெண்ணைக் கொடுப்பதில் பிரயோசனமில்லை என்று அவர்கள் முடிவு செய்யும்படி செய்து விட்டான். அத்துடன் அவன் நிற்கவில்லை. ஹேமாவை அவனே கல்யாணமும் செய்து கொண்டு விட்டான்!" என்று கூறிப் பெருமூச்சுவிட்டார் ராவ்பகதூர்.

"அட பாவி!" என்றேன் நான்.

"அந்தத் துரோகம் செய்த பிறகு இந்த ஆஸ்பத்திரியில்தான் சுந்தாவின் முகத்தில் விழித்தேன்."

"அப்புறம் உங்கள் பையன் கதி?"

"அதை ஏன் கேட்கிறாய்? இந்த ஏக்கத்தில் அவன் படுக்கையாய்ப் படுத்து விட்டான். அதற்குப் பிறகு எழுந்திருக்கவேயில்லை" என்று சொல்லும்போது கிழவர் கண்களில் நீர் பெருகிற்று.

"என் துக்கத்துக்கு மூல காரணமான சுந்தா மேலும் அதை அனுபவிப்பதற்கு ஆயுளைக் கொடுத்தான். அவன் தான் என் விரோதி! பரம சத்துரு! அவனை வெளியில் விடப் போகிறதில்லை. பழி வாங்கியே தீருவேன்" என்றார் ராவ்பகதூர்.

அப்பொழுது ஒரு மோட்டார் வண்டி அருகில் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தோம். சுந்தா காரிலிருந்து இறங்கி வந்தார். அவருடன் கூட, கையில் குழந்தையுடன் வந்த பெண் ஹேமாவாகத்தான் இருக்கவேண்டும்.

"என்னை மன்னிக்க வேண்டும்" என்றார் சுந்தா.

ராவ்பகதூர் குருசாமி சுந்தாவை வெறித்துப் பார்த்தார். பிறகு ஹேமாவின் கையிலுள்ள சின்னஞ் சிறு குழந்தையைப் பார்த்தார். அவரது முகத்தில் மென்மை தோன்றியது. அதுவே சுந்தாவின் துரோகத்தை அவர் மன்னித்து விட்டதற்கு அறிகுறியாகவும் இருந்தது. ஒரு நிமிஷம் அமைதி நிலவியது. "வீட்டுக்குத் தங்களை அழைத்துப் போவதற்காக வந்திருக்கிறோம். இனிமேல் தாங்கள் என்னைச் சங்கரனாகவே பாவிக்க வேண்டும். தந்தையின் அன்பு எப்படியிருக்கும் என்பது எனக்குத் தெரியாது. மேலும், இத்தனை நாளாக என் மனச்சாட்சி ஓயாமல் உறுத்திக்கொண்டேயிருக்கிறது. என் குடும்பம் இனிமேலாவது சந்தோஷமாயிருக்க வேண்டுமென்றால் தாங்கள் கட்டாயம் என்னுடன் வர வேண்டும்" என்றார் சுந்தா.

ராவ்பகதூர் ஐந்து நிமிஷம் யோசனை செய்தார். பிறகு மெதுவாக எழுந்து அருகிலிருந்த காரில் ஏறிக்கொண்டு என்னைப் பார்த்துப் புன்முறுவல் செய்தார். "ஏற்கெனவே என் பிடிவாதத்தால் என் பையனின் சந்தோஷத்தைக் கெடுத்துவிட்டேன். மறுபடியும் மற்றொருவர் துன்பத்துக்கு நான் ஏன் காரணமாயிருக்கவேண்டும்? சுந்தாவின் வீட்டில்தான் கொஞ்ச நாள் இருக்கிறேனே" என்றார்.

சுந்தாவும் ஹேமாவும் ஏறிக்கொண்டதும் கார் புறப்பட்டு வெகு வேகமாகத் தூரத்தில் சென்று மறைந்தது.



தந்திரம் பலித்தது!

ராஜீ

அம்மா சொல்படியே நடந்து கொண்டு வந்தான் பாலு. அம்மாவுக்கு உதவியாகக் கடைக்குப் போய் சாமான்கள் வாங்கி வருவான். பள்ளிக்கூடம் போகும் நேரம் தவிர மற்ற நேரங்களில் அம்மாவின் பக்கத்தில் இருந்து கொண்டு வேண்டிய உதவிகளைச் செயது வருவான். ஆனால் வாசலில வேடிக்கை செய்யும் தொம்மங் கூத்தாடி வந்து விட்டால் பாலு ஒரே ஓட்டமாக ஓடி விடுவான். மாங்கொட்டையிலிருந்து மாஞ்செடி வருவதையும், கூடையில் காணமற் போன பெண் திரும்பி வருவதையும் கண்டு சந்தோஷம் அடைவான். பாலுவுக்கு எப்படியாவது தானும் மந்திரம் கற்றுக் கொண்டு வேடிக்கை செய்ய வேண்டுமென்று ஆசை.

அதிர்ஷ்ட வசமாக பாலுவுக்கு எங்கிருந்தோ ஒரு மந்திரப் புஸ்தகம் அகப்பட்டது. அப் புஸ்தகம் அகப்பட்டதிலிருந்து பாலு புஸ்தகத்தைப் படித்த வண்ணமாகவே இருந்தான். தன் தாயாருக்கு ஒரு உபகாரமும் செய்வதில்லை. ஒரு நாள் காலையில் அவன் தாயார் அடுப்பங்கரையில் உட்கார்ந்துகொண்டு தோசை வார்க்க ஆரம்பித்தாள். அப்பொழுது, "பாலு! உனக்குத் தோசை கிடையாது. இந்த மந்திரப் புஸ்தகம் வந்தது முதல் நீ ஒரு முழுச் சோம்பேறியாக மாறி விட்டாய்" என்றாள் அம்மா.

"அம்மா! அப்படிச் சொல்லாதே. இம் மந்திரப் புஸ்தகத்தின் உதவியால் இதோ தோசைகள் வரவழைக்கிறேன் பார்" என்று அடுப்பங்கரை அருகில் ஓடி வந்தான். "கடகடா குடுகுடு" "தடதடா துடுதுடு" என்று சொல்லிக் கொண்டே 'ஹிஹிஹி' என்று சிரித்தான்.



அவ்வளவுதான்! அடுத்த நிமிஷம் இலுப்பச் சட்டியில் கடக்கட ஓர் தோசை வந்தது. அதை ஆவலுடன் பாலுவும் அவன் தாயாரும் எடுத்துத் தின்றார்கள். ஒரு தோசையை எடுத்ததும் மற்றொரு தோசை வந்தது. அதையும் எடுக்கவே வேறு ஒரு தோசை கடக்கட வந்தது. சாதாரண தோசை, வெங்காயத் தோசை, ரவாத் தோசை எல்லாத் தோசைகளும் விதம் விதமாகச் கடக் கட வந்து கொண்டிருந்தன. பாலுவும் அவன் தாயாரும் தங்கள் வீடு முழுவதும் தோசைகளை அடுக்கிக் கொண்டே போனார்கள். இடம் போதாமல் மாடி முழுவதும் அடுக்கினார்கள். மேலும் தோசை வந்து கொண்டே இருந்தது. பாலுவுக்கும் அவன் தாயாருக்கும் என்ன செய்வது என்று தெரியவில்லை. தோசைகளை வாசல் திண்ணையில் அடுக்கினார்கள். தங்கள் வீட்டுத் திண்ணை போதாமல் அடுத்த வீட்டுத் திண்ணையிலும் தோசைகளை அடுக்கினார்கள்.

அந்தச் சமயத்தில் அவ் வழியே போலீஸ் உடை அணிந்து கொண்டு வந்த ஒருவன் தோசைகளைப் பார்த்து விட்டு ஸ்தம்பித்து நின்றான். உடனே இத் தோசைகளுக்குச் சொந்தக்காரர்கள் யார் என்று கேட்க, பாலுவும் அவன் தாயாரும் நாங்கள் தான் என்று நடுங்கிக் கொண்டே சொன்னார்கள். உடனே அச்சேவகன், "இந்த உணவு ரேஷன் காலத்தில் நீங்கள் எப்படி உணவைத் தெரியாமல் சேர்த்து வைத்திருக்கிறீர்கள்! இதோ,



நாய்க் குட்டியோ நாக்கை நீட்டிக்கொண்டு அருகில் உட்கார்ந்திருக்கிறது. கோபுவோ அத்தனை கவர்களையும் ஒட்டியாக வேண்டும். ஆகவே சீக்கிரம் வேலை முடிவதற்கு கோபு மேற்கண்ட யுக்தியைக் கையாண்டான்.

போய் நான் உளுந்து கண்ட்ரோலரை அழைத்து வந்து உங்களைக் கைது செய்கிறேன்!" என்று கோபத்துடன் சொன்னான்.


பாலுவின் தாயாருக்குக் கோபம் வந்தது. "பாலு! உன் மந்திரப் புஸ்தகத்தினால் வந்த கேடு அல்லவா இது? முதலில் உன் மந்திரப் புஸ்தகத்தைப் படித்துத் தோசையை நிறுத்துவதற்கு மந்திரம் சொல்லு" என்றாள்.

"அம்மா! நிறுத்துவதற்கு மந்திரம் ஒன்றையும் காணவில்லையே" என்றான் பாலு.

"இதென்ன அநியாயம்! இன்னும் தோசை வந்து கொண்டேயிருக்கிறதே!" என்று வருத்தப்பட்டாள்.

பாலு கெட்டிக்காரன். சற்று யோசித்தான். "அம்மா! தோசை வருவதற்கு மந்திரத்தைச் சொல்லி விட்டுச் சிரித்தேன் அல்லவா? இப்பொழுது அழுது பார்க்கிறேன்!" என்று அடுப்பங்கரைக்குச் சென்று "கடகடா, குடுகுடு, தடதடா, துடுதுடு" என்று சொல்லி விட்டுக் கண்ணையும் பிசைந்து கொண்டு அழ ஆரம்பித்தான். உடனே தோசை நின்றது. பாலுவின் தாயாரும் சந்தோஷம் அடைந்தாள்.

வீட்டிலிருக்கும் தோசையை என்ன பண்ணுவது என்று தெரியவில்லை. உளுந்து கண்ட்ரோலர் வருவதற்குள் பாலுவும் அவன் தாயாரும் அவ்வூர் ஏழைகளைக் கூப்பிட்டுத் தோசைகளை எல்லோருக்கும் பங்கிட்டுக் கொடுத்தார்கள். உளுந்து கண்ட்ரோலரும் போலீஸ் சேவகனும் வருவதற்குள் தோசைகள் அவ்வளவும் செலவழிந்து விடவே, அவர்கள் பேசாமல் திரும்பிச் சென்று விட்டார்கள். மறுநாள் காலையில் பாலுவும் அவன் தாயாரும் பக்கத்திலுள்ள தெப்பக் குளத்துக்குச் சென்று மந்திரப் புஸ்தகத்தைத் தொப்பென்று குளத்தில் போட்டு விட்டுத் தாங்களும் ஒரு முழுக்குப் போட்டு விட்டு வீடு திரும்பினார்கள்.



ஹெட்மாஸ்டர்:—எப்பொழுது பார்த்தாலும் இந்த வகுப்பிலிருந்து யாரோ ஏதோ பேசுகிற சப்தம் கேட்கிறதே, யார் அது?

ஒரு பையன்:—உபாத்தியாயர், ஸார்!

மெட்ரிகுலேஷன் பாஸ் செய்தவர்களுக்கு யுத்த சேவைகள்

இந்திய ஆர்மியில் மனக்கூர்மையுள்ள சிறுவர்களுக்கு நல்ல சந்தர்ப்பங்கள் தயாராயிருக்கின்றன. நல்ல சம்பளத்தில் இப்பொழுது உத்தியோகமும் யுத்தத்திற்கு பிறகு நிச்சயமுள்ள வாழ்க்கையும். எதேர்ச்சையான சில உதாரணங்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

மெட்ரிகுலேஷன் பாஸ் பண்ணவர்கள் (அல்லது அதற்கு சமமான படிப்புள்ளவர்கள்) அல்லது ஆர்மி படிப்பு பரீக்ஷை தேரக்கூடிய 9/10 ஜமாட்காரர்களும் இன்ஸ்டிருமென்ட் மெக்கானிக், ரேடியோ மெக்கானிக், வயர்லெஸ் மெக்கானிக்குகளாக இலவச பயிற்சி அடைய இந்திய ஆர்மியில் சேரலாம். டிரெயினிங் சமயம் சம்பளம் மாதம் ரூ. 59/4. டிரெயினிங் பிற்பாடு மாதம் ரூ. 63-ல் ஆரம்பித்து ரூ. 94/14 வரை உயரும். மேலும் யுத்தசேவை செய்பவர்கள் இலவசமாக ரேஷன், துணி, இடவசதி, வைத்திய சிகிச்சை, தாராளமான விடுமுறை நாட்கள், சிவிலியன்களுக்கு கிடைக்காத அனேக மதிப்பு வாய்ந்த சலுகைகளையும் பெறுகிறார்கள்.

மெட்ரிகுலேஷன் பாஸ் செய்தவர்கள் மேற்கொண்டு விவரங்களை கேழ்க்கும்படி அழைக்கப்படுகிறார்கள். புத்திசாலியான எந்த சிறுவனும் இந்த சந்தர்ப்பத்தை இழக்க இயலாது.

யுத்தபிந்தகாலம்? ஆயுதம் தாங்கிய சேவையிலிருந்த யுத்தத்திற்குப் பிறகு அனேக நலன்களை அடையலாம் என்பதை மறந்துவிடாதே. பட்டாளத்தில் பெரும் பயிற்சியும் அனுபவமும் லாபகரமான சிவில் வாழ்க்கைக்கு வேண்டிய யோக்யதாம்சங்களை கொடுக்கும் என்பதில் சந்தேகமேயில்லை. தற்காலம் காலியாகவேயிருக்கும் அனேக சர்க்கார் உத்தியோகங்கள் யுத்தத்தில் வேலை செய்தவர்களுக்கு கிடைக்கும். யுத்தம் நின்றதும் அனேக யுத்தசேவை செய்தவர்கள் சர்க்கார் செலவில் குறிப்பிட்ட கைத்தொழில்களில் பிரத்தியேக பயிற்சி அடையக்கூடும். தற்காலம் பல்கலைக் கழகத்திலிருக்கும் மாணவர்களுக்கு யுத்தத்திற்குப்பிறகு மதிப்பு வாய்ந்த சலுகைகள் அளிக்கப்படும். அதன்மூலம் அவர்கள் மேற்கொண்டும் படிக்கலாம். இதன் விவரங்கள் பல்கலைக்கழக அதிகாரிகளிடம் கிடைக்கும்.

மெட்ரிகுலேஷன் அல்லது அதற்கு சமமான படிப்பு உள்ள சிறுவர்கள் யுத்தசேவைக்கு விண்ணப்பித்துக்கொள்ள தாமதிக்கக்கூடாது. எல்லா விவரங்களையும் ஏதாவது ரெக்ரூட்டிங் ஆபீசில் பெறலாம்.

AAA 1589-A-TM.

வடக்கத்தியான் விஷயம்

சிம்லா,
2—5—45

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு.

தங்களுடைய ஏப்ரல் 22-ம் தேதி இதழில் "என்ன சேதி?" என்ற தலைப்பின்கீழ் "ஆட்சேபிக்கிறோம்", "இவர்களை அழைக்கிறோர்களா?" என்ற உபதலைப்புகளின் கீழ் எழுதியிருப்பதையும், "வங்கக்கவியும் தமிழ்க்கவியும்" என்ற தலைப்பின் கீழ் கோயம்புத்தூர் என். லக்ஷ்மணன் எழுதியிருப்பதையும் படித்த பிறகு வெகு நாளாக நான் எழுத விரும்பிய சில விஷயங்களை எழுதவேண்டுமென்று தோன்றுகிறது. நம் நாட்டு மக்களை உதாசீனம் செய்வதும், வட நாட்டாரை அளவுக்குமீறித் தலையில் வைத்துக்கொண்டு கூத்தாடுவதும் தமிழ்நாட்டாருக்கே உள்ள ஒரு பிரத்தியேகமான குணம். இதைக் கண்டித்து நீங்களும் மனச்சோர்வில்லாமல் எழுதி வருகிறீர்கள். ஆயினும் நம் நாட்டினரிடம் இருக்கும் அபார வடநாட்டு பக்தி போனதாகத் தெரியவில்லை.

இது சமயம் சில நாட்களுக்குமுன் நடந்த ஒரு சம்பவம் என் நினைவிற்கு வருகிறது. என் வங்க நண்பர் ஒருவரிடம் தென்னிந்தியரின் பெருமையைப்பற்றி நான் சொல்லிக்கொண்டிருந்தபோது, அவர், "சென்னை மாகாணம் இதுவரை ஒரே ஒரு பெரிய மனிதரைத்தான் நாட்டிற்கு அளித்திருக்கிறது; அவர்தான் காலஞ்சென்ற ஸர். சுப்பிரமணிய ஐயர்!" என்றார். அவர் இவ்வாறு சொல்வதற்குக் காரணம் என்னவென்று கேட்டதற்கு, "விவேகானந்தரை உலகம் போற்றும்படி செய்த திருப்பணியில் ஸர். சுப்பிரமணிய ஐயர் முக்கிய பங்கு எடுத்துக்கொண்டார். ஆதலால் அவரை நாங்கள் என்றும் மறக்கமுடியாது" என்றார். அதாவது என்ன? ஒரு வங்காளியின் கீர்த்தியில் விசேஷ சிரத்தை பூண்ட தென்னிந்தியரை ஒரு வங்காளி பெரியவனாக நினைக்கத் தயார்; மற்றக்காரணங்களால் தென்னிந்தியர்கள் கீர்த்தியடைந்தால் அதை ஒரு பொருட்டாக நினைக்க அவன் தயாராயில்லை!

அந்த வங்காளியின் மனப்போக்கு சரியென்று சொல்ல நான் முன்வரவில்லை. ஆனால் அவனுடைய மாகாண அபிமானம் இதில் எவ்வளவு தூரம் பிரதிபலிக்கிறது என்பதைக் காட்டத்தான் சொன்னேன். அவனாவது ஸர். சுப்பிரமணிய ஐயர் பெயரை ஞாபகம் வைத்திருக்கிறான். நம் நாட்டில் வயதான சில வக்கீல்களையும் கிடையாரான சில ஜட்ஜுகளையும் தவிர எவ்வளவுபேருக்கு அவர் பெயரைத் தெரியும்? கல்கத்தாவிற்குச் சென்றால் "சித்தரஞ்சன் அவென்யூ", "ஸர் அசுதோஷ் முகர்ஜி ரோடு", "ராஷ் பிஹாரி அவென்யூ", "பெபின்பால் ரோடு" என்று பார்க்கிறோம். நம் சென்னையிலோ "ரானடே ஹால்", "கோகலே ஹால்", "நேரு கபே" "திலகர் வாசகசாலை" என்று காண்கிறோம். அம்மட்டுமல்ல. "பண்டித மோதிலால் நேருவைப் பறி கொடுத்தோமே" என்று சீகாரிட்டு எடுத்துக் கல்யாண வீடு உட்பட எல்லா இடங்களிலும் அனைவரும் ஒப்பாரி வைக்கத் தயாராயிருக்கிறோம்! நம் தமிழ் நாட்டின் நிகரில்லா தியாகி சத்தியமூர்த்தி மாண்டபிறகு அவர் இடைவிடாமல் உழைத்த பூண்டித்தண்ணீர்த் தேக்கத்திற்கு அவர் பெயரை வைக்க மறுக்கிறோம்!

நமது 'சென்னை'ப் பத்திரிகை ஒன்றை எடுத்துப் பாருங்கள்; அத்துடன் வடநாட்டுப் பேப்பர் ஏதையாவது எடுத்துப் பாருங்கள். வடநாட்டைப்பற்றி செய்திகளும் வடநாட்டார் விட்ட அறிக்கைகளும் பஞ்சமில்லாமல் சென்னைப் பத்திரிகையில் இடம் பெறும். வடநாட்டுப் பத்திரிகைகளில் தென்னாட்டு சமாசாரம் அநேகமாக இராது. ஒரு படேலும், நாகின்தாஸ் மாஸ்டரும் விடும் அறிக்கைகளும், பேசும் பேச்சுக்களும் இங்குள்ள பத்திரிகைகளை அடைத்துக்கொண்டு வரும். முத்துரங்க முதலியார் பெயரையோ, அண்ணாமலைப் பிள்ளை பெயரையோ ஒருமுறைகூட வடநாட்டுப் பத்திரிகைகளில் காண முடிவதில்லை.

நம் நாட்டில் மேதாவியான வக்கீல்கள் இருப்பார்கள். ஆயினும் வெளிமாகாணங்களிலிருந்து வரவழைப்பதில் ஒரு பெருமை.



"மச்சான்! அந்தப் பயல் என்னைக் குடிகாரன்னு சொன்னானே, அவனை நான் லேசிலே விட்டுடுவேன்னு நினைக்கிறே? என்னை வீரன் மகன்னு நினைச்சானு. வெறும் பயல்னு நினைச்சானு? 'சாகத் துணிஞ்சவனுக்குச் சமுத்திரம் முழங்கால் அளவு' மச்சான்! என்ன ஆனாலும் அவனை ஒரு கை பார்த்தே விடுகிறேன்!" என்றான் சாமு சோமுவிடம்.

"மச்சான், பதறாதே! பொறுமைக்கு அழிவில்லை. வா, இப்படியே குறுக்கே வாய்க்காலிலே இறங்கிப் போய்விடுவோம்" என்று சாமுவின் கையைப் பிடித்து இழுக்கான் சோமு.

"ஊஹூம்......வேணும் மச்சான்! வாய்க்காலிலே இடுப்பளவு தண்ணி இருக்கு! எதுக்கு வம்பு? வளைந்த வழியோடே போய் விடுவோம். வா, மச்சான்!" என்று கத்தினான் சாமு.

—நந்தன்.

அவர்களுடைய வாதங்கள் ரொம்ப சாதாரணமாய்த்தானிருக்கும். சென்னையில் சட்ட உலகிலேயே சிங்கங்களாக விளங்கிய வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர், ஸர் கே. பாஷ்யம் ஐயங்கார் முதலியவர்கள் கூட அவர்கள் காலத்தில் பிற பாகங்களில் அழைக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

இந்த மாதிரி நான் எழுதிக்கொண்டே போவேன். ஆனால், உங்கள் பத்திரிகையில் இடம் இருக்கவேண்டும்; இடம் இருந்து நீங்கள் பிரசுரித்தாலும், "ஆமாம்: என்ன தற்புகழ்ச்சி வேண்டியிருக்கு, ஸார்? வடக்கத்தியான் எங்கே, நாம் எங்கே? அவங்க சமாசாரமே தனிதான், ஸார்! சும்மாப் பேசிவிட்டால் போச்சா?" என்று சொல்வதற்கு வேண்டிய சோமணிகள் தமிழ் நாட்டில் இருப்பார்கள்! இப்படிக்கு,

வெங்கட்டராமன்.

[இது மட்டுமா சொல்வார்கள்? உங்களையும் என்னையும் 'குறு மாறு' என்று கூடச் சொல்வார்கள்! 'குறு மாறு' என்றால் 'சுயமரியாதைக் கட்சி' என்பது உங்களுக்குத் தெரியுமோ, இல்லையோ? சுயமரியாதைக் கட்சியார் அர்த்தப் பெயரை வைத்துக்கொண்டு விட்டபடியால் மற்றத் தமிழர்களுக்கெல்லாம் சுயமரியாதையே வேண்டியதில்லை என்பது இவர்கள் கருத்து. 'தமிழில் பாடவேண்டும்' என்றால் 'குறு மாறு' என்பார்கள். 'வடக்கத்தியாருக்குத் தமிழர் மட்டமில்லை' என்றால், 'திராவிடஸ்தான் கட்சி' என்பார்கள். அடிமையாயிருக்க வேண்டாம் என்றால் சு. ம. என்பார்கள். தமிழின் உயர்வை, தமிழ் நாட்டின் உயர்வை, தமிழ்க் கவிதையின் உயர்வைப்பற்றிப் பேசினால், 'வடக்கத்தியாரிடம் துவேஷத்தைப் பரப்புகிறாய்!' என்பார்கள்.

இப்படி யெல்லா மிருந்தபோதிலும், நீங்களும் நாமும் நமக்குச் சரியாகத் தோன்றுவதை நாம் சொல்லிக் கொண்டும் எழுதிக் கொண்டும் இருக்கலாம். மேலும், தீர்க்க தரிசியான 'பாரதியார் நம் கட்சியைச் சேர்ந்தவர் என்பது நமக்குத் தைரிய மூட்டும் விஷயம். பாரதியாருடைய திருவாக்கைக் கேளுங்கள்:—

"இந்த நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவு, கீர்த்தி வெளி யுலகத்திலே பரவாமல் இருப்பதை நான் அறிவேன். போன நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவொளி சற்றே மங்கியிருந்ததையும் நான் அறிவேன். ஆனால் போன நிமிஷம் போய்த் தொலைந்தது; இந்த நிமிஷம் சத்தியமில்லை; நாளை வரப் போவது சத்தியம். மிகவும் விரைவிலே தமிழன் ஒளி உலக முழுவதிலும் பரவாவிட்டால் என் பெயரை மாற்றி அழையுங்கள்!"]

பாரதியார் ஞாபகார்த்த நிதி

பாரதியார் ஞாபகார்த்த நிதிக்குச் சென்ற 6—3—45 தேதிக்குப் பிறகு 11—5—45 வரை வந்துள்ள நன்கொடைகளின் விவரம்:—

ஸ்ரீ எம். சுப்பராய அய்யர், அட்வகேட், மயிலாப்பூர், சென்னை ரூ.	100	0	0
ஸ்ரீமதி அம்புஜம்மாள், ஆள்வார்பேட்டை, சென்னை	25	0	0
அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை	25	0	0
ஸ்ரீ எஸ். எஸ். ஷண்முக நாடார், பஞ்சு வியாபாரம், விருதுநகர்	25	0	0
ஸ்ரீ பி. ஸ்ரீ. ஆச்சார்யா, ஆள்வார்பேட்டை, சென்னை	20	0	0
லேடி வெலிங்டன் பெண்கள் உயர்தர பாடசாலை, உபாத்தியாயினிகளும், மாணவிகளும்	10	4	0
ஓர் அபிமானி, சென்னை	10	0	0

ரூ. 9—0—0: ஸ்ரீ மா. மாதவன் நாயர், பொம்பலை பிட்டியா, கொழும்பு, இலங்கை; ரூ. 5—4—0: அம்பத்தூர் "ஸ்டடி சர்க்கிள்" (ஸ்ரீ கி. குருசாமி மூலம்); ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் எம். முத்துகிருஷ்ணன், கோவை; எம். ஜி. நடேசய்யர், உறையூர், திருச்சி; ஏ. கே. சுப்பய்யா செட்டியார், சமூகபுரம், திருநெல்வேலி ஜில்லா; ரூ. 3—0—0: ஸ்ரீமான்கள் கே. ராஜகோபாலய்யர், சென்னை; திருமலை வெங்கடசாமி ஆச்சாரி, அருப்புக்கோட்டை, ராமநாதபுரம்; ரூ. 2—8—0: ஸ்ரீ எம். வி. சேகர், காரைக்குடி; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் எஸ். பி. ராஜுகவுண்டர், அந்தாணி; பாரதி இளைஞர் வாசகசாலை, திருமங்கலம்; சுந்தரம் நடராஜன், மாதுங்கா, பம்பாய்; கே. செங்கநாதன், கோலம்; கே. செந்தட்டிக்காளைத் தேவர், கோம்பை; பி. என். சுப்ரமணியம், பி. ஏ., பி. எல்., வக்கீல், திருச்சிராப்பள்ளி; திண்டுக்கல் முனிசிபல் ஸ்கூல் மாணவர் கே. முத்துக்கிருஷ்ணன் மூலம்: ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் அந்தோணிராய், செகந்நாராயணன்; ஆர். வி. எம். பெரியண்ண செட்டியார், திருச்செங்கோடு; முருகப்ப நாடார், கோம்பை; முத்துக்கிருஷ்ணன், கோம்பை.

ஐ. ஈ. இண்டியன் ரெயில்வே மெயின்டினன்ஸ் கம்பெனி நாயில்தார் ஸ்ரீ டி. பார்த்தசாரதி மூலம்:

ரூ. 2—8—0: ஸ்ரீமான்கள் டி. பார்த்தசாரதி, என். தம்புசுவாமி; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் பி. அருமைநாயகம், எம். துக்காராம், டி. கே. சுப்பிரமணியம், ஏகாம்பரம், ஜி. தாமோதரன்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் பி. லாசர், கே. கோபாலகுட்டி, ச. பாப்புனி, எம். நாராயணு, எம். ஆறுமுகம், எம். பொன்னுவேலு, ஆர். பாக்கியசாமி, பி. பெரியநாயகம், கே. ஷண்முகம், வி. சீனன், பி. ஜோசப், ஆர். ராஜு, கிருஷ்ண பிள்ளை, டேனியல், என். ஆறுமுகம், கே. என். ஜோசப், கே. வீரன், பி. கோபால், கே. கம்பய்யா, பி. முத்து, ஏ. அன்னையம்மா, எம். ஜீவரத்தினம், ஆர். குப்புசாமி, பி. ராஜமாணிக்கம், ச. பழனி, என். கருப்பன் ஆச்சாரி, கே. வேம்புலி, நாகமுத்து; ரூ. 2—0—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடை (தபால் செலவு நீங்கலாக) ஆக ரூ. 44—0—0

மதுக்கூர், ஸ்ரீ எம். என். ராமன் மூலம்: ரூ. 2—0—0: ஸ்ரீ பி. அருணாசலம் பிள்ளை; ரூ. 1-0-0: ஸ்ரீமான்கள் ஏ. வி. சந்திரசேகரம் பிள்ளை, ஏ. எம். வாசுதேவ செட்டியார், ஏ. வி. முருகேசம் பிள்ளை, எம். எஸ். இராமன், ஆர். கே. ஸ்ரீனிவாச செட்டியார், கே. வெங்கடராமன், என். விஜயகோபால், என். பாலசுப்ரமணியம், ஏ. வி. சுந்தரமூர்த்தி, எம். எம். ரெங்கசாமி வேளார், முத்துவேல் வேளார், ஆர். என். சுப்பிரமணியம், கே. கோபால்சாமித் தேவர், எஸ். வெங்கடேசத் தேவர், வி. கோபாலகிருஷ்ணன், ஏ. அடைக்கல ஒந்திரியார், என். பொன்னுச்சாமி, கிருஷ்ணமாச்சாரி, நடராசமி, ஜெகதீசய்யர்; ரூ. 14-0-0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடை.

ஆக ரூ. 30—0—0

கொழும்பு, ஸ்ரீ எம். பெருமாள் மூலம்: ரூ. 11—0—0: ஸ்ரீமான்கள் எம். பெருமாள், என். என். நாதன்; ரூ. 2—0—0 ஸ்ரீமான்கள் எம். பிச்சமுத்து, பி. சுந்தரசாமியார், எஸ். பி. அருணாசலம்: ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் நாணு, ரெத்தினம் பிள்ளை, ஏ. பாங்க்ராஸ் பெர்னாண்டோ, கே. காலசுந்தரம், பி. மாணிக்கவாசகம். ஆக ரூ. 32—0—0

மேலூர், போர்டு ஹைஸ்கூல் மாணவர் ஸ்ரீ பி. துரைசாமி மூலம்: ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் க. சொக்கலிங்கம், பி. துரைசாமி, அ. காளிமுத்து, வை மாசிலாமணி, ஆ. ப. தாமோதரன்; ரூ. 24—4—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடை.

ஆக ரூ. 29—4—0

பொள்ளாச்சி, கல்வி ஏஜெண்ட், ஸ்ரீ ஆர். நாராயணசாமி மூலம்: ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் எல். அண்ணாமலை செட்டியார், பி. கிருஷ்ணசாமி, என். திருமலைசாமி, எஸ். கருப்புசுவாமி; ரூ. 1-8-0: ஸ்ரீமான்கள் கே. முத்துராமலிங்கம், எம். சம்பந்தம்; ரூ. 1-0-0: ஸ்ரீமான்கள் வி. எஸ். ராமகிருஷ்ண அய்யர், வி. ஆர். விஸ்வநாத அய்யர் அண்டு சன்ஸ், பி. ஏ. சின்னுச்சாமி, கே. சுப்பிரமணியம், ஸி. எஸ். நாகராஜன், வி. கிருஷ்ணமூர்த்தி அய்யர், வி. நாராயண ராவ், ஆர். ராமசந்திரய்யர், கே. வி. கந்தசாமி, எம். மாரிமுத்து, எஸ். எச். இப்ராஹிம் சாஹிப், எம். கந்தசாமி, ஏ. சம்பந்தம், ஏ. கருப்புசுவாமி, ஆர். கந்தசாமி, ஆர். நாராயணசாமி.

ஆக ரூ. 27—0—0

இலங்கை, இரத்தினபுரி, ஸ்ரீ பி. எஸ். வீரப்ப செட்டியார் மூலம்: ரூ. 3—0—0: ஸ்ரீ பழ. வீரப்ப செட்டியார்; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் ந. சின்னய்யா தேவர், வெ. சின்னய்யா வேளார், பெ. பிச்சப்பனம்பலம், ஆ. மு. ராமசாமி வேளார், நி. முருகப்ப தேவன், ஆ. வில்வாசம், ஆறுமுக பண்டாரம், ரு. கந்தான் ராவுத்தர்; ரூ. 1—0—0: ஸ்ரீ நா. சு. நாச்சியப்பன். ஆக. ரூ. 20—0—0

எம். ஏ., ஏ. ஜி., ஆர். எம்., ஸ்ரீ டி. கோகுவாமி மூலம்: ரூ. 5—0—0: ஸ்ரீ சுவாமி; ரூ. 3—0—0: ஸ்ரீ இராமசாமி: ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் சந்திரன், இருதயசாமி, மரிய

நாஸ், ஜேசுவடியான், நடராஜன், ஸ்ரீனிவாசன்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் பீட்டர், ஜோசப். ஆக ரூ. 22—0—0

ஆகமொத்தம் ரூ. ... 481—4—0

ஏற்கெனவே வசூல் ரூ. (11-3-45 இதழில் அறிவித்தபடி) ... 42,137—11—8

ஆகமொத்தம் 11-5-45 வரை வசூல் ரூ. ... 42,618—15—8

6—3—45 உக்கு முன்பு வந்த கல்கொடை சிலவற்றுக்கு கல்கொடையாளரின் விவரங்கள் பிற்பாடு வந்து சேர்ந்தது. அவ்விவரங்கள் வருமாறு:—

இலங்கை, கம்பளை, காங்கிரஸ் வாசகசாலை மூலம்: ரூ. 51—0—0: ஸ்ரீ வயி. கரு. சௌமியமூர்த்தி தொண்டைமான்; ரூ. 25—0—0: ஸ்ரீ கரு. குமாரவேல் தொண்டைமான்; ரூ. 10—0—0: ஸ்ரீமான்கள் வ. பழ. வ. சாத்தப்ப செட்டியார், பழ. சா. ராம. இராமநாதன் செட்டியார் அண் சன்ஸ்; ரூ. 8—0—0: ஸ்ரீ எஸ். பி. எஸ். சுப்பையா செட்டியார்; ரூ. 5—8—0: ஸ்ரீ மு. இராமசுப்ரமணியம்; ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் சு. ராம. சங்கர நாராயணன், எஸ். எஸ். பெரியண பிள்ளை, க. ஆரு. கதிரேசன், ஜீவரெத்தினம், அப்புகாமி வெதருலே, கே. எம். உதுமான் அலி, அழ. பழநியப்ப, நா. இருபலை நாயுடு; ரூ. 3—8—0: ஸ்ரீ ஏ. ஜேயஸிரிசேனா; ரூ. 3—0—0: ஸ்ரீமான்கள் என். ஆறுமுகம், பழ. மு. கதி. கதிரேசன் செட்டியார்; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் எம். புகாரி, டூ. எம். சரிபு வெதமாரந்தியா, டபிள்யூ. பொடியப்புகாமி, பி. எஸ். வி. முத்துக்கருப்பன், ஆர். பி. யட்டிமான, எச். ஜே. பிரையரு, எம். ஏ. ஏ. அப்புகாமி, க. ராமசாமி நாடார், ச. எம். ஜூருல், மு. க. கருப்பன், வ. ராம சேதுராமன், வி. எஸ். ராஜமணி, கி. மருதை; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் மு. இ. ஜுமால்தீன், மிஸ்டர் அன்டு மிஸஸ் ஜே. சாமுவேல், ஆரு. பெரி. ஆறுமுகம் பிள்ளை, ஏ. வி. டி. வி. கடை, த. ப. கடை, சோ. வெள்ளைச்சாமி சேர்வை, மு. ச. வெயிலுமுத்து பிள்ளை, ஆ. அ. அய்யாச்சாமி சேர்வை, செ. சுப்பிரமணியம், வெட்கமண வேஹுர், ஜி. ஒ. பி. கெகல்பன்னல, மிஸ் பி. கனகரத்தினம், சித. சி. சின்னய்யா, ஏ. பீஞ்சா, ஆர். கே. செல்லையா, எஸ். சேகு அப்துல்காதர், அ. மு. செய்யது இபுருலெப், மூ. ராஸ், எம். எஸ். பதுர்தீன், வி. எஸ். எம். கடை, ஏ. சி. ஏ. லத்தீபு, எஸ். எச். மம்மக்காதர், இ. சுப்பையா, எம். எம். எஸ். சரீபு, பி. சிறுவடியா, பொப்னர் சேப்பு கம்பெனி, மு. முத்தையா, எம். எஸ். முத்துவைரையா, சொ. வள்ளியப்பா, த. தனராஜன், ரு. முத்துராமலிங்கம் பிள்ளை, நா. வெள்ளைச்சாமி, மு. சி. சின்னக்கருப்பன், முனியாண்டி கங்காணி, அந்தோணி, நா. வெ. கந்தையா, கே. பூச்சி கங்காணி, பெரியசாமி கங்காணி, எம். பீட்டர், சின்னய்யா, டி. பி. பொன்னப்பன், ராமையா, எம். சுப்பையா. ஆக ரூ. 225—0—0

கொழும்பு, ஸ்ரீ கிருஷ்ணவிலாஸ் ஹோட்டல் மூலம்: ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் சங்கரலிங்கம், வி. எஸ். ராமய்யா, ராமச்சந்திரன், முத்தையா; ரூ. 3—0—0: ஸ்ரீமான்கள் கே. எஸ். சங்கரன், எம். ஆர். சாமி, பி. மொகைதீன் கண்ணு, ஏ. சொக்கலிங்கம் பிள்ளை, ஜே. நாகமுத்து; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் எம். முத்துவடிவேல், என். செல்லையா, எஸ். தம்பி ஆழ்வார், பி. சண்முகம், ஏ. சுப்பையா செட்டியார், பி. செல்லையா, எஸ். மதார்மைதீன், எஸ். துரைராஜ், பி. வி. கணேசய்யர், பி. சிதம்பரம் பிள்ளை, எஸ். இப்ராஹீம், டி. எஸ். வைரவநாதன், கே. தனவா, எம். போக்கர், சின்னச்சாமி பிள்ளை, இரு அன்பர்கள்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் எம். தக்ஷிணாமூர்த்தி, ஆர். கதிர்வேல் பிள்ளை, குமாரசாமி பிள்ளை, என். அந்தோணி, சங்கரசுப்பு செட்டியார், பி. கனகரத்தினம், வி. சிவசுப்ரமணியன், கே. மணி, எம். கனகசபாபதி, கே. ஆர். ஆறுமுகம், வி. கே. காளிமுத்து, எம். ராமசாமி, ஏ. சுந்தரம், எஸ். செல்லையா, கே. வி. லக்ஷ்மண அய்யர், எம். ரங்கசாமி, எஸ். கிருஷ்ணன், ஆர். வி. சங்கரன், கே. அய்யா பிள்ளை, பி. ஆர். கோபி, கே. ஸ்ரீதர நாயர், ஏ. பி. மைக்கேல் பெர்னாந்து, என். கே. பாலன், எஸ். சந்தனமுத்து ஆசாரி, எம். நாகூர், எம். ராமமூர்த்தி, எஸ். பி. ஆசாரி, எம். மச்சன், கே. சண்முகம், எஸ். ராமசாமி நாயுடு, எம். பவுர் கண்ணு, பாண்டியராஜ், எஸ். மிக்கேல் பெர்னாந்து, எம். மூகமதுசாலி, எம். புகாரி, எம். மூகம்மது, எம். முனியாண்டி, எம். சுந்தரம், டி. சிங்காரவேலு, எம். எஸ். செல்வராஜ், கே. ராமச்சந்திரன், ஸ்ரீமதிகள் எஸ். செல்லம், எம். மரகதவல்லி அம்மாள். ஆக ரூ. 105—0—0

கண்டி, ஸ்ரீ வி. அமிர்தலிங்கம் மூலம்: ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் மு. மாரியா பிள்ளை, வி. அமிர்தலிங்கம் பிள்ளை, எம். கே. குழந்தை வடிவேல் செட்டியார், எம். ஓ. எம். மஹாராஷ்டிர ஆயில்மில்; ரூ. 3—0—0: ஸ்ரீ ஏ. வி. ஆர் ராஜகோபால் செட்டியார், தெனியாக்கொள்ளை, ஆயில் மில்ஸ்; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் ஆ. நடராஜன், த. தங்கையா செட்டியார், என். எச். வி. எந்திரிக்கில்லா, வி. எதிரிசிங்கே, பி. பாபநாசம் செட்டியார், எஸ். வி. சுப்பையா செட்டியார், கே. எஸ். குந்தாலிங்கம் செட்டியார், கே. எஸ். செல்வக் கணபதி செட்டியார், பி. ஷண்முக சுந்தரம் செட்டியார், எஸ். சங்கரன் செட்டியார், ஏ. எஸ். செல்வநாயகம் செட்டியார்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் ஏ. கே. முத்தையா பிள்ளை, வி. சொக்கலிங்கம், நா. ராமையா செட்டியார், பெ. சி. கருப்பையா, ஏ. இசக்கி செட்டியார், ரா. பொன்னம்பலம், சேகு. மொஹிதீன் ராவுத்தர், எஸ். கே. எம். எஸ். சுந்தரம், ஏ. எஸ். சின்னையா பிள்ளை, ஆர். வெங்கடாசலம், முருகானந்த ஸ்டோர்ஸ், பீ. உ. மு. காதர் மீராசாயிபு, வே. க. கந்தையா, வே. இரத்தினம், சி. மாயழகு, அரு. தம்பூ செட்டியார், ஆர். பபாலின், நா. சொக்கலிங்கம் செட்டியார், ஆர். வில்லியம், ஏ. ரத்தினராஜா, கே. காளியண்ணன், பியதாஸ, வி. மு. வெ. எச். சின்னையா செட்டியார், எச். ஆர். பி. தந்திரிஸ், பி. எஸ். பெரேரா, பி. டபிள்யூ. ஏ. டபிள்யூ. சில்வா, டபிள்யூ ஏ. அல்பர்ட் சிங்கோ, க. சம்மது ராவுத்தர், எம். ஏ. மொகம்மது ஹனிப், எஸ். ஏ. எட்வின் பிரதர்ஸ், சிரிசேனா, கே. எம். நூர்முகம்மது அண்ட் கம்பெனி. ஆக ரூ. 80—0—0

ஐந்தாம் பாரம் 'இ' பிரிவு மாணவர்கள், இந்து உயர்தர பாடசாலை, திருவல்லிக்கேணி சென்னை மூலம்: ரூ. 2—0—0: ஸ்ரீ ஆனந்த கிருஷ்ணன்; ரூ. 1—0—0: ஸ்ரீ வெங்கடராமகாச்சாரி; ரூ. 2—5—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடை. ஆக ரூ. 5—5—0





"போகிறீர்களா, என்ன?"

சுவாமி சுத்தானந்த பாரதி

அந்தக் காலம் தேர்தல் வந்தால் புதுவை அமளி படும். டாணாவில் அடைக்கலம் புகுந்தால்தான் தப்பலாம். தேசபக்தர்கள் பொன்னு முருகேசம் பிள்ளை வீட்டில் இருப்பது வழக்கம். தேர்தல் அமளியுடன் ஒற்றர் தடபுடலும் சேர்ந்தால் கேட்க வேண்டுமா?

இரவு எட்டு மணி. பாக்கியலக்ஷ்மியம்மாள் ஐயருக்கு இலை போட்டுப் பரிமாறுகிறாள். வாசலில் ஏகச் சத்தம். குடிகாரர் குரல்களுக்கு இரண்டு புட்டி அதிகமாக ஏறிவிட்டது.

"அடே! ஐயன், வா வெளியே, உன்னைக் கொன்று போட்டுத் தலையை எடுத்துக் கொண்டு ஹ! ஹ!! ஹ!!! சவாசண்டே" என்று உடக்குரல்.

ஐயர் வரக் காணோம். மறுபடியும் கதவைத் தட்டியது காலிப் பட்டாளம். கதவு திறக்கவில்லை. "படார்! படார்!" என்று கதவில் மலைப்பிஞ்சுகள் விழுந்தன.

"ஐயன், வா வெளியே! இல்லாட்டி கதவை உடைத்துக்கொண்டு போய்த் தீட்டண்ணே" என்று ஒரு குடிகாரன் குரல் கிளம்பியது. ஐயர் என்ன செய்தார்? பெரிய உரலையும் மருந்து அரைக்கும் கல்வத்தையும் கதவுக்கு அண்டக் கொடுத்தார்.

"ஐயர் சாப்பிடுகிறார்; வருவார்" என்று பாக்கியலக்ஷ்மி அம்மாள், வெளியிலிருக்கும் அபாய விருந்தாளிகளுக்குச் சொல்லிவிட்டு உள்ளே சென்றாள். "சாகப் போகிற சவத்துக்கு நல்லாச் சோறு போடு. காலைக்கு சாப்பிடவா போறான்? ஹ! ஹ!! ஹ!!!" என்று காலிகள் கொக்கரித்தனர்.

ஐயர் முக்கியமான சாமான்களை இதற்குள் எடுத்து நாலு வீடு தாண்டி வைத்து விட்டார். புத்தகங்களைப் பாதுகாப்புடன் வைத்தார். குழந்தை சுபத்ரா தூளியில் உறங்கியது. "பாக்கியம்! சீக்கிரம் வா" என்றார். குழந்தையை எடுத்துக்கொண்டு மனைவி பின் தொடர்ந்தாள். ஐயர் ஓட்டு மேல் ஏறிக்கொண்டார். மனைவியை ஏறச் சொன்னார். முடியவில்லை. கைகொடுத்துத் தூக்கிவிட்டார். அச்சமயம் பிஞ்சுக் குழந்தையை அங்கிருந்த மாதுளை முள் கீறி விட்டது. குழந்தை அழுதது. ஐயர் மெல்லக் குழந்தையைச் சமாதானப்படுத்தினார். விரைவாக நாலாம் வீட்டிற்கு மாடியின் வழியே தாவி இறங்கினார். மனைவியையும் குழந்தையையும் அங்கே விட்டுவிட்டுச் சாமான்களையும் பத்திரமாக வைத்தார்.

பிறகு, ஒரு சாமானைக் கையில் எடுத்துக்கொண்டு திரும்பினார். காலிகளின் கூச்சல் உச்சஸ்தாயியை எட்டி ஆகாசம் பிளக்கும்படி வீறிட்டது. "அகப்பட்டுக் கொண்டானே ஐயன்" என்றொரு பக்கம் தெம்மாங்கு வேறு. இந்தத் தொண்டைப் புயலை ஒரு சிம்மகர்ஜனை மாடியிலிருந்து பிளந்தொலித்தது, "ஹூம், போகிறீர்களா என்ன?" என்று. ஐயரை மாடியில் கண்டதும் காலிகள், "சும்மா போவோமா? உன் தலையைக் கொண்டுதான் போவோம்!" என்று ஓலமிட்டார்கள். "அப்படியானால் இதோ பார்" என்று ஐயர் கை மேலே சென்றது. "டபார்!" என்றொரு அந்தர வேட்டுப் பறந்தது.

"அடே! ஐயன் அது வச்சிருக்கான்டா. சுட்டுப் போடுவான்டோய்" என்று காலிகள் மூலைக்கொருவராக உயிரைப் பிடித்துக் கொண்டு ஓடினார்கள். ஆயிரம் காக்கைக்கு ஒரு கல் ஆனது அவர்கள் முயற்சி.

"எந்த அபாயம் வந்தாலும் ஞான புத்தியும் சமயோசிதமான யோசனையும் தைரியமும் வேண்டும்" என்று ஒருநாள் ஐயர் இந்தச் சம்பவத்தைச் சொன்னார். ஐயர் அந்தக் காலத்தில் மேவாரில் பிறந்திருந்தால் ஒரு ராணா பிரதாபசிம்மாயிருந்திருப்பார்.

திருத்தம்

தமிழ்ப் பெருங் கவி முதுபெரும் புலவர் ராவ்சாகிப் வி. பி. சுப்பிரமணிய முதலியார் அவர்களுடைய வயது 90 என்று குறிப்பிட்டிருந்தது. அவர்களுடைய வயது 87 தான். வெள்ளக்கால் முதலியார் அவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் தொண்டு செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

அவர்களுடைய நிருபத்தில் "தேசியப் பத்திரிகைகள் என்று வெளிவரும் எல்லாவற்றிலும் நம் நாட்டிலிருந்து சென்றிருக்கும் போர் வீரர்களைப் போற்றி எழுதியதை நான் இதுவரை பார்த்ததில்லை" என்று குறிப்பிட்டிருந்தார்கள். நாம் வெளியிட்டிருந்ததில் இவ் வாக்கியத்தின் முதல் பகுதி விடப்பட்டுப் போயிற்று.


யுத்தம்...
உணவு...
எரி துரும்பு...
துணிகள்...
வேலையாள்...
அவளது பிரசினைகள்
மிகவும் அதிகம்
இந்தியன்
டீ
சோர்வடையும் சமயம்
டீ அருந்துங்கள்
இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.



கம்பர் தரும் காட்சி

டி. கே. சி.

100. கலை பீடம்

ராம லக்ஷ்மணர் சீதை மூவரும் தண்டகாரணியத்தில் பத்து வருஷம் தங்கினார்கள். சௌகரியமாக முனிவர்களோடு காலம் கழிந்தது.

பிறகு முனிவர்கள் யோசனை பண்ணினார்கள்: ராமனது லக்ஷ்யம் அக்கிரமங்களை ஒழித்துத் தர்மத்தை நிலை நாட்டுவதல்லவா? அது சித்தியாக வேண்டும் என்றால் அகத்திய முனிவரிடம் போய் அவரைக் கலந்து கொள்ள வேண்டியது அவசியம் என்று கண்டு அதை ராமனிடம் தெரியப்படுத்தினார்கள் முனிவர்கள். அப்படிச் சொன்னதை ராமன் மனம் உவந்து அங்கீகரித்தான்; தண்டகாரணியத்தை விட்டுப் புறப்பட்டான்.

அகத்திய முனிவர் இருக்கும் இடத்துக்குப் போகும் மார்க்கத்தை எடுத்துச் சொல்லி எத்தனையோ விதமாக வாழ்த்துரைகளும் சொல்லி வழியனுப்பி நின்று விடுகிறார்கள் முனிவர்கள்.

வழியும் கூறி,
வரம்பகல் ஆசியின்
மொழியும் கூறி
முனிவரர் நின்றிட,
பிழியும் தேனிற்
பிறங்(கு) அரு வித்திரள்
பொழியும் சாரல்
விரைவினிற் போயினார்.

[வரம்பு அகல் ஆசி: அளவில்லாத ஆசிகளை; பிழியும் தேனில்: தேனடையிலிருந்து அப்போதே பிழிந்த தேன்போல் இனிய தண்ணீர்கொண்ட; பிறங்கு அருவித் திரள்: வெகு தூரத்திலேயே வெள்ளை வெளேர் என்று தெரிவதான பல அருவிகளை; பொழியும் சாரல் விரைவினிற் போயினார்: பொழிந்து கொண்டிருக்கும் பொதிகை மலைச் சாரலை வெகு விரைவில் போய்ச் சேர்ந்தார்கள்.]

திருநெல்வேலி ஜில்லாவில் தாம்பிரவர்ணி ஆரம்பமாகும் மலைச் சாரலில் பாவநாசத்து அருவிகள் இன்றும் பொழிகின்றன. வெள்ளைப் படலமாகப் பொழிவதை இன்றும் பார்க்கலாம் வெகு தூரத்திலிருந்தே. தண்ணீரைக் கண்ணை மூடிக்கொண்டு பருகினால், தேன் கலந்திருக்கிறதோ என்று சொல்லவே தோன்றும்.

இப்படியெல்லாம் வர்ணிக்க வேண்டுமானால் நேரில் பாவநாசத்தைப் பார்த்திருக்க வேண்டும். ஆகவே பாவநாசத்துக்குக் கம்பர் வந்திருக்கிறார் என்று சொன்னால் மிகையல்ல.

* * *

பொதிகை மலைக்கு வந்தாய் விட்டது. அகத்திய முனிவரை அறிமுகப் படுத்த வேண்டும். கஷ்டந்தான். ஆனாலும் பார்க்கலாம்.

சமயம், சங்கீதம், கவி எல்லாவற்றிலும் மிகச் சிறந்தவர் அகத்திய முனிவர். அப்படியே அணை கட்டுதல், இரும்பு முதலிய உலோகங்களைச் செய்தல், மருந்துகளைக் கண்டு பிடித்தல் முதலிய கலைகளிலும் ஒப்புயர்வற்று இருந்தார். இதெல்லாம் காரணமாக மக்களுக்கு அளவிறந்த சௌகரியமும் இன்ப வாழ்க்கையும் சித்தியாயிற்று. நெடுகிலும் இன்றுமே தமிழ் நாட்டில் அபூர்வமான பூஜ்யதைக்கு அகத்தியர் உரியவராய் இருக்கிறார் என்பதில் வியப்பில்லை. அத்தகைய மகானுக்கு இராம லக்ஷ்மணர் வருவது தெரிய வந்தது. உடனே எழுந்து ஆசிரமத்திலிருந்து இறங்கினார் முனிவர்.

ஆண்தகையர் அவ்வயின்
அடைந்தமை அறிந் தான், —
ஈண்(டு) உலகை வேலை, துணை
ஏழுலகம் எய்த
மாண்டவர தன்; — சரண்
வழங்கஎதிர் வந்தான், —
நீண்டதமி ழால்உலகை
நேமியின் அளந் தான்.

[ஆண் தகையர்: வீரர்களான ராம லக்ஷ்மணர்; அவ்வயின்: பாவநாசத்துக்குத் தான்; ஈண்டு உலகை வேலை: நிறைந்த ஆனந்த சமுத்திரத்தை (உயர் வாழ்க்கையை); துணை ஏழு உலகமும் எய்த: பதினான்கு உலகங்களும் நிறைந்து அனுபவிக்கும்படி; மாண்ட வரதன்: கடாக்ஷம் பெற்ற மேதாவியான அகத்திய முனிவர் — ஆண்தகையர் அடைந்தமை அறிந்தான்;

சான் வழங்க எதிர் வந்தான்: ராம லக்ஷ்மணரே தன்னை வணங்க வேண்டியது முறையாயிருக்க, முனிவரே எதிர்கொண்டு வருகிறார் — வழியிலேயே வணங்குகிறும் என்ன என்று. இப்படிச் செய்தவன் யார்? பேரண்டத்திலுள்ள விஷயங்களை எல்லாம் தமிழ் மூலமாக ஆய்ந்தும் பாடியுமுள்ள அகத்திய முனிவர். நீண்ட தமிழால்: விரிவான தமிழ்க் காவியங்களால்; நேமியின் அளந்தான்: சக்கரத்தை ஏந்திய திருமால் மூவடியால் அளந்தது போலத் தமிழால் அளந்தான் — பேரண்டத்தை.]

உண்மைக் கலைகளுக்கு, எக்காலத்திலுமே ஆபத்துகள் உண்டு. ஒன்று அவைகளைப் பார்க்காமல் ஒதுக்கிவிடுகிற காரியம். மற்றது அதைவிட ஆபத்தான காரியம். உண்மை உணர்ச்சி அற்ற படாடோபிகள் கைக்கு வந்து கலை மறைந்து போகிறது. கலை இருட்டடிப்புத்தான் அது.

அகஸ்தியர் காலத்திலும் சங்கீதம், இலக்கியம், சமயம் இவை சம்பந்தமாக இருட்டடிப்பு சேர்ந்தது. வேண்டாத வியாக்யானங்களுக்குள்ளேயும் இலக்கண வின்னியாசங்களுக்குள்ளேயும் உண்மை மறைந்து விட்டது. கலைக்கு இந்த வேண்டாத கைங்கரியம் செய்த நூல்கள் எத்தனை எத்தனையோ!

பலர் அந்த நூல்களை வாசித்துப் பார்க்க முயன்றார்கள். ஆனால் முடியவில்லை. எல்லாத் துறையிலும் வல்ல அகத்திய முனிவர் அவைகளையெல்லாம் படித்து முடித்து உண்மைகளைக் கண்டெடுத்தார். கண்ட உண்மைகளை மற்றவர்களுக்கும் போதித்தார்.

பண்(டு) அவுணர் மூழ்கினர்
  படார்களென வாரேனர்
'என்தவ! எமக்கருள்'
  எனக்குறை இரந் தார்க்
கண்(டு), ஒருகை வாரினன்
  முகந்தகடல் எல் லாம்,
உண்(டு) அவர்கள் பின்'உமிழ்க'
  என்றலும் உமிழ்ந் தான்.

[பண்டு அவுணர் மூழ்கினர்: பூர்வமாக அரக்கர்கள் (படாடோபிகள்) சமுத்திரத்திற்குள் மூழ்கி விட்டார்கள்; படார்கள் என வாரேனர்: தோலையமாட்டார்கள் என்று உயர்ந்த லக்ஷியம் உடையவர்கள்: என்தவ எமக்கு அருள்: யாவராலும் மதிக்கத் தகுந்த முனிவரே எங்களுக்கு அருள் செய்ய வேண்டும்; எனக்குறை இரந்தார்க் கண்டு: என்று குறையிரந்தவர்களைக் கண்டு பரிந்து; ஒரு கை வாரினன் முகந்த கடல் எல்லாம்: ஒரு கையினால் வாரி முகந்த கடலை யெல்லாம் (நூல்களை யெல்லாம்) உண்டு; அவர்கள் பின் உமிழ்க என்றலும் உமிழ்ந்தான்: அவர்கள் அந்த நூல்களிலுள்ள சாரம்சத்தைப் புகட்டியருள வேண்டும் என்று சொல்லவும்: அப்படியே போதித்து அருளியவர் அகத்திய முனிவர்.]

மேல் நாட்டிலும் மேலே சொன்னவாறு கலைக்கு இருட்டடிப்பு சேர்ந்திருக்கிறது. கலைகளை மீட்பது கஷ்டமாகவே இருந்தது. ஸவனரோலா — என்ற மேதாவி கலைகளை வெளியே கொண்டு வந்து பயன்படச் செய்தார். இந்தச் செயலுக்குப் 'புத்துயிர் அளித்தல்' (ரினைஸான்ஸ்) என்று சொல்லுவார்கள். அகத்திய முனிவர் தமிழ் நாட்டிலுள்ள கலைக்குப் புத்துயிர் அளித்தவர் என்பது பாடலின் குறிப்பு.

பெரிய மீனும் சின்ன மீனும்

ஒரு கடல். ஒரு பெரிய மீன் ஒரு சின்ன மீன் அருகே சென்று அதை விழுங்க முயன்றது.

சின்ன மீன் திடுக்கிட்டு, பயத்தால் கலங்கிற்று. "இது என்ன நியாயம்? நானும் பிழைத்திருக்க வேண்டாமா? சட்டத்திற்கிணங்க நாம் எல்லோரும் சமம் அல்லவா?" என்றது.

பெரிய மீன் சொல்லிற்று: "உன் சட்டம் எல்லாம் எனக்குத் தேவை இல்லை. உன்னோடு விவாதிக்கவும் எனக்கு விருப்பம் இல்லை. நான் உன்னை விழுங்க விரும்புகிறேன். கூடாது என்றால், நீயாவது என்னை விழுங்கவேண்டும். ஆம்! அஞ்சாதே! நான் உன்னை ஒன்றும் பண்ணவில்லை; விழுங்கு!" என்றது.

சின்ன மீன் தன் வாயைத் திறந்தது. பெரிய மீனை விழுங்க முயன்றது. முடியவில்லை. அது பெருமூச்செறிந்தது. பின்பு பெரிய மீனைப் பார்த்து "நல்லது, உனக்கே ஜயம்! என்னை விழுங்கி விடு!" என்றது.



[முதலாளித்துவம் அமுல் நடக்கும் தேசத்தில் எல்லோரும் சமத்துவமாயிருக்கலாம் என்ற கொள்கையைப் பரிகசிக்கும் ருஷ்யக் கதை.]





என்னதான் பரீக்ஷைக்காகக் கவனமாகப் படித்துக் கொண்டிருந்தாலும், வாசலில் ஒரு வண்டி வந்து நின்றால், அதிலிருந்து யார் இறங்குகிறார்கள் என்று தெரிந்து கொள்ளாவிட்டால் மேலே படிப்பு ஓடுமா?—அதுவும், இருந்த இடத்தை விட்டு அசையாமல் ஜன்னல் வழியாகக் கவனிக்க சௌகரியம் இருக்கும் பொழுது?

சுமார் இருபத்தைந்து வயதிருக்கும். வாலிபர். மாநிறம், சில்க் ஷர்ட், ஜரிகை அங்கவஸ்திரம். தெரிந்த முகம் அல்ல. அவர் ஜட்காவிலிருந்து முதலில் இறங்கி ஒரு குழந்தையை வாங்கிக் கொண்டார். குழந்தைக்கு ஒரு வயது இருக்கும். நீல கௌன் போட்டிருக்கிறது. பெண் குழந்தை. அப்புறம், மூன்றாவதாக இறங்கியது யார்? என் எனக்கு என்னவோ பண்ணுகிறது? தலைதான் சுற்றுகிறதா, அல்லது உலகம் பூராவும் சுற்றுகிறதா? ஓடிக்கொண்டே இருந்த ஹிருதயம் 'டக்' கென்று நின்று விட்டதே! எழுந்திருந்து என் அறையின் கதவை மூடிவிட்டுத் தள்ளாடிக் கொண்டே நாற்காலியில் 'தொப்' என்று விழுந்தேன்.

* * *

ஏதாவது ஒரு விஷயத்தை நாம் அடியோடு மறந்து விட்டோம் என்று நினைக்கிறோம். ஆனால் பளிச்சென்று ஒரு நாள் அதன் ஞாபகம் திரும்புகிறது. அப்பொழுது நாம் அதை மறந்தேயில்லை, நம் உடம்போடு உடம்பாய் ஒட்டிக்கொண்டேதான் இருந்தது, இப்பொழுதுதான் நினைவுபடுத்திக் கொள்கிறோம் என்று தெரியவருகிறது. சட்டையின் உள் பையில் ஆயிரம் இரண்டாயிரம் பணம் வைத்துக்கொண்டு பித்தான்களைச் சரியாகப் போட்டுக்கொண்டு ஊரில் பல இடங்களைச் சுற்றுகிறோம். யார் யாரோடோ பேசுகிறோம். அப்பொழுதெல்லாம் பேச்சில்தானே கவனம் நமக்கு! நம்மை அறியாமல் நம் கைமாத்திரம் ஒவ்வொரு தரம் பணம் உள்ள இடத்தைத் தொட்டுப் பார்த்துக்கொள்கிறது. பிறகு வீடு திரும்பிச் சட்டையைக் கழற்றும் பொழுதுதான் இது எவ்வளவு முக்கியமான பொறுப்பு, இதை மறுபடி எப்படி பத்திரப் படுத்துவது என்று முழு வேகத்தோடு நமக்கு ஞாபகம் திரும்புகிறது, அல்லவா?

விசாலத்தைப்பற்றிய ஞாபகம் எனக்கு எப்படிப்பட்டது என்று இதற்கு முன் நான் கூர்ந்து ஆராய்ந்ததில்லை. மனோஹரமான சுகந்தம் ஒரு முறை அனுபவித்த பிறகு அதன் ஞாபகம் எப்படி நம்மிடம் நிலைத்து இருக்குமோ அப்படித்தான் நானும் நினைத்திருந்தேன். என் அந்தரங்க வாழ்க்கைக்கு அது ஒரு ஆஸ்தி என்றுதான் நிச்சயமாகத் தோன்றிற்று. அதில் எனக்கு எவ்வளவோ பெருமைகூட. ஆனால் இதோ அந்நியன் ஒருவனோடு—ஒரு சிறு குழந்தை வேறு — அவள் வண்டியிலிருந்து இறங்கும் பொழுது, சந்தேகமில்லை; நான் வெகு நாள் மூடி வைத்திருந்த ரணம்தான் அது என்பது உறுதியாகிறது. ஆனால் ஒரு வித்தியாசம். இரண்டு வருஷம் கடந்து போனதால் ரணம் ஆறிப்போய்த் தழும்பாகி விட்டது என்று மனப்பால் குடித்து விடலாமா? அவளைக் கண்டதும் ஹிருதயத்தினுள்ள காயம் திறந்து மறுபடி ரத்தம் கசிய ஆரம்பித்தது, இப்பொழுது புதிதாக ஏற்பட்ட வெட்டுக்காயத்தைப் போல.

ஆம். இரண்டு வருஷமும் ஆயிற்று. அதற்கு மேலும் ஆயிற்று. நான் இண்டர்மீடியட் படித்துக் கொண்டிருந்தபொழுது என் வீட்டிற்குக் குடி வந்தார்கள். இரண்டு

வருஷம் ஆவதற்குள் வடக்கே எங்கேயோ மாற்றல் ஆகிறது அவள் தகப்பனாருக்கு. 'அடிக்கடி லெட்டர் போடுங்கள்' என்று சொல்லிக் கொள்கிறோம். அது எங்காவது நடக்கிறதா? ரயில் சிநேகம்போல்தான் குடியிருப்பவர்களின் சிநேகமும். அதிலும் ஊரூராக மாற்றலாகும் சிநேகமாயிருந்தால் கேட்பானேன்?

நான் ஐந்தாறு சகோதரிகளோடு பிறந்தவன். அவள் ஒரே பெண் அவள் பெற்றோர்களுக்கு. என் சகோதரிகள் வீட்டிற்குள் பழகுவதையும் பார்த்திருக்கிறேன்; பிறரோடு பழகுவதையும் கவனித்திருக்கிறேன். ஆனால் விசாலத்தைப்போல் அப்படியே வாஞ்சையாய் ஒருவரிடத்தில் ஒட்டிக்கொள்கிற சுபாவம் ஒருவரிடத்திலும் இல்லை. கல கலப்பாக அவள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தேனானால் போதும். அது இன்னும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

பதினொன்று பதினைந்து வயதுள்ள ஒரு பெண் என்னோடு நெருங்கிப் பழகுவது பலருக்குப் பிடிக்கவில்லை. நான் ஒரு நாள் ரேழிப் பக்கமாக என் அறைக்குள் நுழைந்தபொழுது ஹாலில் என்னைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தது காதில் விழுந்தது.

“என்னமோ, அம்மா, நான் சொல்கிறதைச் சொல்லிவிட்டேன். நாளைக்கு யாராவது பெண் பார்க்க வந்தால், இல்லாததும் பொல்லாததுமாகச் சேர்த்து இரண்டு பேர் சொல்லி வைப்பார்கள். அப்புறம் அவமானம். உன் பிள்ளைக்கும் என்ன, வயது கொஞ்சமாகவா ஆகிறது?” — இது எதிர் வீட்டு அம்மாமியின் குரல்.

“என் வயிற்றில் பிறந்த பிள்ளை அப்படியொன்றும் பெயர் எடுக்கமாட்டான். லலிதாவும் கமலுவும் எப்படியோ அப்படித்தான் அவனுக்கு விசாலமும். இதைப்பற்றி மேலே பேசினால் நாம்தான் அசடுகள்.”—இது என் தாயார்.

“அதனாலென்ன? ரொம்ப நல்லதாகப் போயிற்று. 'ஸ்கூல் பைனல்' வரையில் படிக்கட்டும் என்று இருந்தோம். இரண்டு வருஷம் பின்னாடி செய்கிறதை இரண்டு வருஷம் முன்னாடியே செய்து விடுகிறது. என்ன, மன்னி! விசாலத்தை உங்கள் பிள்ளைக்குப் பண்ணிக்கொள்ளச் சம்மதமா?”— இது விசாலத்தின் தாயார்.

என் தாயாருடைய ஒரு திட நம்பிக்கையைக் கண்டு பல தடவை நான் ஆச்சரியப்பட்டிருக்கிறேன். தான் பெற்ற பிள்ளையைப் பற்றிய அவ்வளவு உறுதி அவளுக்கு எங்கிருந்து வந்தது? மடியில் உட்கார்த்து கொண்டு மழலை பேசிய அதே பிள்ளைதான் இன்னும் என்று என்னை நினைத்துக் கொண்டிருக்கிறாளா? நான் படித்திருக்கும் பிரெஞ்சு நாவல்கள், அமெரிக்கக் கட்டுரைகள், இவற்றில் வர்ணித்திருக்கும் கொள்கைகளும் வாழ்க்கை முறைகளும் எவ்வளவு தூரம் என் மனதில் ஊறிக் கிடக்கின்றன! அவற்றில் ஆயிரத்தில் ஒரு பங்காவது என் தாயாரின் கற்பனைக்கு எட்டக்கூடுமானால் அவள் என்னைப் பற்றி என்ன நினைக்கக்கூடும்!

ஆனால் அவள் நினைவு வரும்பொழுதெல்லாம் நான் இன்னும் மழலை மறவாத குழந்தைதான். நம் நாட்டின் தாய்மார்களின் தாய்மைச் செல்வம் இன்னும் பல தலைமுறைகள் நம்மைக் கைதூக்கி விடுமென்று நான் அடிக்கடி எண்ணுவதுண்டு.

என்ன சொன்னேன்? மழலை மறவாத குழந்தையா? கட்டுப்பாடோ, பூசலோ இல்லாமல் பழகும் ஒரு வீட்டில் எங்கள் இருவருக்கும் தனிமையில் சந்திக்க சந்தர்ப்பங்களா இல்லாமல் போய்விடும்? அப்பொழுதெல்லாம் நான் குழந்தையாகவா நடந்து கொண்டேன்?

ரோஜா மலரின் சித்திரம் ஒன்று என் மனதை மிகவும் கவர்வதுண்டு. மொட்டல்ல. ஆனால் முழுதும் அலர்ந்த புஷ்பமும் அல்ல. பாதி குவிந்தும் குவியாமலும் உள்ள மலர் ஏதோ நம்மிடம் பேச வாயெடுப்பதைப் போலத் தோன்றும். அந்த நிலையில் செடியில் புஷ்பத்தைப் பார்க்க, விடியுமுன் கவனித்தால்தான் ஒவ்வொரு சமயம் பார்க்க முடியும். அப்பொழுதெல்லாம் நாம் பார்ப்பது மலர்ந்து வரும் ரோஜா மலரா, அல்லது நம்மோடு சம்பாஷிக்க முயலும் ஒரு இளங் கன்னிகைத் தத்துவமா என்று எனக்குப் பிரமை ஏற்படுவதுண்டு. பாதி அலர்ந்த ரோஜாவிற்கு மனதைப் பறிகொடுத்த எனக்கு அம்மலரே பெண்ணுருவம் தாங்கி எதிர் வந்ததுபோல் தோன்றியது, முதலில் விசாலத்தைப் பார்த்தபொழுது.

முதன் முதலில் அவள் கரங்களைப் பிடித்துக்கொண்டு குனிந்திருந்த அவள் முகத்தை நான் நிமிர்த்த முயன்றது நேற்று நடந்தது போல் நினைவிருக்கிறது. கரங்களில்தான் என்ன மென்மை! அதோடு மனதில் இருந்த ஆர்வத்தையும் வெளியிடாமல்,

பாசாங்கோ விடுவித்துக் கொள்ள முயற்சியோ எதுவும் செய்யாமல், நின்ற அவளுடைய அந்த உண்மை நிலைக்கு அந்த நிலைதான் உவமை. வேறெதுவும் எனக்குத் தோன்றவில்லை.

நான் கோடை விடுமுறைக்கு வெளியூர் போயிருந்த பொழுதுதான் அவள் தகப்பனார் குடும்பத்தோடு நாகபுரிக்கோ வேறு எங்கோ மாற்றலாகிப் போனது. அது என் துரதிருஷ்டம்தான். நான் ஊரில் இருந்திருந்தால் என் வாழ்க்கை வேறுவிதமாக மாறியிருக்கலாம்.



ஆசிரியர் :—பாட்டு வெகு நன்றாக இருக்கிறது. ஆனால் கடைசி அடிதான் சரியாக இல்லை.

எழுத்தாளர் :—கடைசி அடியில் என்ன பிசகு?

ஆசிரியர் :—கடைசி அடி முதல் அடியிலிருந்து வெகு தள்ளியிருக்கிறது.

நாம் எது சரி, எது தப்பு என்று யோசிக்கிறோம். மனக் கணக்காய்க் குழம்புகிறோம். பிறகு நாம் செய்வதும் அசட்டுத்தனமாக முடிந்து விடுகிறது. பெண்களுக்கு வயது வரும் பொழுது ஒரு விசேஷ மனோ பக்குவமும் அவர்களுக்குக் கூடவே வந்து விடுகிறது. அது விவேகத்தையும் மீறிய ஒரு சக்தி. ஒரு கணம்கூட யோசனை செய்யாமல் ஒரு காரியம் செய்கிறார்கள்; அல்லது பளிச் என்று ஒரு பதில் வார்த்தை வருகிறது. அதற்கு 'அப்பீலே' இருப்பதில்லை.

* * *

என் தாயார் வண்டியிலிருந்து இறங்கி வந்தவர்களை வரவேற்றதும் அவர்கள் பேசியதும் என்னைப்பற்றிக்கூட விசாரித்ததும் எல்லாம் காதில் விழத்தான் விழுந்தது. என்றாலும் அதைக் கவனித்துக் கேட்டுக் கொள்ள எனக்கு ஒரு ஆவலும் இல்லை. ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் குழந்தை 'அம்மா' என்று பலமாக அழுதது. விசாலம் அதை சமாதானப் படுத்தித் தூங்கச் செய்தாள். கூட வந்தவர் எங்கேயோ புறப்பட்டுக் கொண்டிருந்தார். கடைத்தெருவுக்குத் தானோ? “வெய்யில் தணிந்ததும் கிளம்புவோம்; ஐந்து மணிக்கெல்லாம்; தயாராயிரு, விசாலம்!” என்று சொல்லி விட்டுப் போனார். வீட்டிலும் சந்தடி அடங்கிற்று.

மெதுவாக இப்பொழுது வெளியே போய் விடுவோம்; அஸ்தமித்த பிறகு திரும்பி வருவோம்; அதற்குள் அவர்களும் போய் விடுவார்கள் என்று நிர்மானித்துக் கொண்டிருந்தேன். கதவு திறந்தது; விசாலம் உள்ளே வந்தாள்.

பெண்களின் உடல் வளர்ச்சியைப் பற்றி என்ன வெல்லாமோ சொல்கிறார்கள். பதினாறு பதினேழு வயதில் ஏற்படும் மாறுதல் மனுஷ்ய சம்பந்தமான மாறுதல் அல்ல. வாழ்க்கையின் கட்டுக்களை மீறியது, தெய்வீகமானது என்றெல்லாம் சொல்கிறார்கள். வாஸ்தவம்தான். ஆனால் அதே பெண்களின் மனதில் உண்டாகும் மாறுதல் தான் என்னைத் திகைக்கச் செய்கிறது.

“வா, அம்மா, உட்கார். எல்லோரும் சௌக்கியமா?” என்றேன். விசாலம் உட்காரவில்லை. என் நாற்காலியின் பின்னால் வந்து நின்று என் கையிலிருந்த புஸ்தகத்தைச் சாவதானமாக வாங்கி வைத்தாள். நாற்காலியின் கையிலேயே உட்கார்ந்தாள். நான் திடுக்கிட்டு எழுந்திருக்கப் போனேன். ஒரு கை பலமாக ஆனால் மிருதுவாக என்னை அப்படியே உட்கார்த்தி விட்டது.

“எனக்கு மாத்திரம் பரீக்ஷை இல்லையோ? நானும் தான் பனரிஸ் மெண்ட்ரன்ஸுக்குப் படிக்கிறேன்!” என்றாள். என்ன சம்பந்தமில்லாத பேச்சு! இதை யார் கேட்டார்கள் இப்பொழுது?

கொஞ்சம் கொஞ்சமாக விஷயம் விளங்கியது. அப்பொழுது ஆரம்பித்தது என் வாழ்க்கையின் அதிருஷ்டம். நாங்கள் அன்று பேசினதை யெல்லாம் எழுதுவதானால் அது சம்பாஷணையாக இராது. பேசியது அவள். கேட்டுக் கொண்டிருந்தது நான். வடக்கே வேலையாயுள்ள அவள் தமையனுக்குப் பெண் பார்க்க ஐந்து மணிக்குப் புறப்படப் போகிறான். நானும் என் தாயாரும் கூடப் போகப் போகிறோம். ஆறு மாதத்துக் குழந்தையை விட்டுவிட்டு அவள் மதனி காலமாகி விட்ட பிறகு அக்குழந்தையை விசாலமே வளர்த்து வருகிறாள். அது தூங்கி எழுந்ததும் எல்லோரும் புறப்பட வேண்டியதுதான். பரீக்ஷையானால் என்ன? இன்றைய படிப்பு இவ்வளவுதான். இன்று ஒரு நாளைக்கு இவ்வளவு போதாதா? இருந்தாலும் 'டக்' என்று நின்றுபோயிருந்த என் ஹிருதயம் ஏன் இப்படி ஓடுகிறது? ஐயோ, அது மகிழ்ச்சியோடு துள்ளியோடுகிற வேகம் தாங்க வில்லையே!

காலக்ஷேபம்

அவசரம்!

ஆகாரப் பரிசோதனை செய்யும் இன்ஸ்பெக்டர் திடீரென்று ஹோட்டலுக்குள் பிரவேசித்தார். இரண்டு சிப்பந்திகள் ஒரு தவலையைத் தூக்கிக்கொண்டு போவதை நிறுத்தி, "கீழே வை! நான் சோதனை செய்யப் போகிறேன்!" என்றார்.

சொன்னபடி அவர்கள் கேட்டார்கள். பிறகு, "ஸார்!" என்று ஒருவன் ஆரம்பித்தான்.

"பேசாதே! ஒரு ஸ்பூன் கொண்டு வா!"

ஸ்பூனைக் கொடுத்துவிட்டு, "ஸார்......!" என்று மேலும் தொடங்கினான் அவன்.

"பேசாதே!" என்று இன்ஸ்பெக்டர் அவனை அடக்கிவிட்டு, அந்தத் தவலையிலிருந்த தண்ணீரில் ஒரு ஸ்பூன் வாயில் விட்டுக் கொண்டார். பிறகு ருசியாய்க் குடித்தார். "தொலைத்து விடுகிறேன்!" என்றார். "ஸார்! அது மேஜைகளை அலம்பிய தண்ணீர்! அதைச் சொல்ல விடாமல் எங்களை அடக்கி விட்டீர்களே!" என்றான் சிப்பந்தி.

—டி. எம். துரைசாமி.

★

மோசந்தான்!

"வியாபாரம் எப்படியிருக்கு, ஸார்?"

"ரொம்ப மோசம். போட்டிக்கு எதிர்பட்ட ஆயோக்கியப் பேர்வழிகள் ஏற்பட்டு, சரக்குகளையெல்லாம் நியாயமான விலைக்கு விற்கிறார்கள்!"

—ஜி. கிருஷ்ணமூர்த்தி.

★

மூன்று விலைகள்

குடை வாங்க வந்தவர் (சிப்பந்தியிடம்):—என் ஐயா, மான்மார்க் குடை என்ன விலை?

சிப்பந்தி:—நீங்க யாருங்க?

கு. வா. வ:—ஏன் அப்படிக் கேட்கிறாய்?

சிப்பந்தி:—நம்ம கம்பெனியிலே மூன்று விலை உண்டுங்க. கண்ட்ரோல் ஆபீஸரா யிருந்தா ஏழு ரூபா பத்தணுங்க; சாதாரண ஆபீஸரா யிருந்தா குடையே யில்லீங்க; பக்கத்துக் கிராமத்தானு யிருந்தா ரூபாய் பதினைஞ்சுங்க!

—வி. சேதுராமன்.

சரியான வார்த்தை

ராமய்யர்:—ஸார்! வீட்டில் குழந்தைகள் இருந்தால்தான் பிரகாசமாயிருக்கிறது.

கிருஷ்ணய்யர்:—நன்றாய்ச் சொன்னீர்கள். நூற்றிலே ஒரு வார்த்தை! எங்கள் வீட்டில் ஒரு சின்னக் குழந்தைக்காக ராத்திரி முழுவதும் விளக்கு வைக்கவேண்டியிருக்கிறது!

—கே. வெங்கடாசாரி.

★

சென்ற காரணம்

வக்கீல் (எதிர்க் கட்சியைச் சேர்ந்த சாட்சியிடம்):—நீ இதற்கு முன் சிறை சென்றதுண்டா?

சாட்சி:—உண்டுங்கோ.

வக்கீல்:—எதற்காக?

சாட்சி:—வெள்ளையடிப்பதற்குக் கூப்பிட்டிருந்தாங்க, போயிருந்தேன்!

—ஏம். எஸ். துரைசாமி.

★

ஒரு திருத்தம்!

பிரசங்கி மேடைமீது வந்ததும் "கனவான்களே!" என்று சொல்லிப் பேச எழுந்தார்.

உடனே பக்கத்திலிருந்த அக்கிராசனர், "தயவு செய்து 'அக்கிராசனரே! கனவான்களே!' என்று முறைப்படி திருத்திச் சொல்லவும்" என்று கேட்டுக் கொண்டார்.

"மன்னிக்கவும். நான் அக்கிராசனரையும் கனவான்களில் ஒருவராக நினைத்து விட்டது என்மேல் தப்புத்தான்!" என்றார்!

—ஆர். பாலாஜி.

★

கிடைப்பது கஷ்டம்!

ராமு:—இன்றைக்கு ஆபீஸில் ஒரே சகளை. எனக்கு மூளையே குழம்பிப் போய்விட்டது. கண்ணிலே பட்ட மேஜை, நாற்காலி எல்லாவற்றையும் எனக்கு வந்த கோபத்திலே தூள் தூளாக்கி விட்டேன்.



பெரியவர்:—உனக்குத்தான் தெரியுமே, இந்த சேவைன் காலத்தில் கட்டை கிடைப்பது கஷ்டமென்று! அந்தத் தூள்களையாவது கொடுத்தனுப்புவதுதானே!

—எஸ். ஜி. ராஜன்.

பெண்கள் நீடூழி வாழ்க!

நாடோடி

நான் சமீபத்தில் பங்களூர் சென்றிருந்த காலையில் என் நண்பர் ஒருவர் என்னை ஒரு வீட்டுக்கு அழைத்துச் சென்றார். "ஸார்! இந்த வீட்டுப் பெண்கள் எல்லோரும் தங்கள் கட்டுரைகள் மீது மகா மோகம் கொண்டவர்கள். தங்கள் கட்டுரையின் பிரதிகள் என்ன காணாமற் போயிருந்தாலும் சரி, இவர்களைக் கேட்டால் போதும். உடனே கட்டுரையை ஒப்புவிக்கத் தொடங்கி விடுவார்கள்" என்று கூறினார்.

இதைக் கேட்டதும் எனக்குண்டான சந்தோஷம் கொஞ்ச நஞ்சமல்ல. நான் கஷ்டப்பட்டுச் சேர்த்து வைத்திருந்த எத்தனையோ பழைய கட்டுரைகளை என் பதினொரு மாதப் பெண் அறு கிழித்தெறிந்து விட்டாள். ஆகவே அந்தக் கட்டுரைகளை இவர்களைக் கொண்டு ஒப்புவிக்கச் சொல்லி எழுதிக்கொண்டு வரலாம் என்று வீட்டுக்குள்ளே நுழைந்தேன்.

வீட்டு முன் ஹாலில் போடப்பட்டிருந்த சோபாக்களில் பஞ்ச கன்னிகைகள் உட்கார்ந்திருந்தனர். அவர்கள் ஐந்து பேரும் என்னைப் பார்த்ததும் நண்பரைப் பார்த்து, "யார்?" என்னும் கேள்வி தோன்ற முகத்தைச் சுளுக்கினார்கள். அந்த அபிநயத்தின் கருத்தை உடனே அறிந்து கொண்ட நண்பர், என்னைச் சுட்டிக் காட்டி, "நாடோடி" என்றார்.

இதைக் கேட்டதும் அந்தப் பஞ்ச கன்னிகைகள் அத்தனை பேரும் உள்ளே ஓடினார்கள். "ஆஹா! நம்பீது எத்தனை அன்பு! ஆளுக்கு ஒரு கப் காப்பி எடுத்துக் கொண்டு வரத்தான் போயிருக்கிறார்களோ?" என்று நினைத்து நான் சந்தோஷப் பட்டுக் கொண்டிருக்கையில் அவர்கள் ஐந்து பேரும் கழியும் கையுமாகத் தோற்ற மளித்தார்கள். இதற்கு மேலும் அவர்கள் என்ன பண்ணப் போகிறார்கள் என்று பார்ப்பதற்காகக் காத்திருக்காமல் நான் அங்கிருந்து ஓடோடியும் வெளியே வந்தேன்.

இடையில் நண்பரை விசாரித்த பிறகு தான் விஷயம் புரிந்தது. என் கட்டுரைகளைப் படிக்கும் பெண்கள் என்னைப் பற்றி வெகு தவறுதலான அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. எப்பொழுது பார்த்தாலும் அவர்களைப் பழிப்பதையே நான் வேலையாகக் கொண்டிருப்பதாக அவர்கள் நினைக்கிறார்கள்.

உண்மையில் ஸ்திரீகளைப் பற்றி எனக்கு இருக்கும் நல்லபிப்பிராயம் வேறு யாருக்கும் இருக்காது என்று கூறுவேன். சந்தேகமாய் இருந்தால் இந்தக் கட்டுரையைப் படித்துப் பாருங்கள்.

முதலில் கட்டுரையின் தலைப்பையே கவனியுங்கள். பெண்கள் நீடூழி வாழ்க! நான் பெண்களைப் பற்றிக் கொண்டிருக்கும் நல்லபிப்பிராயத்துக்கு இதை விட வேறு என்ன அத்தாட்சி வேண்டும், கேட்கிறேன்!

நான் பெண்களைப் பற்றி இத்தனை நல்லபிப்பிராயம் கொண்டதற்கு இதோ காரணம் கூறுகிறேன் கேளுங்கள்.

நம் நாட்டில் முன் காலத்தில், ஆளைப் பார்த்தாலே போதும், இன்ன உத்தியோகம், இன்ன சம்பளம், இன்ன அந்தஸ்து என்று உடனே சொல்லிவிடலாம். ஜரிகைக் குல்லா போட்டுக்கொண்டிருக்கிறாரா, ஜரீன்தார். ஜரிகைத் தலைப்பாகை கட்டிக் கொண்டிருக்கிறாரா, உத்தியோகஸ்தர், சாதாரண தலைப்பாகை கட்டிக்கொண்டிருக்கிறாரா, குமாஸ்தா, கிழிந்த சட்டை மாட்டிக் கொண்டிருக்கிறாரா, பள்ளிக்கூட உபாத்தியாயர் என்று சொல்லிவிடலாம். அவரவர்கள் உத்தியோகத்துக்கும் அந்தஸ்துக்கும் என்ன ஆடை என்று விதிக்கப்பட்டிருந்ததோ, அதைத்தான் எல்லாரும் உடுத்தி வந்தார்கள்.

ஆனால், வர வரக் காலம் கெட்டுப்போய் தற்சமயம் பணக்காரர்களுக்கும், ஏழைகளுக்கும் வித்தியாசமே தெரிவதில்லை. முப்பது ரூபாய் குமாஸ்தாவுக்கும், மூவாயிரம் ரூபாய் மானேஜருக்கும் வித்தியாசமே தெரிவதில்லை. முப்பது ரூபாய் குமாஸ்தா போட்டுக் கொண்டிருக்கும் உடையைத்தான் மூவாயிரம் ரூபாய் மானேஜரும் போட்டுக் கொண்டிருக்கிறார். இந்தக் காலத்தில் எல்லாருமே சூட்டும், டையும் போட்டுக் கொண்டிருப்பதால் யார் முப்பது ரூபாய் குமாஸ்தா, யார் மூவாயிரம் ரூபாய் மானேஜர் என்று கண்டுபிடிக்க முடிவதில்லை.

யாருக்கு என்ன சம்பளம் இருந்தால் என்ன, எதற்காக அதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்று கேட்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

இந்தக் காலத்தில், ஒரு யாரோடு ஒருவர் பழகுவதற்கு அவரவர்கள் சம்பளம் என்னவென்று தெரிய வேண்டியது மிகவும் அவசியமாக இருக்கிறது. யாருக்குச் சம்பளம் அதிகம் என்று தெரிந்தால்தான் யார் சொல்லும் வார்த்தைக்கு யார் 'ஆமாம்' போட வேண்டும் என்பது தெரியும். இன்னும் காப்பி ஹோட்டலுக்கோ, ஸினிமாக்கொட்டகைக் குள்ளோ நுழைந்தால் பில்லுக்குப் பணம் கொடுப்பதோ அல்லது டிக்கட்டுக்குப் பணம் கொடுப்பதோ யார் என்று தெரியும்.



"கமலி, அடுத்த வீட்டு அனந்தராமனை சீக்கிரமாகக் கூப்பிட்டுக்கொண்டு வாயேன். அவன் எனக்குத் தரவேண்டிய 10 ரூபாயைக் கேட்பதற்காகக் கூப்பிடுவதாக நீ நினைத்துக் கொள்ளப்போகிறாய்! அந்தப் பணமே வேண்டாம் என்று நான் சொன்னதாகச் சொல்லித் தேளை அடிப்பதற்காகக் கைத்தடியை எடுத்துக்கொண்டு ஓடி வரச் சொல்லு!"

—நந்தன்.

இதற்குப் பயந்துகொண்டோ, என்னமோ இந்தக் காலத்தில் யாரைப் பார்த்தாலும் ஒரே மாதிரிதான் உடை உடுத்துகிறார்கள், யாரைக் கண்டாலும் ஒரே சம்பளக்காரர்களைப் போல் தோன்றுகிறது.

சாதாரண சமயங்களில்தான் இப்படி என்றால் கல்யாண வீடுகளில் கேட்கவே வேண்டியதில்லை. யாரைக் கண்டாலும் ஸில்க் ஷர்ட்டும், விசிறி மடிப்பு ஜரிகை அங்கவஸ்திரமும் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். யாரோடு பேசினால் நமக்குக் கௌரவம், யாரோடு பேசினால் நமக்குக் கௌரவக் குறைச்சல் என்று தெரியவில்லை.

முன்னொரு சமயம், அதாவது நான் எம். ஏ. பாஸ் பண்ணிவிட்டு, வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருந்த சமயம் ஒரு கல்யாணத்துக்குப் போக நேர்ந்தது. அந்தக் கல்யாணத்துக்கு ஏதோ ஒரு கம்பெனியின் மானேஜர் வந்திருந்தார் என்று கேள்விப் பட்டேன். சரி, அந்த மானேஜரை வசப்படுத்தினால் வேலை கிடைத்துவிடும் என்று நினைத்து, "மானேஜர் யார்?" என்று விசாரித்தேன்.

"அதோ ஸில்க் ஷர்ட்டும், ஜரிகை அங்கவஸ்திரமும் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கிறாரே, அவர்தான் மானேஜர்" என்றார்கள்.

அவ்வளவுதான். அன்று முழுவதும் அவரைச் சுற்றியே வளைய, வளைய வந்து கொண்டிருந்தேன். அவர், 'இம்' என்று உதட்டை அசைக்கு முன், நான் 'உம்' மென்று காற்றாய்ப் பறந்து அவருக்கு வேண்டிய சிச்ருஷைகளை எல்லாம் செய்து வந்தேன்.

ஆனால் கடைசியில் எனக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தை என்னவென்று சொல்ல? அவர் மானேஜர் அல்லவென்றும், மாப்பிள்ளைக்கு வேண்டிய சமையற்காரனென்றும் தெரிந்தபோது எனக்கு ஆத்திரம், ஆத்திரமாக வந்தது.

நல்லவேளையாக, இத்தகைய ஆபத்துக் காலங்களில் நமக்கு உற்ற துணையாக விளங்குவது ஸ்திரீகள்தான். புருஷர்களைப் பார்க்காமல், அவர்களுடைய மனைவிகளைக் கவனித்தால் போதும், அவர்களுடைய புருஷர்களுக்கு என்ன சம்பளம், என்ன அந்தஸ்து என்று லகுவில் கண்டு பிடித்து விடலாம். இதனால்தான் "பெண்கள் நீடூழி வாழ்க" என்றேன். (அப்பா! ஒரு கட்டுரை எழுதி முடிப்பதற்குள் இந்தப் பெண்களை எத்தனை தடவை வாழ்த்தித் தொலைக்க வேண்டியிருக்கிறது!)

கல்யாண காலமாய் இருப்பதால் கல்யாணத்துக்கு வரும் ஸ்திரீகளையே எடுத்துக் கொள்வோம். இன்னும் கல்யாண காலங்களில் எல்லோரும் சற்றுத் தாராளமாய்ப் பழகுவதால் அவர்களைக் கவனிப்பதும் சற்று லகுவான காரியம்தான்.

புருஷனுக்குச் சம்பளம் உயர, உயர மனைவியின் கைகனம் உயர்வது என்று நம் நாட்டில் ஒரு நல்ல வழக்கம் இருக்கிறது. இன்னும் புடவையின் ஜரிகைக் கரையின் அகலமும் உயர்வது என்று ஒரு வழக்கம் இருக்கிறது.

அதோ கையில் ஒற்றை வளையுடனும், கழுத்தில் ஒற்றை வடச் சங்கிலியுடனும் காட்சி யளிக்கிறாரே ஒரு அம்மாள், அந்த அம்மாள் புருஷனுக்கு ஐம்பது ரூபாய்தான்

சம்பளம். சந்தேகமாய் இருந்தால் நீங்களே கேட்டுப் பாருங்கள்.

அதோ கையில் இரண்டு ஜோடி வளையலும், கழுத்தில் இரண்டு வட சங்கிலியும் அணிந்திருக்கிறாரே, அந்த அம்மாளின் புருஷனுக்கு என்ன சம்பளம் தெரியுமா?... தேவலையே! அதற்குள் இதன் சூட்சமத்தை அறிந்து கொண்டு சரியாகச் சொல்லி விட்டீரே! நீர் சொன்னதுபோல் நூறு ரூபாய் தான். சரி... எங்கே, அதோ வெள்ளி கூஜாவும் கையுமாக ஒரு அம்மாள் வருகிறாரே? அந்த அம்மாளின் கணவருக்கு என்ன சம்பளம் சொல்லுங்கள் பார்க்கலாம்......

என்ன விழிக்கிறீர்கள்? கையில் எத்தனை வளையல்கள் என்றும், கழுத்தில் எத்தனை வடம் சங்கிலிகள் என்றும் எண்ண முடியவில்லையோ? அதோடு, கை வளையல்களோடு, கண்ணாடி வளையல்களும் சேர்ந்திருப்பதால் பொன் வளையல்கள் எத்தனை என்று கண்டு பிடிப்பது கஷ்டம்தான்.

ஆகவே இந்த மாதிரி எக்கச்சக்கமான இடங்களில் வளையல்களைக் கவனிப்பதை விட்டு, பெண்கள் கட்டிக் கொண்டிருக்கும் புடவையைக் கவனிப்பது நலம். புடவை என்ன விலை என்று ஒரு உத்தேசமாக மதிப்புப் போடுங்கள். புடவை என்ன விலையோ, அதில் பாதிதான் அவர் கணவருக்குச் சம்பளம்.


நான் என்னமோ அவர்கள் எல்லாருக்கும் பாதகமாக இருப்பதுபோல் ஸ்திரீகள் நினைத்துக் கொள்கிறார்களே, இந்த இடத்தில் அவர்களுக்கு எவ்வளவு சௌகரியம் பண்ணியிருக்கிறேன் என்பதைக் கவனிக்கட்டும்! கல்யாண காலங்களில் கட்டிக் கொள்வதற்கு ஒவ்வொரு புருஷனும் தன் இரண்டு மாதச் சம்பளம் பெறுமானமுள்ள புடவை மனைவிக்கு வாங்கித் தரவேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். இதற்கு மேலும் ஸ்திரீகள் நான் அவர்களுக்கு விரோதமாக நடந்து கொள்வதாக எண்ண மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

நான் இதுவரை சொன்னது கல்யாண காலங்களுக்கே தவிர சாதாரணமாக, வீட்டில் கட்டிக்கொள்ளும் புடவைக்கு ஸ்திரீகள் இத்தனை பணம் செலவழிப்பதில்லை. அவர்களுக்குப் பயித்தியமா, என்ன, ஒரு புடவையில் புருஷனின் இரண்டு மாதச் சம்பளப் பணத்தைப் போடுவதற்கு? அவர்கள் வீட்டில் கட்டிக் கொள்ளும் ஒவ்வொரு புடவையும் ஒரு மாதச் சம்பளப் பணம் பெறுமானமுள்ளதாக இருக்குமே யொழிய, அதற்குமேல் ஒரு தம்பிடிகூட அதிகம் இருக்காது...

யார் அது பின்னாலிருந்து கட்டுரையைப் படிப்பது? சரசுவா?... என்ன, இரண்டு மாதச் சம்பளத்தில் ஒரு புடவையா? ரொம்ப அழகாக இருக்கிறதே! கட்டுரைக் கோசரம் நான் ஏதாவது எழுதப் போக, புடவை வாங்குவதற்கு இரண்டு மாதச் சம்பளத்தைக் கொண்டா என்று கேட்க வந்து விட்டாயே!

★ ★ ★

இது என்ன வார்த்தை



தமிழ் எழுத்தாளர்கள் அரசியலோ, கற்பனையோ, கவிதையோ எது எழுதினாலும் சரி, 'பேனா'வினால்தான் எழுதுகிறார்கள். அரக்கினால் செய்யப்பட்டு உலோக நுனியை உடைய எழுதும் கருவி ஆங்கிலத்தில் 'பென்' என வழங்குகிறது. ஆனால் லத்தீன் பாஷையில் 'பென்னா' என்றால் பறவையின் இறகு என்று அர்த்தம். இறகைப் பிய்த்துக் கூர்மையாக்கிச் சாயத்தில் தோய்த்து எழுதுவதால் அதற்குப் 'பென்' எனப் பெயர். அதிலிருந்து எந்த எழுதுகோலுக்கும் 'பென்' என்று பெயர் வந்தது.

"என் பேனாக்கத்தி எங்கே?" என்று கேட்கிறோம். பேனாவுக்கும் கத்திக்கும் என்ன சம்பந்தம்? பென்னா (இறகு) வைச் சீவுவதற்கு Knife (கத்தி) தேவையாயிருந்ததால் அதற்கு ஆங்கிலத்தில் 'பென்னைப்' எனப் பெயர். இதைத் தமிழில் 'பேனாக் கத்தி' என மொழிபெயர்த்திருக்கிறோம். உலோக நுனி கொண்ட கருவிக்குப் 'பேனா' (இறகு) என்ற பெயரைவிட 'எழுத்தாணி' என்ற பெயர் அதிகம் பொருந்தும். கூர்மையான ஆணியால் ஓலையின் மேல் கீறுவதற்குப் பதிலாக, மசியில் தோய்த்து எழுதுகிறோம். அவ்வளவுதானே வித்யாசம்?



மெடிகல் லைசென்ஷியேட்டுகள்

மானிடத் தன்மைக்கு

இந்த பெரிய உலக யுத்தம் முடிவை அடைந்து கொண்டிருக்கிறது. ஜப்பானை தோற்கடிப்பதில் விரைவாக அனேகருக்கு சேதங்கள் ஏற்படலாம். இந்த காயம்பட்ட மனிதர்களுக்கு வைத்தியர்கள் கொடுக்கக் கூடிய உபகாரம், பாதுகாப்பு, கருணை எல்லாம் தேவை. நூற்றுக் கணக்கான ஆர்மி டாக்டர்களுக்கு அவர்கள் காயமடைந்தவர்களுக்கு செய்யும் சேவையின் நிமித்தம், சமாதானகாலம் வந்ததும் மனித வர்க்கத்துக்கு உபயோகப்படக் கூடிய சாமர்த்திய அநுபவத்தை அடைகிறார்கள். இந்திய ஆர்மி மெடிகல் கோரில் சேவை செய்ய நீங்கள் முன் வரவேண்டும்.

யோக்கியதாம்சங்கள்

மிலிடரி வேலைக்கு தகுதி யுள்ளவர்களாயும், சாதாரணமாய் 45 வயதுக்குள்ளும் இருக்க வேண்டும். L. C. P. S., L. M. M. F., L. M. F. L. M. P. அல்லது இவைகளுக்கு சமமான பரீக்ஷை பாஸ் பண்ணியிருக்க வேண்டும்.

வேலையின் நிபந்தனைகள்

"A" சொல் சர்வீஸ். இது பொது வேலைக்கு ஏற்பாடு செய்த வைத்தியர் கடல் கடந்து சென்று சேவையின் அநுபவம் பெற சந்தர்ப்ப மளிக்கிறது. மிக சௌகர்யமான பிரமோஷன்கள். சம்பளம் 2வது லெப்டினென்டுக்கு ரூ. 400 லிருந்து லெப்டினென்டு கர்னலாக ரூ. 1350 வரை உயருகிறது.

"B" சொல் சர்வீஸ். இது இந்திய எல்லைகளுக்குள் வேலை செய்வதற்கு மட்டும். இதில் மிகவும் உயர்ந்த காப்டன். சம்பளம் 2வது லெப்டினென்டுக்கு ரூ. 250 லிருந்து காப்டனுக்கு ரூ. 550 வரை உயருகிறது.

அலவன்ஸுகள் (இரண்டு வகுப்புகளுக்கும்) கலியாணமில்லா சம்பளம் கலியாணமானவர்களுக்கு கொடுக்கப்படும் ஆபீஸருக்கு மாதம் ரூ. 100 அதிகப்படி சம்பளம் ஸ்டாப் அல்லது கமாண்டு சம்பளம் ஒரு குறிப்பிட்ட உத்தியோகங்களை வகிக்கும் ஆபீஸர்களுக்கு மாதம் ரூ 30 முதல் ரூ. 240 வரை அதிகப்படி சம்பளம் முஸ்தீப்பு சாமான அலவன்ஸ். முதலில் உத்தியோகத்தில் சேர்ந்ததும் ரூ. 733. சம்பள அட்வான்ஸ். முதலில் வேலையானதும் ரூ. 300 வரை கொடுக்கப்படும். கொடைப்படி. ஆர்மியிலிருந்து விடுதலையானதும் பூர்த்தியான ஒவ்வொரு வருஷ சேவைக்கும் ஒரு மாத சம்பளம் கொடுக்கப்படும். அங்க ஹீனம், குடும்ப விதவை பென்ஷன்கள், குழந்தைகள் சமரக்ஷணை, படிப்புகள் அலவன்ஸ்கள் பொதுவேதன விதிகளில் ஏற்படுத்தியிருப்பது போல் அளிக்கப்படும். பிரயாண செலவுகள், விடுமுறை சலுகைகள் மற்ற இந்திய தரைப்படை ஆபீஸர்களுக்கு உள்ளதுபோல்.


பூரா விவரங்களும் மாகாண வைத்திய இலாகா அதிகாரி (சர்ஜன் ஜெனரல் அல்லது சிவில் ஆஸ்பத்திரிகளின் இன்ஸ்பெக்டர் ஜெனரல்) அல்லது இந்திய மிலிடரி ஆஸ்பத்திரிகளின் கமாண்டிங் ஆபீஸர்கள், அல்லது மெடிகல் சர்வீஸ் டைரக்டர், ஜி. எச். க்யூ. டில்லி, அல்லது டைரக்டர் ஜெனரல், இந்திய மெடிகல் சர்வீஸ், நியூடில்லி இவர்களிடமிருந்து பெறலாம்.

Indian Army Medical Corps

AAA—18—TM

உன் பிரஷில் ரத்தம் கண்டால்


ஆபத்திற்கு அறிகுறி....



...பல் ஈறுகள் கெட்டுப்போகும் என்பதற்கு அதுதான் எச்சரிக்கை! கொடிய ஈறு உபாதைகளாகிய பையோரியாவோ அல்லது ஜிஞ்ஜிவிடிஸோ உங்கள் பற்களை நாசமாக்கி தேகாரோக்யத்தையும் பாழாக்கலாம். இந்த அபாயத்தைப் போக்க கிப்ஸ் "எஸ். ஆர்." டூத் பேஸ்ட் உபயோகியுங்கள்—அது ஈறு வியாதியைத் தடுக்கவும் கட்டுப்படுத்தவும் வல்லது. அதிலுள்ள சோடியம் ரெஸினோலியேட் ஈறு உபாதைகளைக் குணப்படுத்த பல வைத்தியர்கள் உபயோகிக்கிறார்கள். வழக்கமாக கிப்ஸ் "எஸ். ஆர்." உபயோகித்தால் அது உங்கள் ஈறுகளை ஆரோக்யமாகவும் பற்களை உறுதியாயும் வைத்திருக்கும்.

Gibbs

"S.R." TOOTHPASTE



GSR. 18-33 TM

D & W. GIBBS LTD., LONDON, ENGLAND



வலுவையும் நீடித்த சக்தியையும் பெறுங்கள்

இந்த ஆச்சர்ய மளிக்கும் டானிக் ஆகாரத்தினல்

வலுவிற்கும் சுகாதாரத்திற்கும் அத்தியாவசியமான, தேகத்தை வளர்க்கக் கூடிய ஒன்பது அரிய தாதுப் பொருள் களையும், அயோடின் ஆகாரத்தையும் கொடுக்கும் அதிசயமான டானிக் ஆகாரம் இது!

நல்ல சத்துள்ள ஆகாரத்தின் சேர்க்கை அபரிமிதமாயுள்ளது. ஒருவார காலத்தில் விக்கல்ப் 71 பவுண்டு இறைச்சிக்குச் சரிவான இரும்பு தாதுவையும், 73½ பவுண்டு ஆப்பிளுக்குச் சமமான பாஸ்பரத்தையும், 2½ பவுண்டு முட்டை கோஸுக்கு ஈடான சோடியத்தையும்—உங்களுக்கு அளிக்கிறது. மேலும் விக்கல்பில் அவசியமான, புஷ்டியளிக்கவல்ல ஒன்பது தாது உப்புக்கள் அடங்கி யுள்ளன என்பதை மறவாதீர்கள்.

இந்த அபூர்வமான தாதுப் பொருள்கள் தேகத்தில் சேரத் தொடங்கியதுமே, தேகம் வளரத் தொடங்குகிறது. களைப்பு நீங்கி புதிய சக்திக்கு இடமளிக்கிறது. பலஹீனம் நீங்கி வலுவேற்படுகிறது. புதிய சுகமும், நல்லுணர்ச்சிக்கும் ஆதாரம் ஏற்பட்டு—புதுமையாகி விடுவீர்கள்.

VIKELP

விக்கல்ப் தாது பில்லைகள்

Ad. No. 5435

இழந்த கண்ணொளியை மீண்டும் பெறுங்கள்

GET BACK



Lost

EYESIGHT

கண்படலம் மற்றும் இதர கண் வியாதிகளை ஆபரேஷன் இல்லாமலேயே குணப் படுத்துகிறது.

தீலிப் பானர்ஜி எம். பி., கண் வைத்தியர் — பாரிசால் 19—2—45

மெஸர்ஸ்: பி. ஸி. டிகேஜ் & கோ.,
237, நார்ன்பி ரோடு, த. பெ. நெ. 169
போர்ட், பம்பாய்.

அன்புள்ள ஐயா,


சில தினங்களுக்குமுன் இரண்டு பாக்கெட்டுகள் ஐடால் (இன்வாய்ஸ் நெ. E. 1185) வி. பி. மூலம் பெற்றுக் கொண்டேன். இம் மருந்தை எனது நோயாளிகள் இருவருக்கு உபயோகித்தேன்—திருப்திகரமான பலனையே அளித்திருக்கிறது. அன்பு கூர்ந்து கூடிய சீக்கிரம் வி. பி. பி. மூலம் ஒரு டஜன் "ஐடால்" அனுப்பிவைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

வந்தனங்கள்.

தங்கள் நன்றியுள்ள
(ஒப்பம்.) டி. கே. பானர்ஜி.

விலை ரூ. 3/12.
எல்லா கெமிஸ்டு களிடமும் அல்லது தபால் பெட்டி 169 பம்பாயிலும் கிடைக்கும்.


கல்கி



ALKI மே 20, 1945 4 அணா



உயர் ரகவாஸனை
எஸன்ஸ் வர்ணங்களும்
சோடா, சிரப், சமையல் பண்டங்கள் இவைகளுக்கு ஏற்ற உயர்ந்த பக்குவம் அளிப்பதற்கு எமது எஸன்ஸ், கலர்களுக்கு மிஞ்சியவை வேறெதுவுமே கிடையாது.
AROMATIC CHEMICALS
BLACK CAT BRAND
AROMATIC CHEMICALS AMINJIKARAI MADRAS
FAS/74



இருமல்
இருமலுக்கும் ஜலதோஷத்திற்கும்
உயர்ந்த மருந்து
ஸினோலின்

Regd No. M. 4392

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press,
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.